சித்திரை 2005 களம் 11 ஏர் 4


# கலப்பை

KALAPPAI 44 2.50





Gnanam Art Creations
Graphic Designers, Digital Printers & Artists
Printing of Business Cards, Letterheads, Brochures, Booklets etc..
Graphic Designs, Banners, Posters, Portraits & all type of Paintings..
Kolams, Stage Back Drops & Stage Settings for
Arangetrams & Cultural Functions..
Phone: (02) 9920 0508 / 0409 826 521
e-Mail: gnanamarts@optusnet.com.au
உங்கள் அனைத்து ஓவிய வேலைகளுக்கும், பிரிண்டிங் தேவைகளுக்கும்
ஞானம் ஆர்ட் கிரியேசன்ஸ்
ஓவியத்துறையில்
பலவருடகால அனுபவம்

Publishing & Printing
Mithra Arts & Creations
Our state of the art facilities and trained workforce enable us to consistently deliver a quality product.
Contact us:
32/9, Arcot Road, Kodambakkam,
Chennai - 600 024 India.
Ph : 91 44 23723182 / 24735314 / 9444357173
mithra_2005@eth.net / itheijo@hotmail.com
Contact in Australia:
Phone : (02) 9868 2567 / 0438 103 307
panura@bigpond.net.au

மனித மனத்தை உழுகின்ற

**கலப்பை**

உலகத் தமிழர்தம் உணர்வை
உயர்த்தி நிற்கும்

●

**கலப்பை**

அவுஸ்திரேலியப் பட்டதாரிகள்
தமிழர் சங்க ஆதரவில் வெளிவரும்
காலாண்டுச் சஞ்சிகை

●

தனிப்பிரதி : Aus. $2.50

ஆண்டுச் சந்தா
உள்நாடு : Aus. $10.00
வெளிநாடு : Aus. $20.00

●

பிரசுரிக்கப்படாத படைப்புகளைத்
திரும்பப் பெற இயலாது.

ஆசிரியர் குழுவுடன்
தொடர்புகொள்ள.....

**Tele : (02) 4737 9007**

●

**KALAPPAI**
P.O. Box 40,
Homebush South, NSW 2140
AUSTRALIA
E-mail : kalappai@yahoo.com

●

இதழ் வடிவமைப்பு
**மித்ர ஆர்ட்ஸ் & கிரியேசன்ஸ்**
சென்னை-24. ☎ 91-44-23723182

●

அட்டைப்பட ஓவியம்
ஞானம்

# உள்ளே...


| | |
|---|---|
| மெல்லத் தமிழினி வாழும் | 2 |
| இயற்கையின் சீற்றம் | 4 |
| தீபமங்கள ஜோதி | 5 |
| கற்காலத்து வாரிசுகள் | 18 |
| உங்கள் சிந்தனைக்கு ஒரு சிறுவிருந்து | 25 |
| மௌனகுரு | 26 |
| உயர்ந்தது பித்தளை தாழ்ந்தது தங்கம் | 30 |
| தமிழ் வாழ்த்து | 33 |
| உங்கள் சிந்தனைக்கு | 34 |
| சித்த மருத்துவம் | 36 |
| புகழ்பெற்ற ஈழத்துப் பாடசாலைகள் | 39 |
| நினைவலைகள் (சு.வி.யின் 4-வது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாடு) | 45 |
| அந்தக்காலத்து யாழ்ப்பாணம் | 55 |
| சிறுவர்களின் உரிமைகள் | 61 |
| இசையின் மகத்துவமும் மருத்துவமும் | 69 |
| உயிரெழுத்துகளின் ஒலி | 72 |

# கலப்பை மெல்லத் தமிழினி வாழும்...

புலம்பெயர்ந்து வாழும் நாடுகளில் வாழும் தமிழர்களினால் தமிழ்மொழிக்கு, கலாச்சாரத்துக்கு வளர்ச்சிப் பாதை அமைக்கப்படுகின்றது என்று பலரது வியப்பு சார்ந்த கருத்தாகும். நன்று.

இங்கு நாம் இத்தனை காலமாக எமது தனித்துவத்தை நிலைநாட்டுமுகமாக, பலதரப்பட்ட முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றோம். இதைப்பற்றிச் சொல்லிக்கொள்வதில் பெருமையும் கொள்கிறோம். எங்கு பார்த்தாலும் விழாக்களும், நிகழ்ச்சிகளுமாக, தமிழ்வாழ் சமூகம் நடைபோட்டுக் கொண்டிருக்கிறது. இதைப் பார்க்கும்போது மனதின் ஒரு மூலையில் மகிழ்ச்சி ஏற்படுவது இயற்கைதானே. "அடிக்கடி", "ஒவ்வொரு கிழமையும்", "நெடுகலும்", "தொடர்ந்து" என்று இந்த நிகழ்வுகளைப் பற்றிய விசனங்கள் மேற்கூறிய சொற்பிரயோகங்களினூடாக வெளிப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

கூர்ந்து நோக்குகின்றபோது இதில் ஓர் ஆரோக்கியமான விடயம் இருக்கத்தான் செய்கின்றது. இவ்வாறு தொடர்ந்து நிகழ்வுகள் நிகழுகின்றபோதும்கூட அங்கு பங்குபற்றுபவர்களில் பலர் இளைய சமுதாயத்துப் பிரதிநிதிகள்தான் என்பதையும் மறுக்க முடியாது. இந்த இளைஞர்கள் இவ்வாறு முன்னின்று இந்த நிகழ்வுகளில் தங்கள் திறமைகளைப் பிரதிபலிப்பதைத் தமிழ் அபிமானங்கொண்டவர்கள் பாராட்டாமல் இருக்கமாட்டார்கள்.

மொழியில் அக்கறை இல்லாமலா இளைய சமுதாயம் சில இடங்களில், சில நேரங்களில் "தமிழ்" அந்நியமாய்ப் போய் விடுகிறது. இதற்குக் காரணம் என்னவென்பதையும் நாம் சிறிது சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

நாம் சிறுவயதில் தமிழில் படித்தோம், தமிழில் பேசினோம் என்று இறுமாந்து கொள்கின்றோம். அதற்குக் காரணம் என்ன? எமது நாட்டில் தமிழில் பேசுவது தவிர்க்க முடியாத நிகழ்வு. அன்றாட மொழிவழக்கு தமிழாக இருந்தது. கட்டுப்பாடுகளின் காரணமாக நாம் தமிழ் கற்கவில்லை. அன்றாட உணவை உண்பது போன்ற ஒரு நிகழ்வு. இங்கு வாழும் இளைஞர்களுக்கு அது மருந்து உண்பது போன்ற நிகழ்வாக மாறியிருப்பதும் தவிர்க்கமுடியாத ஒன்று. கட்டாயமாகக் கருதுகின்றவரைக்கும், அதைக் கற்றுக்கொள்வதில் கவனம் இல்லாமல் போவது இயற்கையின் விதி.

புலம்பெயர்ந்த நாடுகளில் வாழும் இளைஞர்கள் எல்லோருக்கும் தமிழ் தெரியும். ஆம். இது உண்மையான விடயம். அதிகமான இளஞ்சிறார்களுக்கு மற்றவர்கள் தமிழில் உரையாடினால் விளங்குகின்றது. ஆனால் அவர்களால் தமிழில் தொடர்பாட முடிவதில்லை. இதற்குக் காரணம் யார் என்ற ஒரு கேள்வியை நாமே எமக்குக் கேட்டுத்தான் ஆக வேண்டும்.

வீட்டில் பெற்றோர்கள் குழந்தைகளுடன் தமிழில் கதைக்கின்றார்கள் என்பதை நாம் எல்லோரும் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். ஆனால் எத்தனை குழந்தைகள் தமிழில் பதிலளிக்கின்றார்கள் என்று யோசித்துப் பார்க்கும்போதுதான் நாம்தான் தவறு செய்துவிட்டோமா என்று எண்ணத் தோன்றுகிறது.

கற்பிப்பதே நோக்கமாக இருந்தால், மாணவனின் உள்ளக் கிடங்கில் எந்த ஓர் ஆசிரியரும் போதனையைப் புகுட்ட முடியாது. மாணவனின் மனநிலைபுரிந்து, அவனால் முடிந்த ஒரு செய்கையைக் கொண்டு, முடியாததைச் செய்வித்தலும் ஒரு கற்பித்தல்தான்.

ஆம். எமது இளஞ் சமுதாயம் விரும்புகின்ற முறையில், அவர்களின் எண்ண ஓட்டங்களுக்கு ஏற்றவகையில் எமது போதனைகள் மாறவேண்டும். புரிகின்றவகையில், ரசனை மிக்க முறையில் எம் முயற்சிகளை மாற்றவேண்டிய அவசியம் வந்துவிட்டது.

இங்குள்ள பல பெற்றோர்கள் இசை, கலைகளில் தமது பிள்ளைகளை ஈடுபடுத்தி, தம் குழந்தைகளுக்குத் தாய்மண் பண்பாட்டைக் கொடுத்துக் கொண்டிருப்பது கண்கூடான ஒன்று. எமது நோக்கங்கள் ஒன்றாகத்தான் இருக்கின்றது. யாருக்காக என்ற கேள்வியை எழுப்பவேண்டிய நிலை ஏற்பட்டிருக்கின்றது. புலம்பெயர்ந்து வாழும் தமிழ் இளைஞர்களிடையே உலகளாவிய ரீதியில் பல முயற்சிகள் ஓங்கிக் கொண்டிருக்கின்றன.

சில வாரங்களுக்கு முன்னால் இசைஞானி இளையராஜாவினால் மேற்கத்திய இசைப்பாணியில் வெளியிடப்பட்ட 'திருவாசகம்' என்ற இசைத்தட்டு இளைஞர்களுக்கு மாணிக்க வாசகர் அருளிய திருவாசகத் தொகுப்பில் ஓர் ஈடுபாட்டை ஏற்படுத்தும் ஒரு முயற்சியாகத்தான் தோன்றுகின்றது. இதுபோன்ற வடிவங்களில், இளைய சமுதாயத்தை முன்னெடுத்துச் செல்லக்கூடிய முயற்சிகள் வெளிவருவது பாராட்டத்தக்க, ஊக்கப்படுத்தப்பட வேண்டிய விடயங்களாகும்.

உழவன் உள்ளத்திலிருந்து....

# இயற்கையின் சீற்றம்

பல் வைத்திய கலாநிதி
பா. சோ. பாரதி

இயற்கை நீ சீற்றம் கொண்டால் இப்படியா – அம்மா
தயக்கம் ஏதும்இன்றித் தந்த பேரழிவும் என்னே!
(இயற்கை)

மயக்கும் உன் அழகைக்கண்டு மனதைப்பறி கொடுத்து நின்று
நயக்கும் எம் ஈழத்தவரை நடுங்கிட வைத்த தேனோ?
(இயற்கை)

இறைவனை உன்னிற்கண்டு இன்புற்றோர் எத்தனையோ
நிறைவோடுன் எழில்போற்றி வரைந்தவர் கணக்கிலையே
குறை உனக் கேதுவைத்தோம் முறையின்றி நடந்திட்டாயே
கறைபட்டு நின்றிடவா கடிதினிற் சுனாமி ஆனாய்
(இயற்கை)

சித்தத்தைச் சிவமாக்கும் திருமறை இசைக்கலையா?
புத்தரின் போதனையைக் கற்று மறந்தோமா?
கர்த்தரைச் செபம்பண்ணிக் கனஞ்செயா திருந்தோமா?
மொத்தமாய்க் குரான்தனைப் பத்தியாய் ஓதலையா?
(இயற்கை)

கரைதனில் நுரைபொங்க மணிசிந்தும் கடல் அலைகள்
காதலரை மகிழ்வித்துப் போதையேற்றும் மென் அலைகள்
விரைவினில் வேகமுற்று விஸ்வரூப சுனாமியாகி
தரைதனில் மனிதவேட்டை ஆடிநின்ற மாயமென்ன?
(இயற்கை)

ஆடிஆடி அலையுடனே பாடிநிற்கும் மீனவரைத்
தேடிவந்தே தென்திசைக்குப் பாடை கட்டி அழைத்த தேனோ?
ஓடி வந்த சுனாமி அன்று ஊர்க்கரையில் மீனைக்கொட்ட
நாடிமகிழ் வோடெடுக்கக் கூடிவந்தோர் மறைந்த தெங்கே?
(இயற்கை)

சாதிமத பேதத்திற்கே சாவுமணி அடிப்பதற்கா?
சண்டைசச் சரவின்றிச் சமாதானம் மலர்வதற்கா?
நீதி அறம் காத்து நாட்டை நேர்வழியில் நடத்திடவா?
நிலைக்கும் அத மத்தினையே அழித்திடவோர் பாடமிதா?
(இயற்கை)



# தீப மங்களா ஜோதி

## பகுதி-1

சாயிசசி

**சு**னாமி என்னும் ஜப்பானிய மொழிப் பெயரைக் கொண்ட கடற்பேரலை அல்லது கடற்கொந்தளிப்பு தெற்கு, தென்கிழக்கு ஆசிய நாடுகளில்தான் தன் சீற்றத்தைக் காட்டியதெனினும் அதன் பாதிப்பு உலக நாடுகள் அனைத்தையுமே ஒருசேர உலுக்கி விட்டது. இதைத்தான் சங்க இலக்கியம் கடற்கோள் என்றும், அதனால் முதற்சங்கம் அமைந்த இடமான கபாடபுரம் கடலினுள் அமுங்கியதென்றும் கூறுகின்றது போலும்.

இந்தச் சுனாமியின் தாக்கம் என்றுமில்லாதவாறு தீபாவின் அம்மா மங்களாவையும் அசைக்கத்தான் செய்தது. இல்லாவிட்டால் கோழி தன் குஞ்சுகளை இறக்கைக்குள் வைத்திருப்பதுபோல தீபாவையும் அவள் தம்பி காண்டீபனையும் தன் சேலைத் தலைப்புக்குள்ளேயே வைத்திருக்கும் மங்களா, அவளைச் சுனாமி நிவாரணப் பணிக்காக இலங்கை செல்ல அனுமதித்தது மிகப்பெரிய அதிசயம் தான்.

ஆனால் இந்தத் தடவை தீபாவுக்குத் தடை அவள் அம்மம்மா ஜோதீஸ்வரியிடமிருந்து வந்தது. மங்களாவுக்கும் அவள் அம்மா ஜோதீஸ்வரிக்கும் அவ்வளவாக ஒத்துப் போகாது. மங்களா எப்போதும் தன் தாயுடன் எடுத்ததற்கெல்லாம் வாதிட்டுக் கொண்டிருப்பாள். "பொதுவாக எல்லா வீடுகளிலும் மாமியார் மருமகள் பிரச்சனைதான் இருக்கும். ஆனால் இங்கேயென்றால் அம்மா மகள் பிரச்சனை" என, தீபாவின் தந்தை சிவசங்கரன் கேலி செய்வார்.

ஆனால் தாயும் மகளும் தமக்குள் தான் அடித்துக் கொள்வார்களே அல்லாமல் மற்றவர்களிடம் என்றும் ஒருவரை ஒருவர் விட்டுக் கொடுக்க மாட்டார்கள். ஒருவர் மேல் மற்றவர் கொண்டுள்ள அன்பும் அப்படித்தான். மங்களா சிறிது தலைவலி என்றாலும் ஜோதி எல்லாவற்றையும் இழுத்துப் போட்டுக்கொண்டு செய்வார். சிறுவயதில் தீபாவையும் அவள் தம்பி காண்டீபனையும்கூட மகளுக்குக் கிட்ட விடமாட்டார்.

தன்னுடனேயே வைத்து ஏதாவது கதை சொல்லிப்பராக்குக் காட்டு வார். அதனால் அவர்கள் சண்டையை யாருமே கண்டு கொள்வதில்லை. நேரம் கிடைத்தால் நின்று வேடிக்கை பார்ப்பார்கள்.

தீபாவுக்கு அம்மம்மாதான் எப்போதும் ஆதரவாக இருப்பார். அம்மாவிடமிருந்து பல தடவைகளில் அவளை அம்மம்மாதான் மீட்டிருக்கிறார். மங்களா சில சமயம் சொல்வாள் — "நான் என்ன பெத்து வளர்த்தாலும் உனக்கு அந்தச் சோதிதான் உசத்தி. அது சொன்னால் அப்படியே அடங்கிப் போவாய். என்னிடம் தான் எப்போதும் மல்லுக்கு நிற்பாய்" என்பாள்.

ஆனால் தீபா அவர்கள் இருவரிடமும் கண்டது அதீத அன்பு தான். அவளுக்கு இருவருமே ஒன்று தான். அம்மம்மா அந்த நாளில் ஒரு தமிழ்ப் பட்டதாரி என மங்களாவே தன் தாயைப் பற்றிப் பெருமைப்பட்டுக் கொள்வாள். அதனால் தீபாவின் சமய, தமிழ் வகுப்புப்பாடங்கள், அவற்றிலுள்ள சந்தேகங்களை எல்லாம் 'சோதிகிட்டப் போய்க்கேள்' என அனுப்பி வைப்பாள்.



தீபா "அதென்ன சோதி என்கிறீர்கள். அழகாக ஜோதி எனக் கூப்பிடலாமே" என்றால், "ஜோதி என்ன, ஊரில் எல்லோரும் சோதி என்றுதானே கூப்பிடுவார்கள். ஏன், பிறப்புச் சான்றிதழில் எப்படி இருக்கிறதென்று கேட்டுப்பார். நான் பாஸ்போர்ட்டுக்கு ஆங்கிலத்தில் ஜோதி என்று எழுதினதால் இங்கு பெரிய ஸ்டைலாக ஜோதி என்று சொல்லிக்கொண்டு திரிகிறார்" எனக் கேலி செய்வார். ஜோதி பேசாமல் சிரித்துக் கொண்டிருப்பதைப் பார்த்து, தீபாவும் சிரிப்பாள்.

தீபா அம்மம்மாவிடம் இருந்து தான் சம்பந்தர் ஞானப்பால் உண்டது, சுந்தரைத் தடுத்தாட் கொண்டது போன்ற நாயன்மார் கதைகளைச் சிறுவயதிலும், இப்பொழுதெல்லாம் திருக்குறள் விளக்கம், கோவிற்கிரியைகளுக்கான காரணங்கள் போன்றவற்றையும் கேட்டுத் தெரிந்துகொண்டிருக்கிறாள். எதையும் ஆறுதலாகவும் தெளிவாகவும் விளக்குவதில் அம்மம்மாவுக்கு ஈடு அவர்தான் என தீபா சொல்வாள்.

"உனக்குத் தெரியுமா தீபு, திருவள்ளுவர் திருக்குறளில் கையாளாத விசயமே இல்லை. அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் எனப்பிரித்து, கடவுள் வாழ்த்து, மனிததர்மம், அரசியல் முகாமைத்துவம், அலுவலக நிர்வாகம் என்று எல்லாவற்றையும் பற்றி மிக அழகாகச் சொல்லியிருக்கிறார். உதாரணமாக 'இதனை இதனால் இவன் முடிக்கும் என்றாய்ந்து அதனை அவன் கண் விடல்' *(517)* என்ற குறள் மூலம், தகுதியுள்ள ஒருவரிடம் ஒரு வேலையை ஒப்படைத்தால் தான் அது சிறப்பாக நடைபெறும்

என மிக அழகாகக் கூறியிருக்கிறார்" என்று சொல்லித் திருக்குறளின் ஆங்கில மொழிபெயர்ப்புப் புத்தகம் ஒன்றையும் அவளுக்குப் பரிசாகக் கொடுத்தார்.

அண்மையில் தீபா கோவில் கிரியைகளுக்கான விளக்கம் கேட்ட போது "அவை ஒவ்வொன்றும் மனிதனை இறைவனுடன் இணைக்கும் வழிகள்" எனக் கூறியவர், "உதாரணமாக, கோவில்களில் தூபதீபம் காட்டுவதற்கான காரணம் என்ன தெரியுமா? எண்ணெய் — திரி தீபம் ஆன்மா இறைவனை அணுகி ஞானநிலை பெறுவதை உணர்த்தும். பூஜையில் இறுதியாகக் காட்டப்படும் கற்பூர ஆரத்திதான் மிகவும் விசேஷமானது. அதாவது, கற்பூரம் ஏற்றியதும் எரிந்து காற்றில் இரண்டறக் கலப்பதுபோல ஆன்மா இறைவனுடன் இரண்டறக் கலந்து பிறவாப் பேரின்பப் பேற்றை அடைவதைக் குறிப்பதாகும்" எனத் தன்னிடமிருந்த "சைவத் திருக்கோவிற் கிரியை நெறி" என்ற புத்தகத்தில் பார்த்துச் சொன்னார்.

"ஆனால் இப்பொழுது இந்தியாவில்கூடப் பல கோவில்களில் கற்பூரஆரத்தியே காட்டுவதில்லையே, அது சரியா அம்மம்மா?" என அவள் கேட்டபோது "ஆமாம்; கற்பூரத்தின் புகை எல்லா இடத்தையும் கறுக்கச்செய்து அழகைக் கெடுக்கிறது எனக் காரணம் காட்டி வேதாகமங்களில் சொல்லப்பட்ட முறைகளையும் அவரவர் வசதிக்காகக் கோவில் தர்மகர்த்தாக்கள் மாற்றி அமைக்கின்றார்கள். சில இடங்களில் மெழுகுவர்த்தித் தீபம் காட்டுகின்றார்கள். ஆனால் எதுவும் கற்பூரஆரத்திக்கு ஈடாகாது, அதைப்பார்க்கும்போது மனத்தில் ஓர் ஆனந்தம், மகிழ்ச்சி. என்ன செய்வது, இந்த நாகரீக உலகில் நாமும் கிடைப்பதை ஏற்றுக் கொள்ளவேண்டியது தான்" எனக் குறைப்பட்டுக் கொண்டார்.

இப்படி அவளுக்கு எல்லாவற்றுக்கும் அனுசரணையாக இருக்கும் அம்மம்மா ஏன் இலங்கை போவதை — அதுவும் சேவை செய்யப் போவதைத் தடுக்கிறார் என்பது தீபாவுக்குப் புரியாத புதிராக இருந்தது. அவரிடமே காரணம் கேட்போம். அம்மா இல்லாத நேரத்தில் கேட்கவேண்டும். மங்களாவும் நின்றால் இருவரும் ஏட்டிக்குப் போட்டியாக வாதிடுவதில்தான் நேரம் போகும், ஒரு முடிவும் கிடைக்காது என நினைத்தவள் அன்று மாலை அலுவலகத்திலிருந்து சிறிது முன்னரே வந்துவிட்டாள்.

அவள் கேட்டதற்கு, "அங்கே உனக்குப் பழக்கமில்லை கண்ணம்மா. நீ குழந்தையாக இருந்த போதே உன்னைத் தூக்கிக் கொண்டு உன் பெற்றோர் இங்கே வந்துவிட்டார்கள். கொழும்பென்றாலும் பரவாயில்லை. முல்லைத்தீவு போன்ற வன்னிப்பகுதியில் சாதாரண நாட்களிலேயே நுளம்புத் தொல்லை அதிகம். இப்போ இன்னும் அதிகமாக இருக்கும். தண்ணீர்ப்பிரச்சனை இருக்கும். உங்கம்மா சுட வைத்து ஆறின தண்ணீர் தந்து உங்களை வளர்த்தவள். அங்கே வன்னிப் பகுதியில் ஒருவிதமான கனத்த தண்ணீர் இருக்கும். பழக்கமில்லாதவர்கள் அதைக் குடித்தால் சிறுநீர் சம்பந்தமான வருத்தங்கள் வர வாய்ப்பு இருக்கிறது. இப்ப அதுவும் இந்த நேரத்தில் உன்னை அங்கு போக எப்படி அனுமதித்தாளோ தெரியாது. பாவம், அவளது இரக்க சுபாவம், அங்கு நடந்ததைக்

கேட்டுக் கலங்கிப் போய்விட் டாள். அதுதான் உன்னைப்பற்றி யோசிக்காமல் சம்மதித்து விட் டாள்" என மகளைப் பற்றிப் பெரு மையாகக் கூறியவர், "உனக்கு அங்கே ஏதாவது வருத்தம், துன்பம் வந்தால் பிறகு என் பெண்தானே பாவம் கஷ்டப்படுவாள்" என்றார்.

தீபாவுக்கு முணுக்கென்று கோபம் வந்தது. "நீங்கள் இரு வரும் சண்டை போடுவது வெறும் வேஷம் அம்மம்மா" எனக் கத்தி னாள்.

சிரித்தவர், "சண்டை போட் டால் அம்மா பெண் என்பது இல்லையென்றாகி விடுமா? அவள் யாரிடம் கோபிக்கின்றாள், என்னி டம்தானே. நீயும் வருங்காலத்தில் உன் அம்மாவுடன் அப்படித்தான் இருப்பாய். இதெல்லாம் செல்லச் சண்டைகள் தீபு. எதையும் பெரி தாக எடுக்காதே. அவள் எனக்கு இப்போதும் குழந்தை. அவளுக்கு நான் அம்மா. போகப்போக உனக்கும் இது புரியும்" என்றார்.

அதைக் கேட்டு வியந்த தீபா, இவரைத் தந்திரமாகத்தான் கையாள வேண்டுமென நினைத்து "நாங்கள் எல்லாம் தடுப்பூசி போட்டுக் கொண்டுதான் போகி றோம் அம்மம்மா. தண்ணீர் சுத்தி கரிப்பதற்கு மருந்திருக்கின்றது. அதெல்லாம் நாங்கள் கொண்டு போகிறோம். நான் கவனமாக இருப்பேன் அம்மம்மா. அப்படி ஏதாவது கஷ்டமென்றால் உடனே வந்துவிடுவேன், ப்ளீஸ்" எனத் தாஜா பண்ணி ஒரு மாதிரி அனுமதி பெற்றுவிட்டாள். ஏனென் றால் அவளுக்கு அம்மம்மாவின் அனுமதியும் வேண்டியிருந்தது.

'எல்லோரையும் அனுசரித்துப் போகவேண்டும், எப்பொழுதும் அனைவருக்கும் உதவி செய்ய வேண்டும், யார் மனத்தையும் துன்பப்படுத்தக்கூடாது' என்று மங்களா சிறுவயதிலேயே பழக்கி யிருந்ததால் அம்மம்மாவின் மனம் நிறைந்த ஆசி இல்லாமல் போவ தற்கு, தீபா தயங்கினாள். பெண் களின் அனுமதி கிடைத்தால் தீபாவின் அப்பா சிவசங்கரனிடம் ஒரு பிரச்சனையும் இருக்காது. அவர் "உனது அலுவலகத்தில் லீவு கிடைக்குமா? அங்கே முக்கிய மான வேலைகள் எல்லாம் முடித்து விட்டாயா?" என்றுதான் கேட் பார். அதனால், தீபா போவது உறுதியானவுடன் அவளுக்கு மட் டில்லா மகிழ்ச்சி. வேண்டிய ஏற்பாடுகளைச் செய்தாள்.

குறித்த நாளில் நிவாரணப் பணிக்குழு புறப்பட்டது. கொழும் பில் ஒருநாள் நின்றுவிட்டு அங் குள்ள நிவாரணப்பணிக்குழு வினரால் ஒழுங்கு செய்யப்பட்ட வாகனத்தில் அனைவரும் முல் லைத்தீவை நோக்கிப் பயண மாயினர். அக்குழுவில் பலர் இப் பொழுதுதான் முதல்முதலாக இலங்கை செல்கின்றார்கள்.

தீபாவும் குழந்தையாக ஆஸ்தி ரேலியா வந்தபின் இப்பொழுது தான் தாய்மண்ணில் கால் பதித் திருக்கிறாள். அவர்களில் ஒரு சிலர் மிக அண்மையில் ஆஸ்திரேலியா வுக்குப் புலம்பெயர்ந்தவர்கள். அவர்களுக்குப் போகும் பாதை யிலுள்ள இடங்கள், கிராமங்களின் பெயர்கள் எல்லாம் தெரிந்தி ருந்தது. அந்த இடங்களைப் பற்றித் தமக்குத் தெரிந்ததையும், தாம் படித்தவற்றையும் கூறிக்கொண்டு சென்றனர்.

முருகண்டி பிள்ளையார் கோவில் அருகில் வாகனத்தை

நிறுத்தி 'எல்லோரும் இறங்கி கோவிலைத் தரிசிக்கவும்' என்றபோது எதுவோ பெரிய கோவிலாக்கும் என இறங்கியவர்கள் அரச மரத்தைச் சுற்றி ஓலையால் வேய்ந்த அந்தச் சிறுகுடிலையும், அங்கே பிள்ளையாரையும் கண்டு வியந்தனர்.

'பிள்ளையாரை வணங்காமல் இந்த இடத்தைத் தாண்ட முடியாது. பிள்ளையார் விடமாட்டார்' என அவர்களுடன் சென்ற கணேஷ் என்ற பையன் சொன்னான். தீபாவும் கவனித்தாள். இரண்டு பக்கங்களிலிருந்தும் வரும் எல்லா வாகனங்களும் நின்று எல்லோரும் இறங்கி, பிள்ளையாரை வணங்கிக் காணிக்கை செலுத்தித்தான் சென்றனர்.

அங்கிருந்து கிளிநொச்சி போய் அரசுஅலுவலகத்தில் தமது வரவைப் பதிவு செய்தபின் மாங்குளம் வழியாக முல்லைத்தீவு செல்லும் பாதையில் ஆங்காங்கே வீதியோரமுள்ள காடுகளுக்குள் மான்கள் துள்ளி விளையாடுவதையும், மயில்கள் தோகை விரித்து ஆடுவதையும் கண்டு மகிழ்ந்தனர். பாதையோரத்தில் யானை செல்வதைக் கவனித்த வாகனஓட்டுனர் "சத்தம் போட வேண்டாம், எல்லாம் பிள்ளையார் காப்பாற்றுவார்" எனச் சொல்லி வாகனத்தை மெதுவாக ஓட்டிச்சென்றார். அந்தநேரம் தீபா பயந்துதான் போனாள். இதனால்தான் அம்மம்மா போகவேண்டாம் என்று சொன்னாரா என நினைத்தாள். அதைவிட இன்னும் பல கஷ்டங்களைச் சந்திக்க நேருமென்பதை அவள் அப்போது உணரவில்லை.

சுனாமியின் தாக்கம் நடந்த இடத்திற்குப் போய் அங்குள்ள மக்களைப் பார்த்தபோது அவர்கள் கண்களில் இரத்தமே கசிந்தது. இவர்கள் மீண்டெழ வழியுமுண்டா என அனைவரும் மனம் மிக வருந்தினர். ஆனால் அங்குள்ள மக்களோ தமது கஷ்டங்களையும், உயிர், பொருள் இழப்புக்களையும் பொருட்படுத்தாது, தமது துயர் துடைக்கப் பல கரங்கள் உலகெங்கும் இருக்கின்றன என்பதைப் பார்த்து மட்டற்ற மகிழ்ச்சி அடைந்தனர்.

வெளிநாட்டிலிருந்து வந்த பிள்ளைகள் வசதியாக இருக்க வேண்டுமெனத் தம்மால் முடிந்த அளவு நல்ல இருப்பிட வசதிகள் அமைத்துக் கொடுப்பதில் முனைந்தனர். அதுமட்டுமா! தமிழர்களின் விருந்தோம்பல் பண்பையும் தீபா அங்கு கண்டாள். கடல் கொண்டு போனால் என்ன, இருப்பவற்றில் சிறந்ததான மாம்பழம், பலாப்பழம், காட்டில் கிடைக்கும் பாலைப்பழம் போன்றவற்றை அவர்களுக்குக் கொண்டு வந்து கொடுத்தனர். இதையெல்லாம் பார்க்கும்போது இவர்கள் வாழ்வு சீரடைய எம்மால் முடிந்ததை நாம் செய்யவேண்டுமென்ற ஒரு திடமான எண்ணமும், ஆர்வமும் அவர்களுக்குள் உதயமானது.

குழந்தைகள், முதியோர்களுக்கு உணவு, உடைகளைப் பகிர்ந்தளிக்கும்போது அவர்கள் கண்களில் நீர்மல்க "வற்றாப் பழை அம்பாளாச்சி உங்களை ஒரு குறையுமில்லாமல் காப்பாத்தட்டும்" என மனம் நிறைந்து ஆசீர்வதிக்கும்போது அவர்கள் நெகிழ்ந்து போயினர். அவளுடன் சென்றவர்களில் கணேஷ் ஓடி ஓடி ஏதாவது செய்து கொண்டிருப்பதைப் பார்த்து தீபா வியந்தாள். அவனிடம் "சாப்பிடாமல் இப்படி

உழைக்கின்றீர்களே கணேஷ்!" எனக் கேட்டதற்கு "இப்படி ஒரு நிலை சில வருடங்களுக்குமுன் இந்திய அமைதிப் படையினர் வட பகுதியை ஆக்கிரமித்தபோது எங்களுக்கும் ஏற்பட்டது தீபா. எதுவுமே இல்லாமல், ஏதாவது கிடைக்குமா எனக் காத்திருப்பது மிகவும் கொடூரம். அதுதான் என்னால் முடிந்தளவு அவர்களுக்கு உதவப் பார்க்கிறேன்" எனக் கூறினான்.

அங்குள்ள கிராமத்துப் பெரியவர்களும், அரசு அதிகாரிகளும் இவர்களின் தன்னலமற்ற தொண்டைப் பாராட்டினர். 'வந்த பிள்ளைகள் எங்கள் அழகிய நாட்டைப் பார்க்காமல் போகக்கூடாது, எங்கள் கஷ்டம் எங்களுடன் இருக்கட்டும், நீங்கள் இவ்வளவும் செய்ததே மலையத்தனை தெம்பை எங்களுக்குக் கொடுத்திருக்கிறது. நீங்கள் போய் இடங்களைப் பார்த்துவிட்டு வரவும்' என வாகன ஒழுங்கு செய்து அனுபவம் மிக்க ஒரு துணையுடன் அனுப்பி வைத்தனர்.

அவர்கள் சிகிரியா ஓவியங்களையும் தம்புல்ல குகையின்

## புதுக்குறள்

1. அன்புக் கனிநுகர்ந்து ஆனந்தமாய் மக்கள்
   இன்புற்று வாழ்வதே நாடு

2. இரப்போரும் ஈவோரும் இல்லாமற் செல்வம்
   சுரக்கின்ற நாடே சுகம்

3. ஊர்கள் நகரங்கள் ஒன்றாய்த் தழுவதற்கு
   நேர்வழிகள் கொண்டதே நாடு.

4. கல்வி விவசாயம் கைத்தொழிற் பண்டங்கள்
   செல்வம் கொழிப்பதே நாடு

5. நீர்ப்பா சனமும் நிறைந்த விளைபொருளும்
   ஏர்த்தொழிலும் நாட்டுக் கினிது.

சாமி சிதம்பரனாரின் புதுக்குறள் என்ற
நூலின் நாடு என்னும் அதிகாரத்திலிருந்து
சில பகுதிகள் இங்கே தரப்பட்டுள்ளன.

சிற்பங்களையும், அநுராதபுரத்தில் வெள்ளரசு மரத்தின் வனப்பையும், புத்தவிகாரங்களையும், ஆயிரங் கால் மண்டபத்தையும், சரித்திர காலத்தில் அங்கே அமைக்கப்பட்டு இன்றும் பயன்படும் அங்குள்ள நீர்ப்பாசன வாவிகளின் பரும னையும் பார்த்து அதிசயித்தனர். பொலன்னறுவைப் புனித நகருள் இருந்த சிவதேவாலயத்தையும் ஆங்காங்கே இருந்த சிவா விஷ்ணு சிற்பங்களையும் பார்த்து, ஒரு காலத்தில் சோழப்பேரரசு இலங்கை வரை வியாபித்திருந்தது என அறிந்து வியந்தனர்.

பராக்கிரமபாகு சமுத்திரம் என அழைக்கப்படும் அந்தப் பெரிய வாவியைப் பார்த்து அவர்கள் வியந்தபோது 'மழைநீரின் ஒரு சிறுதுளியேனும் மனிதத் தேவைக் குப் பயன்படுமுன் கடலில் கலத்த லாகாது' என்ற மஹாபராக்கிரம பாகுவின் உன்னத நோக்கையும், பதினோராம் நூற்றாண்டில் பராக்கிரமபாகுவின் ஆட்சிக் காலத்தில் இலங்கையிலிருந்து அரிசி ஏற்றுமதி செய்யப்பட்டது என்றும் பெருமையாகக் கூறினார். அங்கிருந்து மலைப்பகுதிக்குச் சென்றவர்கள் பேராதனைப் பல் கலைக்கழகத்தின் விஸ்தீரணத் தையும் குறிஞ்சிக் குமரனின் அழ கையும் பேராதனைப் பூங்காவை யும் பார்த்து மலைத்தனர்.

சுற்றுலாவின்போதே கணேஷ் ஒரு மாதிரிச் சோம்பலாக இருந் தான். திரும்பி வந்தபின் அவனுக் குக் காய்ச்சல் பிடித்துக் கொண் டது. அவன் காய்ச்சலில் நடுங்கி யதைப் பார்த்து தீபா பயந்து போனாள். மலேரியாவினால் தான் சரித்திரகாலத்தில் இலங் கையின் இராசதானிகள் தென் மேற்குப் பக்கமாகச் சிறிது சிறி தாகப் பெயர்ந்து கொழும்பை அடைந்தன என அவளது அம்மம்மா சொல்லியிருக்கிறார்.

கணேஷின் நிலையைப் பார்த்த அங்குள்ள மக்கள், வந்த இடத்தில் இந்தப் பிள்ளைக்கு இப்படி ஆகி விட்டதே என அங்கலாய்த்தனர். அங்குள்ள முதியவர்கள் தம்மா லான கைவைத்தியம் செய்து அவனைக் காப்பாற்ற முனைந் தனர். வேப்பம்பட்டைச்சாறு, மூலிகைக் குடிநீர் என மாறி மாறிக் கொடுத்து அவனது காய்ச்சலைக் குறையச் செய்தவர்கள் "நீ செய்த மட்டும் காணும் தம்பி. ஊருக்கு உன் பெற்றோரிடம் போய்ச் சுக மாக இரு" எனக் கூறி அவனைக் கொழும்புக்கு அனுப்பினர்.

அவனுடன் யார் துணையாகப் போவது எனக் குழுவினர் யோசித்தபோது தீபா, தானே முன்வந்தாள். நோயாளியான கணேஷைத் தனியே அனுப்ப அவள் விரும்பவில்லை. அவனிடம் அவளுக்குத் தனியான ஓர் அன்பும் மதிப்பும் அந்தச் சில நாட்களில் ஏற்பட்டிருந்தது. அத்துடன், அதிக நாள் நின்றால் அம்மம்மா பயந் தது போலத் தனக்கும் ஏதாவது வரலாம் எனப் பயந்தாள்.

இருவரும் கொழும்பு சென்று அங்கிருந்து சிங்கப்பூர் வழியாக சிட்னியை வந்தடைந்தனர். அந்தப் பிரயாணத்தில் அவர்கள் அன்பும் நட்பும் மேலும் வளர்ந்ததெனின் மிகையாகாது. தீபா திட்டமிட்ட நாளுக்கு முதல் வந்தது குறித்து அவள் வீட்டில் அனைவருக்கும் மகிழ்ச்சி. அதுவும் உடல் நலத் துடன் வந்ததைப் பார்த்து ஜோதி, "எல்லாம் வற்றாப்பழை அம்பா ளாச்சிதான் காப்பாற்றி அனுப்பி யிருக்கிறார்" என்றார்.

"உங்களுக்கு வற்றாப்பழை தெரியுமா அம்மம்மா? அங்கு போயிருக்கின்றீர்களா?" எனக் கேட்டாள்.

"தெரியாமல் என்ன. கடற்கரை ஓரத்தில் அழகிய சிறிய கோவில். அங்கே குறித்த நாளில் கடலிலிருந்து எடுத்து வரப்படும் நீரில் தான் வருடம் முழுவதும் விளக்குகள் எரிக்கின்றார்களாம்" எனக் கூறினார்.

"ஆமாம் நாங்களும் அடிக்கடி அந்தக் கோவிலுக்குப் போயிருக்கிறோம், எங்கள் நிவாரண முகாம் அதற்கு அண்மையில்தான இருந்தது" எனத் தீபா சொன்னாள்.

தீபா — கணேஷ் சந்திப்பு அடிக்கடி நடந்தது. சில சமயம் அவளை வீட்டில் வந்து சந்தித்தான். சிலவேளைகளில் அலுவலகம் முடிந்த பின்னரும் மீதி நேரங்களில் மின்அஞ்சல் பரிமாற்றங்களும் நடந்தன. தீபாவுக்கு கணேஷின் பெற்றோரை மதிக்கும் பண்பு, அவர்களிடம் அவன் காட்டும் கவனம், சேவை மனப்பான்மை யாவும் நன்குப் பிடித்திருந்தது.

ஆரம்பத்தில் அவனது உடல் நலம் விசாரிக்க ஏற்பட்ட இ—மெயில் பரிமாற்றங்கள் இப்பொழுது காதல் கடிதங்களாகப் பரிமாறப்பட்டன. எதையும் மறைத்துப் பழக்கமில்லாத தீபா சில புதினங்களை வீட்டில் பரிமாறும் போது பல தடவைகள் அதை கணேஷ் சொன்னார் எனக் கூறுவதை ஜோதி கவனிக்கத் தவறவில்லை. இது வெறும் நட்பல்ல, அதற்கும் மேலான ஒன்று என்பதை ஊர்ஜிதம் செய்து கொண்டார்.

அன்று இருவரும் கோவிலுக்குச் சென்றனர். எதுவோ விசேஷ தினம் போலும். அங்கே அன்னதானம் கொடுக்கப்பட்டது. முன்னரென்றால் எதையும் சிந்திக்காது கோவில் சாப்பாடு எனப் பேசாமல் வாங்கிச் சாப்பிடும் தீபா, இன்று "இது இங்கே தேவையா அம்மம்மா. இங்குள்ளவர்களுக்குச் சாப்பாட்டுக்குப் பஞ்சமா?" எனக் கேட்டாள்.

"அன்னதானம் என்பது இல்லாதவர்களுக்கு உணவளிப்பது என்பதில்லை தீபா. அதற்குள் மனித மேம்பாட்டுக்கான எவ்வளவோ அர்த்தங்கள் புதைந்துள்ளன. தானதர்மம் என்று ஆகமங்கள் கூறுகின்றன. தானம் என்பது தனக்குச்சமமானவர்க்கு, தன்னை விட வசதி மிக்கவர்களுக்குக் கொடுப்பது. தருமம்தான் வசதியற்றவர்களுக்கு உதவுவது.

இல்லாதவர்களுக்குத் தருமம் செய்யும்போது எம்மிடமிருக்கிறது; நாம் உதவி செய்கிறோம் என்ற ஒரு கர்வம் தலைகாட்டும். ஆனால் அன்னதானம் என்பது அப்படி இல்லை தீபா. அன்னதானத்தை மகேஸ்வரபூஜை என்று சொல்வார்கள். இது இறைவனுக்குச் செய்யும் ஒரு சேவை எனலாம். தான் என்ற கர்வம் அடங்கி, எல்லோரும் சரிசமமாக, இருப்பவர், இல்லாதவர் என்ற பேதமில்லாமல் ஒன்றாக இருந்து உண்பது.

இங்கே பார் இந்த வெயிலில் எல்லோரும் வரிசையில் நிற்பதை. இவர்களுக்கெல்லாம் வீட்டில் சாப்பாடு இல்லையா? கோவில் சாப்பாட்டில் ஒரு புனிதம் இருக்கும், கொடுப்பவர்க்கும் உண்பவர்க்கும் இறைஅருள் கிட்டுமென்ற ஒரு நம்பிக்கை காலம் காலமாக இருந்து வருகின்றது.

இது பசிக்கு உணவென்பதைவிட இறைவனின் பிரசாதம் என்றே கூறலாம். அதனால்தான் விருந் தென்று கூறாமல் அன்னதானம் என்கிறோம். இலங்கை, இந்தியா போன்ற இடங்களில் கிராமங்களில் சிலர் பல வீடுகளில் போய்ச் சிறிது சிறிதாக அரிசி சேர்த்துக் கோவி லில் கொண்டுபோய் அன்ன தானம் கொடுப்பார்கள். இது ஒரு வகைப் பிரார்த்தனை.

அதேபோலச் சில கிரக தோஷங்கள், நோய்கள், குடும்பக் கஷ்டங்கள் போன்றன தீர்வ தற்குச் சோதிடர்கள் கோவிலில் அன்னதானம் கொடுக்கச் சொல் வார்கள். இது, அடுத்தவரிடம் எந்தப் பலனும் எதிர்பார்க்காமல் இறைஅருள் வேண்டிக் கொடுக்கப் படுவது. தேவைப்பட்டவர்களுக்கு உதவுவதும் இதுவும் வேறுபட்டது" என்றார்.



"மேலும் எல்லா தானங்களி லும் அன்னதானமே சிறந்த தென்று பகவத்கீதை சொல்கிறது. அத்துடன் காஞ்சி காமகோடி சந்திரசேகர சரஸ்வதி சுவாமிகள் "அன்னதானத்துக்கு என்ன விசே ஷம் என்றால், இதிலே தான் ஒருத் தரைப் பூரணமாகத் திருப்திப் படுத்தமுடியும். பணம், உடை, நகை, வீடு போன்றவற்றை எவ் வளவு கொடுத்தாலும் வாங்கிக் கொள்கிறவன் அதற்கு மேல் தந் தாலும் வேண்டாம் என்று சொல்லமாட்டான். அன்னம் போடுகிறபோதுதான் ஒருத்தன் என்னதான் முட்டமுட்டச் சாப் பிட்டாலும் ஓர் அளவுக்கு மேல் சாப்பிடமுடியாது. 'திருப்தோஸ்மி' போதும் என்று சொல்கிறான். அந்த அளவுக்கு மேல் போய் விட்டால் 'ஐயையோ, இனிப் போடாதீர்கள்' என்று மன்றாடு கின்றான். இவ்வாறு ஒருவன் பூரண மனசோடு திருப்தி தெரி விக்கின்றபோது தான் தானம் செய்பவருக்குத் தானத்தின் பலன் பூரணமாகக் கிடைக்கும்" என அன்ன தானம் பற்றிக் கூறியிருக் கிறார் (தெய்வத்தின் குரல் — பகுதி 3)" எனவும் சொன்னார்.

"அப்பாடா! வெறும் சாப்பாட்டுக்குள் இத் தனை விஷயமிருக்கிறதா? இருந்தாலும் அன்னதானச் சாப்பாடு ஒரு தனிருசி தான் அம்மம்மா" என தீபா ருசித்து உண்டாள்.

"உன் அம்மா சமைத்த சாப்பாடு வீட்டில் இருக்கும் தீபு" என ஜோதி கேலி செய்தார். இருவரும்

திரும்பக் காரில் போகும்போது ஜோதி மெதுவாக கணேஷ் பற்றிப் பேச்சைத் தொடக்கினார். அவன் குடும்பம் வேலை போன்ற கேள்விகளுக்கு விடையளித்த தீபா, "ஆரம்பத்தில் அவருடன் எங்கள் குழுவில் ஒருவர் என்றுதான் பழகினேன். ஆனால் இப்போ அப்படி இல்லை அம்மம்மா" என்றாள் நாணத்துடன்.

"நீ அவனைக் கூட்டிக் கொண்டு வந்தபோதே எனக்குத் தெரியும் தீபு. இப்போ நடப்பதைப் பார்த்து யாவும் உறுதியாகிவிட்டது. ஆனால் இதை நீ மங்களாவிடம் சொல்ல வேண்டாமா? அவள் உனக்கு வரன் பார்த்துக் கொண்டிருக்கிறாள் தெரியுமா?" எனக் கேட்டாள்.

"அம்மாவிடமா?" என அதிர்ந்தவள், "நீங்களே சொல்லுங்கோ அம்மம்மா" என்றாள்.

"என்னால் முடியாதம்மா. நான் சொல்லிப் பிறகு அவளிடம் வாங்கிக்கட்டவா. அம்மாவாச்சு மகளாச்சு" என வேடிக்கையாகக் கூறினார்.

"ப்ளீஸ் அம்மம்மா, ப்ளீஸ்" என, தீபா கெஞ்சினாள். "சரி பார்க்கலாம்" என ஜோதியும் ஒப்புக்கொண்டார்.

மங்களாவிடம் நேரம் பார்த்து மெதுவாகச் சொன்னபோது "சரி, விசாரித்துப்பார்க்கிறேன்" என்றாள்.

"உன் மகள் அவனை விரும்புகிறாள் மங்களா. ஆனபடியால் எதையும் பார்த்துச் செய்" என்றார்.

"விரும்பினால் அந்தஸ்து பார்க்காமல் செய்வதா? நீங்கள் எனக்குச் செய்த மாதிரி? படித்திருக்கிறார் என்று வேறு ஒன்றும் பார்க்காமல் செய்து வைத்தீர்களே! அந்தப் பட்டிக்காட்டுச் சனங்களுடன் நான் பட்டபாடு எனக்கல்லவோ தெரியும்" என்றாள். "என் பெண்ணுக்கு நான் சமமான அந்தஸ்துடைய மாப்பிள்ளையைத்தான் பார்ப்பேன்" எனச் சொன்னாள்.

இதுவரை இந்த விசயத்தில் யாரும் தலையிடவில்லை. அவளே பார்க்கட்டும், முடிவில் கவனிப்போம் என இருந்தனர். தீபா யாரையும் காதலிக்காதவரை எல்லாம் சரி. ஆனால் இப்பொழுது என்ன நடக்குமோ எனப் பயந்தார்.

ஜோதிக்குத் தன் மருமகனில் மட்டற்ற அன்பு. இந்த நாளில் யார் இப்படி மனைவியின் தாயை இவ்வளவு கவனமாகப் பார்ப்பார்கள். ஜோதியின் மூத்தமகள் மாதங்கி பெர்ணாண்டோவைக் காதல் மணம் புரிந்து லண்டனில் வசிக்கிறார். அங்கே போனால் அதிக நாட்கள் நில்லாமல் வந்து விடுவார். "மங்களா என்ன செய்தாலும் அம்மாவுக்குச் சின்ன மகளில்தான் அன்பு அதிகம்" என மாதங்கி சொல்வாள். அது என்னவோ கண்கூடான உண்மைதான்.

ஜோதிக்கு எல்லாப் பேரப் பிள்ளைகளிலும் தீபாவிடம் ஒரு தனிஅன்பு. 'கடவுளே, எல்லாம் நல்லபடியாக நடக்கவேண்டு'மெனப் பிரார்த்தித்தார். ஆனால் சில நாட்களின்பின் தனது விசாரணையை முடித்த மங்களா, "என்னம்மா இது? ஏன் தீபாவின் புத்தி இப்படிப் போனது. அவர்கள் அண்மையில்தான் இங்கு அகதிகளாக வந்தவர்கள். தகப்பன் என்

னவோ தொழிற்சாலையில் வேலை செய்கிறார். இவனுக்கும் பெரிய சம்பளமில்லை. போதாக்குறைக்குக் குடும்பப்பொறுப்பும் கணேஷ் கையில்தான். பெற்றவர்கள் ஒன்றும் பெரிதாகப் படித்தவர்கள் இல்லை. ஒரு தங்கை தொழில்நுட்பக் கல்லூரியில் எதுவோ படிக்கிறாளாம். எனக்கென்றால் இது பிடிக்கவில்லை" என்றாள்.

"சும்மா இரு மங்களா. தீபா விரும்புகிறாள். பையனைப் பார்த்தால் பண்பானவனாகத் தானே தெரிகிறது. பெற்றவர்களைச் சந்தித்துப் பேசிப் பார்ப்போம்" என்றவர் விசயத்தை மெதுவாக மருமகனின் காதில் போட்டு வைத்தார்.

அவர் ஒரு மாதிரித் தந்திரமாப் பேசி மங்களாவின் சம்மதம் பெற்று கணேஷின் பெற்றோரை அவர்கள் வீட்டில் சந்தித்தனர். அவர்கள், "நீங்கள் இலங்கையில் எந்த இடம்? நாங்கள் அங்கே விசாரித்துப் பார்க்கவேண்டும். பெண்ணுக்கு எத்தனை பவுன் நகை போடுவீர்கள்? உங்களுக்கு எத்தனை பிள்ளைகள்? நீங்கள் இருக்கும் வீடு சொந்தமா? வாடகையா? உங்களுக்குப் பிறகு அது உங்கள் பெண்ணுக்குத்தானே?" போன்ற கேள்விகளைக் கேட்டபோது மங்களாவுக்குத் தலை கிர்ர் எனச்சுற்றியது. 'சுனாமி நிவாரணப்பணியில் தீபாவை அனுப்பியது என் தவறுதான்' எனப் பழியைத் தன்மேல் போட்டாள்.

வீட்டுக்கு வந்து தாயிடம் எல்லாவற்றையும் சொல்லிப் புலம்பியவள், "என்னவோ எனக்கு இது பிடிக்கவே இல்லை. அவர்களைப் பார்த்தால் எதிலுமே ஒரு அக்கறை இல்லாதவர்களாகத் தெரிகிறது. வீட்டில் இருப்பதற்கு சாதாரணமான ஒரு சோபா செட் கூட இல்லை. இரண்டு மூன்று ப்ளாஸ்டிக் கதிரைகள்தான் இருக்கிறது. முயற்சி செய்தால் பழையதாவது நியாய விலையில் வாங்கிப் போட்டிருக்கலாம். ஆனால் தாங்கள் மாப்பிள்ளை வீட்டார் என்று பெரிய பந்தா மட்டும் காட்டுகின்றார்கள். தாங்கள் சிறந்த குலம் கோத்திரம் என்ற பெருமை வேறு. திருமணத்துக்குப்பின் அங்கே என் பிள்ளை என்ன கஷ்டப் படப் போகிறதோ" எனக் கண் கலங்கியவள், "இது வேண்டாமென்று மெதுவாகத் தீபாவிடம் சொல்லுங்கோ அம்மா. நீங்கள் சொன்னால் அவள் கேட்பாள்" எனத் தன் மகளுக்காக மங்களா தாயிடம் கெஞ்சினாள்.

"இதெல்லாம் அவளுக்குத் தெரியாமலா இருக்கும் பிள்ளை. இருந்தாலும் அவள் வரட்டும், நான் கேட்டுப்பார்க்கிறேன். நீ ஒன்றுக்கும் யோசிக்காதே, கல்யாணமானதும் அவர்களுக்குத் தனியாக ஒரு வீடு பார்த்துக் குடி வைத்தால் எல்லாம் சரிவரும்" என்றார்.

ஆனால் அன்று மாலை வீட்டுக்கு வந்த தீபா, தாயைப் பார்த்ததுமே எதுவோ தவறென்று புரிந்துகொண்டாள். மங்களாவால் எதையும் மறைக்க முடியாது. அவள் முகமே காட்டிக் கொடுத்து விடும். தீபா, மெதுவாக ஜோதியிடம் "என்ன நடந்தது?" எனக் கேட்டாள். "எல்லாம் உன்னால் தான்" என ஜோதி விபரத்தைக் கூறினார். ஆனால் தீபா ஒன்றும் கலங்கவில்லை. "எல்லாம் நான் பார்க்கிறேன்" எனச் சொல்லிப் போய்விட்டாள். இதுதான் இந்தக்

காலத்துப்பிள்ளைகள். எதற்கும் துணிந்தவர்கள். அதுவும் நன்மைக்குத்தான் என ஜோதி தனக்குள் நினைத்துக்கொண்டாள்.

அன்று இரவுச் சாப்பாடு முடிந்ததும் "நான் உங்களுடன் பேசவேணும், வாங்கோ அம்மா" எனத் தாயைத் தன் அறைக்கு அழைத்துக்கொண்டு போன தீபா "ஏன் ஒரு மாதிரி இருக்கிறீர்கள்? கணேஷ் வீட்டில் என்ன நடந்தது?" எனக் கேட்டாள்.

"அதெல்லாம் ஒன்றுமில்லை தீபா. ஆனால் நீ இன்னும் யோசிக்க வேணும். எனக்கென்றால் இந்தத் திருமணம் சரிவராதென்று தோன்றுகிறது. உனக்குத் தெரியும், நானோ உன் அப்பாவோ காதலுக்கு எதிரிகள் இல்லை என்பது. ஆனால் இது எங்களுக்குச் சரிவராது என நினைக்கிறேன்" என்றாள்.

"எனக்கு எல்லாம் தெரியும். நடந்ததை அம்மம்மா சொன்னார். அவர்கள் கொஞ்சம் நாகரீகம் இல்லாமல் பேசுவார்கள் என்று கணேஷ் சொல்லியிருக்கிறார். அதை நான் பொருட்படுத்தினால்தானே கவலை. நான் விலகி நடந்தால் அதனால் பிரச்சனை ஒன்றும் வராது" என்றாள்.

ஆனால் மங்களா விடாமல் "அதில்லை தீபு. பணத்தில் குறியாக இருக்கின்றார்கள். அதுதான் கண்ணா பயமாக இருக்கிறது" என்றாள்.

"அம்மா" எனத் தாயை அன்புடன் அணைத்தவள், "இது வீண் பயம். வசதிபடைத்தவர்களும் இப்பொழுதெல்லாம் சீதனம் கேட்கிறார்கள்தானே. அவர்கள் நாகரிகமாக நாசூக்காகக் கேட்பதை இவர்கள் வெகுளித்தனமாக வெளிப்படையாகக் கேட்கிறார்கள். அதில் என்ன தவறிருக்கிறது?" எனக் கேட்டாள்.

மங்களாவுக்குப் பதில் சொல்லத் தெரியவில்லை. மகளை வியப்புடன் பார்த்தாள். இவள் வார்த்தைகளில் என்ன தெளிவு, என்ன திடம், என் பெண் எதையும் சமாளிப்பாள் என நினைத்து ஆறுதலடைந்தாள்.

"என்னம்மா?" எனத் தாயைப் பார்த்துப் பரிவுடன் கேட்டவள், "அம்மா, கணேஷ் மிகவும் நல்லவர். அது எனக்கு நன்கு தெரியும். அவர் எப்பொழுதும் எனக்கு ஆதரவாக இருப்பார் என்ற நம்பிக்கையும் எனக்கிருக்கிறது. அவருடனான என் எதிர்காலம் நன்றாக இருக்கும் என நான் நம்புகின்றேன். இனி உங்கள் விருப்பம் போல் செய்யவும்" எனக் குரல் தழுதழுக்கக் கூறிவிட்டு வெளியே போய்விட்டாள்.

மங்களா திடுக்கிட்டு நிமிர்ந்து பார்ப்பதற்கு முதல் தீபா, ஜோதியின் அறைக்குள் போய் அம்மம்மாவின் மடியில் முகம் புதைத்து விம்மினாள். எழுந்துபோய் அதைக் கண்ட மங்களா, தெம்பும் திடமுமாகத் தன் பக்கத்தை நியாயப் படுத்திப் பேசிய பெண்ணா இது என வியந்தாள். அத்துடன் மகளின் விருப்பத்தையும் அவள் கணேஷ் மேல் கொண்டுள்ள காதலையும் இப்பொழுது நன்கு புரிந்துகொண்டாள். எனவே, "அவள் விருப்பத்துக்கு மாறாக நான் ஒன்றும் செய்யமாட்டேன் எனச் சொல்லுங்கோ அம்மா. ஆனால் அவர்கள் இலங்கையில் எங்கள் குலங்கோத்திரமெல்லாம் விசாரித்துத்தான் திருமணத்திற்குச்

சம்மதிப்பார்களாம்" எனச் சத்த மாகச் சொல்லிவிட்டுப் போய் விட்டாள்.

அதைக் கேட்டதும் தீபாவின் அழுகை மாயமாய் மறைந்தது. ஜோதியை இறுக அணைத்துக் கன்னத்தில் முத்தமிட்டுவிட்டு நாணத்துடன் எழுந்து ஓடினாள். அதைப்பார்த்து ஜோதி 'அப்பாடா!' எனப் பெருமூச்சு விட்டார். மங்களா ஒன்றும் பிடிவாதக் காரியில்லை. ஆனால் பிள்ளையின் எதிர்காலம் என வரும் போது எந்தத் தாயும் ஒன்றுக்குப் பத்துத்தடவை யோசிப்பார்கள் தானே. அதற்கு மங்களா எப்படி விதிவிலக்காகமுடியும் எனப் பயந்தவருக்கு இப்பொழுது மனம் மிக லேசான மாதிரி இருந்தது.

எப்படியோ ஒரு மாதிரி அவர்களின் சம்மதத்தைப் பெற்ற பின் அவசரமாகத் திருமண ஒழுங்குகள் செய்து உரியநாளில், திருமணம் வெகுவிமரிசையாக, அனைவரும் பாராட்டும் வகையில் இனிதே நிறைவேறியது. திருமணத்திற்கு முன்னரே வாடகைக்கு ஒரு வீடு பார்த்து எல்லா ஒழுங்குகளும் செய்துவிடுகிறோம் எனப் பெற்றோர் சொன்னதை தீபா, கணேஷிடம் சொன்னபோது "வேண்டாம் தீபா. ஒரு மாதம் எங்கள் வீட்டிலேயே இருப்போம். அதன்பின் நாங்களே பார்த்து வேறு வீடு ஒழுங்கு செய்வோம்" என்றான். அவன் சொல்வது சரியாகப்பட்டதால் தீபாவும் சம்மதித்தாள். அங்கு தான் தீபா, தான் தவறு செய்துவிட்டதாகப் பின்னர் பல தடவைகள் எண்ணி வருந்தினாள்.

கணேஷும் அவனது குடும்பத்தாரும் நகரத்திற்கு வெகுதொலைவிலுள்ள ஒரு கிராமத்தில் வாடகை வீட்டில் வசித்து வந்தனர். அங்கிருந்து காரில் ஆபீஸ் போகவே தீபாவுக்கு ஏறத்தாழ ஒரு மணித்தியாலத்திற்கும் மேல் செல்லும். குறைந்த வாடகையில் வீடு அத்தகைய இடங்களில் தான் கிடைக்கும். அத்துடன் அங்குள்ளவர்கள் பெரும்பாலும் சிறு வருமானம் உள்ளவர்களாகவோ அல்லது சமூகசேவைப் பணத்தில் காலம் தள்ளுபவர்களாகவோ தான் இருப்பார்கள்.

அப்பகுதிகளில் கள்வர் பயம், போதை வஸ்து உபயோகம் போன்றனவும் அதிகமாக இருக்கும். சுருங்கச் சொன்னால், இருண்டபின் வீதிகளில் உலவுவது பயம் என்றுதான் சொல்லவேண்டும். வீடுகளிலும் களவு போவதற்கான வாய்ப்பிருந்தது. தீபாவுக்குப் பகலிலும் அந்த இடங்களில் நடமாடுவதற்குப் பயமாகத்தான் இருந்தது. நல்லவேளை கார் இருந்ததால் தப்பினாள். இந்த இடங்களில் பிரயாண வசதிகளும் குறைவாகத்தான் இருக்கும்.

அதனால்தான் கணேஷின் தங்கை சந்தியா சினேகிதிகளுடன் தனது தொழில்நுட்பக் கல்லூரிக்கு அண்மையில் ஓர் அறையில் வாடகைக்கு இருக்கின்றாள். கணேஷ் ஆண் என்றதால் ஓரளவு பரவாயில்லை. தீபாவுக்கு இப்படியான இடங்களில் இருந்து பழக்கமில்லாததால் மிகவும் கஷ்டமாக இருந்தது. கணவனின் விருப்பத்தை மதித்து அங்கே சில நாட்கள் இருந்தபின் அலுவலகத்திற்கு அண்மையில் நல்ல இடத்தில் வீடு பார்த்துப் போக வேண்டுமெனத் தீர்மானித்திருந்தாள்.

(தொடரும்)

# கற்காலத்து வாரிசுகள்

ஆஸ்திரேலியா உலகின் மிகப்பெரிய தீவு அல்லது மிகச்சிறிய கண்டம் என்று சொல்லலாம். எவ்வாறாயினும் தற்சமயம் பல கலாசார மக்களும் ஒருமித்துச் சுமுக மான சூழலில் வாழும் இந் நாட்டின் பழங்குடி வாசி களது வாழ்க்கைமுறை உலகின் மிகப்பழமை யான கலாசாரங்களில் ஒன்றாகும்.

பிரித்தானியரின் வரு கைக்கு 5,000 வருடங்களின் முன்னரே இங்கு வெளியுலகப் பாதிப்பின்றித் தமது தனிப்பட்ட, இயற்கையோடு இணைந்த கலா சாரத்தில் வாழ்ந்து கொண்டிருந் தனர். இப்போதும் சிலர் நகரவாசி களாய் மாறினாலும், பலர் தமது பழமை யான வாழ்க்கை முறையிலிருந்து மாறாது, நகரஎல்லைகளிலும் அவர்களுக்கென்று அரசாங்கம் நிலஉரிமை வழங்கியுள்ள பகுதிகளிலும் வசித்து வருகின்றார்கள்.

இவர்கள் ஆதியில் எங்கிருந்து ஆஸ்தி ரேலியா வந்தனர் என்பதைப் பற்றிய சர்ச்சை இன்னும் முடிந்தபாடில்லை. குமரிக்கண்டத்தின் ஒரு பகுதியாக இருந்த நிலப்பரப்பு சுவாத்திய மாறுதல் களால் பிரிந்துபோனதால் இவர்கள் ஆதிதிராவிடப் பழங்குடியினராக இருக்கக்கூடும் எனவும் ஒரு கருத்து உள்ளது.



மாலினி இராசநாயகம்

தமிழ்நாட்டுப் பழங்குடியினர்,

இலங்கை வேடர்கள், ஜாவா — சுமத்திராக்காடுகளில் வாழும் பழங்குடியினர், ஆஸ்திரேலியப் பழங்குடியினர் என்று ஒரு தொடர்ச்சி இருக்கிறது என்றும் சில ஆராய்ச்சியாளர் கருதுகின் றனர்.

எவ்வாறாயினும் இயற்கை யோடு ஒன்றுபட்டும், சூழ்நிலைக் குச் சேதமேற்படாதவாறும், தம் முள் இருக்கும் ஆவி (Spirit) சகல ஜீவராசிகள் மட்டுமின்றி மரம், கல், தண்ணீர், ஆகாயம், தீ என எல்லாவற்றிலும் கலந்திருக்கிறது என்ற தத்துவத்தை உள்ளடக்கிய வாழ்க்கைமுறையை மேற்கொண் டவர்கள் என்பதும் குறிப்பிடத் தக்கது.

அவர்கள் பாரம்பரியத்தில் மிக முக்கியமான 'Dream Time' என்ப தைப் பலவிதமாய் மொழி பெயர்க் கலாம். அதைக் கனவிடைத் தோய் தல் எனலாம் அல்லது வாய் மொழியாக வழங்கி வரும் புரா ணம் என்றும் கூறலாம்.

ஆயினும் நேற்று, இன்று, நாளை என்ற காலத்தைப் பிற மனி தர்கள் போல் அவர்கள் முற்றாக வேறுபடுத்துவதில்லை. இதனா லேயே சமூகமாற்றங்களையும் அவர்கள் விரும்பவில்லை. தலை முறை தலைமுறையாய் ஒரேவித மான வாழ்க்கைமுறையைப் பல் லாயிரக்கணக்கான வருடங்க ளாய்ப் பின்பற்றி வந்திருக் கின்றனர்.

இந்தக் 'கனவுப் புராணங் களை'த் தெளிவாக விளக்கிவிட முடியாது. எப்போதோ நடந்தவை யானாலும், இன்றும் நடக்கிறது, அது நாளையும் நடக்கும் என்ற நுட்பமான கருத்து, அவர்களது வாழ்க்கைத் தத்துவமாக, எளிதில் பிறரால் புரிந்துகொள்ள முடியா ததாக இருக்கிறது. இந்தக் 'கனவுக் காலம்' பாரம்பரியக் கதைகள் மூலம் வாழ்க்கையின் ஒவ்வொரு நிலைக்கும் ஏற்ப விதிகளும் கட்டுப் பாடுகளும் வகுக்கப்பட்டிருக் கின்றன.

உலகம் பிறந்த கதையைக் குகைகளிலும் பாறைகளிலும் வண்ணச் சித்திரங்களாய் வரைந் தும் செதுக்கியும் உள்ளனர். ஆரம்பத்தில் அருவங்கள் (Spirit) ஆகாயத்திலிருந்தும் கீழ்உலகி லிருந்தும் தோன்றிய பூமியில் உல வின. இவர்கள் தோன்றிய, மறைந்த இடங்களே ஆறுகளாய், மலைகளாய், பாறைகளாய் மாறின. இவ்வருவங்கள் அல்லது ஆவி களே எல்லாவகையான ஜீவ ராசிகளையும் படைத்தன. மனி தரோ மிருகவர்க்கமோ ஒன்றி லிருந்து மற்றொன்றாய் மாறும் தன்மை வாய்ந்தன.

படைப்பு முடிந்ததும் மானிடக் குழந்தைகளை உருவாக்கி, அவர் கள் வாழ்வதற்கான நீதிமுறை களையும் சொல்லிவைத்துச் சென்றன. பூமியைவிட்டு இவை மறைந்ததாகத் தோன்றினாலும், உண்மையில் அவை இங்கேயே எல்லாவற்றிலும் (ஆத்மாவாக) ஜீவனாக ஊடுருவி, எப்போது அவசியமோ அப்போது தோன்று வன என்பது இந்தப் பழங்குடி யினரது அசையாத நம்பிக்கை.

ஒவ்வொரு குலத்துக்கும் அடை யாளக் குறிப்பாக மிருகங்கள், பறவைகள், தாவரவர்க்கத்தின் பெயர் உண்டு. இவற்றை இவர்கள் வேட்டையாடவோ உண்பதோ கூடாது என்று நியமித்திருக்கி றார்கள். (இவ்வகையில் அந்த அந்தப் பிராணிகள், தாவரங்கள் காக்கப்படுகின்றன.)

வேளாண்மை செய்யாதிருப்பினும், உரியகாலத்தில் காட்டை எரிப்பதன் மூலம் கிழங்கு வகைகள், தாவரங்கள் மீண்டும் தளிர்த்து உயிர்த்து மறுமுறை அவர்கள் வரும்போது உணவுக்கு ஏற்ற பக்குவத்தில் வளர்ந்திருக்கும் என்பதையும் அறிந்திருக்கின்றனர்.

இந்தக் கண்டம் முழுவதிலும் சுமார் 600 - 700வித வித்தியாசமான மொழியும் கலாசாரங்களும் இருந்திருக்கின்றன. ஆஸ்திரேலியா என்பது பிரித்தானியர் கொடுத்த பெயரே. பழங்குடியினர் நாடோடிகளாய் இருந்தமையால், தாம் அவ்வப்போது வாழ்ந்த இடங்களுக்குப் பெயர்கள் சூட்டியுள்ளனர். ஒவ்வொரு பருவக் காலத்திலும் இடம் பெயர்வதை வழக்கமாகக் கொண்டிருந்தனர். ஐரோப்பியர் 18ஆம் நூற்றாண்டில் வந்திறங்கியபோது இவர்கள் நாடோடி போல் வாழ்ந்தனர். அதனால்தான் ஆயுத பலமிக்கவர்களை எதிர்க்கும் சக்தி அவர்களிடம் இருக்கவில்லை.


Terra Nullius என்று, தாம் இறங்கிய பூமியில் யாரும் பதியவில்லை என்று சட்டம் இயற்றி, கண்டம் முழுதும் பிரித்தானிய சாம்ராஜ்யத்துக்கே என்று அறிவித்தனர். பிரிட்டனின் பல்வேறு குற்றவாளிகளைக் கப்பலில் ஏற்றி இங்கே கொண்டுவந்து இறக்கினர். குற்றவாளிகளின் குடியிருப்பாக ஆரம்பித்தது இந்நாடு.

பின்னர் வேகமாக ஐரோப்பியர், மத்திய ஆசியர், சீனர் என்று பல்வேறு இனத்தவரும் குடியேறி நிலங்களை ஆக்கிரமித்தனர்.

இவ்வேற்று நாட்டினருடன் வந்த வியாதிகளாலும், அவர்கள் தாட்சண்யமின்றிப் பெருவாரியாக இவர்களை அழித்ததாலும், தமது பழமையான சூழலில் இருந்து அகற்றப்பட்டமையாலும், வாழ்முறை சிதறின துன்பத்தாலும், இப்பழங்குடியினர் எண்ணிக்கை தற்போது மிகவும் குறைந்துவிட்டது.



didjman



boomerangset

ஆஸ்திரேலியாவின் முக்கிய மாநிலமான நியூ சவுத் வேல்ஸில் வாழ்ந்து வந்த பல குலத்தவருக்கும் தனிப்பட்ட மொழி, கலாசார வேறுபாடு, பிரதேச எல்லைகள் இருந்தன. சிட்னியைச் சுற்றி தருக், விரஜரரி, தரவல், தார்க்கின்ஜஸ், குரிங்காய், இ ஓரா உள்ளிட்ட பல குழுக்கள் வாழ்ந்தனர்.

பொதுவாகத் தம்மைக் 'கூரி' என்று சொல்லிக்கொண்டனர். இப்பிரதேசத்தில் பெரும்பான்மையோர் பேசும்மொழி 'தருக்' என்பதாகும். இதிலும் மாறுபட்ட பேச்சு வழக்குகள் இருக்கின்றன. ஓரா என்பது ஊர், இடம் என்பதைக் குறிக்கும். இ ஓரா என்றால் இவ்வூர் என்பதாகும். ஒரு குழுவில் ஏறக்குறைய ஐம்பது பேர் இருந்தனர். அவர்களுக்கென ஒரு தனிப்பட்ட தலைவன் இருக்கவில்லை. வயதிலும் அனுபவத்திலும் முதிர்ந்தோரே முடிவுகளையும், நியாயங்களையும் வழங்கினர்.

கூட்டத்தைச் சேர்ந்தோர் அனைவரும் இத்தீர்வுகளுக்குக் கட்டுப்படவேண்டும். இதில் வைத்தியன் 'கொராஜி' என்போர் பொதுவாகக் கூட்டத்தில் செல்வாக்குடன் இருந்தனர். வியாதிகளைக் குணமாக்குவதில் கையாண்ட ஒரு வகை, நோயுற்ற இடத்தில் வாய்வைத்து உறிஞ்சுவதாகும். வலி அல்லது கட்டு உண்டானால் தம் காலை நெருப்பில் சூடாக்கி நோவு உள்ள இடத்தில் ஒற்றடம் கொடுப்பர். அத்துடன் மாந்திரீக முறையையும் பின்பற்றுவதுண்டு.

ஆண்கள் பெண்கள் நடத்தையில் வெவ்வேறான கட்டுப்பாடுகள் இருந்தன. ஒரு பாலரின் விவகாரத்தில் மற்றவர் தலையிடுவதில்லை. சிறுவர், வாலிப வயதை அடைந்ததும் ஆண்கள் ஒருமித்து, தம் வாழ்க்கை முறைகளை ஆரம்பிக்கும் ரகசிய, புனிதச்சடங்கு முறைகளுக்கான விழா ஒன்று நடத்துவர். இதில் பல திக்குகளிலும் உள்ள பிறகுலத்து ஆண்களுக்கு ஆளனுப்பி அழைப்பு விடுத்து, விருந்து, களியாட்டம் எனக்கொண்டாடுவர். இந்தச் சடங்கிலிருந்து பிள்ளைகள்

தாயிடமிருந்து விலகி ஆண்களுக்கான பொறுப்பேற்றுக் கொள்வர்.

ஆஸ்ரேலியப் பெண்ணிய இயக்கம் பற்றிய சமூகவியல் ஆராய்ச்சியை டாக்டர் ருக்மணி வெங்கட்ராமன் செய்தபோது, அதில் ஒரு பகுதியாகப் பழங்குடிப் பெண்களைப் பற்றித் தாம் அறிந்த தகவல்களைச் சொல்கிறார்:

பெண்களுக்கென ஒரு தனி ஒதுக்கிடம் 'ஜில்மி' இருந்தது. ஆண்களுக்கும் பெண்களுக்கும் அவரவருக்கென்ற நியமம் வரையறுக்கப்பட்டு இருந்தது; நீதியின்படி ஒருவர்மீது மற்றவர் ஆதிக்கம் செலுத்தமுடியாது. பெண்கள் ஒருவருக்கொருவர் ஆதரவாகவும் தமக்கென ஒரு தனித்துவத்துடன் இருக்கவும் இம்முறை உதவியது.

இருபாலரும் சமூகத்திற்கு இன்றியமையாதவர் என்பதால் இச்சமத்துவம் வற்புறுத்தப்பட்டது. தமது பாலியல் உரிமைகளை அளிப்பது, கணவனுடன் மட்டுமின்றி, வேறுயாருடனும் சேரும் உரிமையும் இருந்தது. 'ஜில்மி'யில் இருப்பதன் மூலம் பெண்கள் தமக்கென்ற நெறிமுறைகளை ரகசியமாக வகுத்து வைத்திருந்தார்கள். (இது இன்றைக்கும் உள்ளது) இவ்விரகசியங்கள் பெண்களுக்கு ஒரு தனிச் சக்தியைக் கொடுக்கிறது என்று நம்புகிறார்கள். ஆண்கள் இவர்களது தனித்துவத்தை மதித்தும் ஆதரித்தும் வந்தார்கள்.

முன்சொன்னபடி அடையாளக் குறிப்பாக உள்ள பெயர்கள், உதாரணமாக, கங்காரு என்பதாக இருந்தால் தந்தையின் அடையாளப் பெயரே குழந்தைகளுக்கும் உரித்தாகும். தாய்வழிப் பெயர் சேர்ப்பதில்லை. ஒரே பெயருள்ள குழுக்களிடையே விவாகம் மறுக்கப்பட்டது.

பெரியவர்கள்கூடி, பையனின் தந்தையின், சகோதரியின் பெண்ணையோ அல்லது தாயின் சகோதரனின் பெண்ணையோ, பெண் குழந்தைகள் பிறந்தவுடனேயே நிச்சயிப்பர். சிலசமயம் ஒருவனுக்கு இவ்வகையில் பல பெண்களையும் நிச்சயம் செய்வார்கள்.

கல்யாணமாகாத பெண்களைக்கூட, பையனின் முறை மாமியாக நியமிப்பதுண்டு. பின்னர் அவளுக்குக் குழந்தைகள் பிறந்த பின்னர் அவளது பெண் மகவுகளில் ஒன்று அவனுக்குரியதாகி விடும்.

இப்படிப்பட்ட நிச்சயதார்த்தம் மிகவும் முக்கியமானது என்பதால் விவாகச்சடங்கு என்று ஒன்று தனிப்பட நடப்பதில்லை. பெண் பத்து, பன்னிரண்டு வயதானவுடன், கணவன்வீடு சென்று மாமியார் உத்தரவுப்படி கனி, கிழங்கு தேடுவது, மீன்பிடிப்பது, குடும்பத்திலுள்ள குழந்தைகளைக் கவனிப்பது என்றவாறு வேலைகளைப் பகிர்ந்து கொள்வாள்.

பூப்படைந்த பின்னரே கணவனுடன் சேர்ந்து வாழ்க்கை நடத்துவாள். சில சமயம் பெண் குழந்தைகளை, வாலிப வயதிலுள்ளவர்களுக்கு நிச்சயம் செய்வதால் பலவருடங்கள் ஆண்கள் காத்திருக்க வேண்டி இருக்கும். இதனால் சலித்துப்போய் இவ்வாலிபர் அயலில் உள்ள பிறகுலத்தவரின் பெண்களைக் கவர்ந்து வந்து விடுவதுண்டு. அப்போது கவரப்பட்ட பெண்களின்முறை மாப்பிள்ளைகள் வந்து, அவர்களுடன் பழிவாங்குதலும் சண்டைகளும்

நடப்பதுண்டு. குழுக்களிடையே அநேகமான சண்டைகள் பெண் கடத்தலாலேயே நடந்தன.

கொண்டாட்டங்களில் ‘டிஜ ரிடு’ எனப்படும் நாகசுரம் போன்ற வாத்தியம் உபயோகிப்பார்கள். ஆனால் அதைவிட நீண்ட குழா யையுடைய ஒரு கருவியில் இடை விட்ட நாதம் எழுப்புவர். எறிந் தால் பல தூரம் பறந்து சென்று இலக்கைத் தாக்கிவிட்டு, எறிந்தவர் கைக்கே திரும்பும் ‘பூம ராங்’கை விளையாட்டுக்கும் வேட்டைக்கும் பயன்படுத்துவர். சடங்கு நடனம் (Ceremonial Dance) ஆடும் பொழுது உடலெங்கும் வெள்ளை நிறத் திலோ வர்ணங்களாலோ தம்மை அலங்கரித்துக்கொள்வர். குளிர் காலத்தில் மரப்பட்டைகள், கம்பளி உள்ள விலங்குகளின் தோல் களால் உடலை மூடிக்கொள்வர்.

பிறநாட்டவரின் குடியேற்றத் தால் பலவகையிலும் துன்பப் பட்ட இவர்களை மிக அதிக மாகப் பாதித்தது அவர்களது நிலங்களை ஆக்கிரமித்ததுதான். இதனால் அவர்களது வாழ்க்கை முறையை மட்டுமின்றி ஆத்மா வையே பறித்தது போன்ற உணர்வு அவர்களுக்கு உண்டாயிற்று. சிலர் வெள்ளையரின் மிகப்பெரிய பண்ணைகளில் வேலைக்குக் கொண்டு போகப்பட்டார்கள். ஐரோப்பியக் கிறிஸ்தவ நாகரி கத்தில் வளர்க்கப்பட்டனர். பின்னர் இவர்கள் ஏவல் பணி செய்ய வெள்ளையர் வீடுகளில் அமர்த்தப்பட்டனர்.

கிட்டத்தட்ட இருநூறு வருடங் களுக்குப் பின்னரே எழுபதுகளில் நில ஒதுக்கீட்டுப்பேரவை ஒன்றை அரசாங்கம் அமைத்து, அவர்களுக் கென்று நிலம் வழங்கியுள்ளது.

அவர்களது மூதாதையர் புதைக்கப்பட்ட இடங்கள், பல் வேறு காரணங்களால் தாம் புனிதமாய்க் கருதும் பிரதேசங் களைத் தமக்குத் திருப்பித் தர வேண்டும் என்றும் கிளர்ச்சி செய்து மாபோ (Mabo) என்றவர் நீதி கேட்டு வழக்காடினார். இவ் வழக்கு ஒரு வருடத்தின்முன் உயர்நீதிமன்றத்தில் விசாரித்து, அவருக்குச் சாதகமாய்த் தீர்ப்பு கிடைத்தது.

சரித்திரம் படைத்த இத்தீர்ப்பு, பழங்குடி மக்களிடையே மகிழ் வையும், பெரிய எண்ணெய்க் கம்பனிகளுக்கும், உலோகச் சுரங்க உரிமையாளர்களுக்கும் திகிலை யும் ஊட்டியுள்ளது. இந்த நிலத் திற்குப் பல்லாயிர வருடங்கள் சொந்தமானவர்களுக்கு ஏற்பட்ட அநீதியை ஓரளவாவது இது தீர்க் கும் என்கிற, குற்றமனப்பான் மையின் அடிப்படையிலான நல்லெண்ணமும் ஆஸ்திரேலியரி டையே உண்டு. ஆக்கிரமித்ததை விட்டுக் கொடுக்கக்கூடாது என்று நினைப்பவர்களும் உண்டு.

பழங்குடியினர் சிலர் தற்போ தைய சமூக வாழ்க்கையில் ஒன்று பட முடியாமல், குறிக்கோள் இல்லாது அலைந்து திரிவதும், குடிபோதையில் மூழ்கி வசமிழந்து சண்டைகளில் ஈடுபட்டுச் சிறைக்குச் செல்வதுமாய் இருக் கின்றனர். சிறையில் அடை பட்டது தாங்காமல் தற்கொலை செய்துகொள்வதும் மிக அதிக மாயுள்ளது. நகரஎல்லைகளிலும் தமக்கென உள்ள சிறுகிராமங் களிலும், மிக எளிமையாக வாழும் இவர்களது சுகாதாரமும் ஆரோக்கியமும் மிகவும் பின் தங்கியுள்ளன.

உள்நாட்டு அரசாங்கக் கூட்டுறவுத் துறையிலுள்ள பிரதம ஆலோசகர் டாக்டர் சு. ஜெயகாந்தன் இந்தப் பழங்குடியினர் பலருடன் தொழில்ரீதியிலும் நட்புமுறையிலும் பழகியுள்ளார்.

அவர் கூறுவதாவது: ஆசியாவின் பல பாகங்களிலிருந்தும் வந்துள்ள வெள்ளையரல்லாதாரையும், பொதுவாக அவர்கள் தம் நிலத்தை அபகரிக்க வந்தவர்களாகவே சந்தேகத்துடன் கருதுகிறார்கள். ஆனாலும் நன்கு பழகிய பிறகு வெள்ளையரைவிட, தம்மை ஆசியர் புரிந்துகொள்கிறார்கள் என்றும் அன்பாகப் பழகுகிறார்கள் என்றும் கூறுகிறார்கள்.

நானும், எனது கணவரிடம் வைத்தியம் பார்ப்பதற்காக வரும், நகரத்தில் பிறரைப் போலவே வாழும் சில குடும்பத்தினருடன் பேசியிருக்கிறேன். இந்தியத் துணைக்கண்டத்திலிருந்து வந்த டாக்டர்களிடம் போவதையே விரும்புகிறோம் என்று சொல்வார்கள்.

இவர்களது வண்ணச் சித்திர வேலைப்பாடுகள் இப்போது உலகமெங்கும் பிரசித்தியடையத் தொடங்கியுள்ளது. ஒவ்வொரு படமும் ஒரு கதையைக் கூறும், வண்ணச் சேர்க்கைகளைத் தெளிவாக, இயற்கையான ரசனையுடன் கலந்து சித்திரங்களை வரைவர்.

நவீன நாகரிக யுகத்தில் வாழச் சிறிது சிறிதாகப் பழகிப் பலர் வெற்றியடைந்துள்ளனர். விளையாட்டு வீரர்களாயும் வீராங்கனைகளாயும் பலர் உலகப் புகழ் பெற்றிருக்கிறார்கள். டென்னிஸில் ஈவோன் கூலசொங், ஓட்டப்பந் தயத்தில் காதி ஃப்ரீமன், கால் பந்தில் மார்க் எல்லா, இன்னும் பலர் பெயர் பெற்று முன்னேறி வருகின்றனர்.

உயர்கல்வி கற்றுப் பொறுப்பான வேலைகளிலும் உள்ளனர். டெலிவிஷனிலும், சினிமாவிலும் அறிவிப்பாளர்களாகவும், பேட்டி காண்பவராகவும், நடிகர்களாகவும் பலர் இருக்கின்றார்கள்.

யொதுயிண்டி என்பவரது பாரம்பரியத்தை ஒட்டிய சங்கீதக் குழு உலகமெங்கும் அமோகமான புகழீட்டி வருகின்றது. இப்படியாகக் கற்காலத்திலிருந்து, இவ்விரு நூறு வருடங்களில், பல துன்பங்களைத் தாங்கித் தம் உரிமைகளைச் சிறிதுசிறிதாக மீட்டுப் பெரும்பான்மையானவர்களுடன் வாழ்வதில் ஓரளவு வெற்றி பெற்றுள்ளார்கள் என்றே சொல்ல வேண்டும்.

●

## புதுக்குறள்

அன்புடனே மக்கள் அனைவரும் ஒன்றாயின்
இன்பம் பெருகிவள ரும்

எல்லோரும் ஒன்றென்னும் எண்ணம் பிறந்தாலே
தொல்லை ஒழிந்துவி டும்.



# 3

# உங்கள் சிந்தனைக்கு ஒரு சிறுவிருந்து

ஆசி. கந்தராஜா

எல்லா உறவுகளையும் பாதிக்கிற விஷயம் குறைகாணுதல். சிறு சிறு விஷயங்களுக்கெல்லாம் குறை காணும் பழக்கம் எத்தனை குடும்பங்களின் நிம்மதியையும் சந்தோஷத்தையும் கெடுத்திருக்கின்றன.

கடைக்குப் போய் சாமான் வாங்கி வா என மனைவி ஒரு பெரிய பட்டியலைக் கணவனிடம் கொடுப்பாள். கணவனும் கவனமாகத் தன் தகுதிக்கு ஏற்றபடி சாமான்களை வாங்கி வருவான். “இதையேன் வாங்கிவந்தீர்கள்? நான் சொன்னது வேறு பிராண்ட் அல்லவா. உங்களால் உருப்படியாக இந்தச் சின்ன வேலையைக் கூடச் செய்யமுடியவில்லை” என மனைவி குறை காண்பாள்.

தக்காளி ரசம் வை என்பான் கணவன். மனைவி வைத்த ரசத்தில் குறை காண்பது மட்டுமல்லாமல், அடுத்த வீட்டு ரசம் எவ்வளவு ருசியாக இருந்தது என்றும் சொல்லி வைப்பான். உடனே அங்கே ஒரு சண்டை துவங்கும்.

இவை போன்று ஏராளமான சம்பவங்கள் வாழ்க்கையில் எமது நிம்மதியைக் குலைக்கின்றன. பலர் குறை காண்பதை, தவறைச் சுட்டிக்காட்டுவதாக எண்ணிக் கொள்ளுகிறார்கள். தவறைச் சுட்டிக் காட்டுவதற்கும் குறை காண்பதற்கும் நிறைய வித்தியாசங்கள் இருக்கின்றன. தவறை, சரியான முறையில் சுட்டிக்காட்டுவது வரவேற்கத்தக்கது. ஆனால் குறை கூறுவது பாதகமான விளைவினை ஏற்படுத்தும்.

“இந்தச் சின்னக் கணக்கைக் கூட உன்னால் சரியாகப் போட முடியவில்லை. நான் முதலில் சொல்லித் தந்தேனே; மண்டையில் ஏறவில்லையா? சொல்லித் தரும்போது ஏமிலாந்திக் கொண்டு நிக்கிறது - பிறகு பிழைபிழையாகக் கணக்கைச் செய்கிறது” எனத் தந்தை கோபப்பட்டால், அது மகனில், அவனது ஆற்றாமையில் குறை காண்கிறீர்கள் என்பது அர்த்தம்.

மகனே, இந்த இடத்தில் நீ இன்ன தவறு செய்திருக்கிறாய்; அதுவரை நீ சரியாகவே போட்டிருக்கிறாய். இதை இப்படிச் செய்யவேண்டும் என அவனிடம் விளக்கமாகச் சொல்லுதல் தவறைச் சுட்டிக்காட்டுதல்.

இந்த இரண்டில் மகன் எதை விரும்புவான்?

இதுபோன்றே நம் வாழ்க்கையில் மற்ற எல்லா விஷயங்களும்

எனவே, குறை காண்பதை இன்றுடன் நிறுத்திக் கொள்வோம். ●

# மௌனகுரு

**சிட்னியில் சிவயோக சுவாமிகளின் குரு பூசையில் ஆற்றிய உரை**

உங்களுக்கு நான் புதிதாக ஒன்றையும் சொல்லமுடியாது. நீங்கள் எங்களுடைய சமய தத்துவங்களை அறிந்தவர்கள். எல்லோருமே உருவ வழிபாட்டிலே நம்பிக்கை உடையவர்கள். எங்களுடைய சமயம் உருவவழிபாட்டை ஒரு தத்துவமாக ஏற்றுக் கொண்டுள்ளது. நாங்கள் கோயில்களிலே இறைவனின் எத்தனையோ திருவடிவங்களை வணங்குகிறோம். ஆனாலும், இறைவன் உருவம் அற்றவர் என்பதும், இந்தத் திருவடிவங்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு தத்துவத்தைக் குறிக்கின்றது என்பதும் எங்களுக்குத் தெரியும். என்னை இன்று பேசும்படி கேட்டபொழுது, தக்ஷிணாமூர்த்தி தத்துவத்தைப்பற்றிச் சிறிது உங்களுடன் பகிர்ந்து கொள்ளலாம் என்று நினைத்தேன்.

நடராஜர் திருவடிவம் உலகத்தின் இயக்கத்தை விளக்கிநிற்கும் ஓர் அழகிய தத்துவம். இதனைப் பார்த்து உலகமே வியந்து பாராட்டுகிறது. அதேபோல இறைவன், ஞானத்தை உணர்த்தும் ஓர் அழகிய வடிவமும் உள்ளது. அதுவே தக்ஷிணாமூர்த்தி — இது குரு தத்துவம். குருவாக விளங்குவதை தக்ஷிணாமூர்த்தி என்னும் அழகிய திருவடிவம் உணர்த்துகிறது. இவை இரண்டுமே எதிர் எதிரான இரண்டு தத்துவங்கள். ஒன்று ஓய்வில்லாத அசைவு — ஆட்டம். மற்றையது எல்லாம் அடங்கிய மோனநிலை.

சிவன் கோயில்களிலே தெற்குப் பக்கத்தைப் பார்த்தபடி தக்ஷிணாமூர்த்தியின் திருவடிவம் இருக்கிறது. கொழும்பிலுள்ள பொன்னம்பலவாணேஸ்வரத்திலே ஓர் அழகிய தக்ஷிணாமூர்த்தி இருக்கிறது. யாழ்ப்பாணத்திலுள்ள வண்ணை வைத்தீஸ்வரன் கோயிலிலும் தக்ஷிணாமூர்த்தி வடிவம் ஒன்றுள்ளது. சென்னை கபாலீஸ்வரர் கோயிலிலும் ஓர் அழகிய வடிவம் உள்ளது. இப்பொழுதும் அத்திருவடிவம் என் கண்ணுக்குள் நிற்கிறது. நீங்களும் சிவன் கோயில்களில் இந்த மூர்த்தியைத் தரிசித்திருப்பீர்கள்.

தக்ஷிணம் அல்லது தட்சணம் என்றால் தெற்கு என்பது பொருள். தென்திசை காலனின் திசை என்பது ஒரு ஐதிகம். காலத்தை முடிப்பவன் — காலன். யம பயம் வேண்டாம் என்பது போல தக்ஷிணாமூர்த்தி அமைதியாக வீற்றிருக்கிறார்.

அந்த மூர்த்தியின் முகத்திலே சாந்தமான புன்னகை நிலவுகிறது. அவருடைய கை சின்முத்திரையைக் காட்டுகிறது. அவர் ஓர் ஆலமரத்தின் கீழே வீற்றிருக்கிறார். அவருடைய காலடியிலே நான்குபேர் அமர்ந்திருக்கிறார்கள். அந்தத் திருவடிவத்தைப் பார்த்த உடனேயே ஒருவர் குரு என்பதும் மற்றவர்கள் அவரிடம் உபதேசம் கேட்கும் சீடர்கள் என்பதும் விளங்கிவிடும்.

இந்தக் குரு செய்யும் உபதேசம் ஞானஉபதேசம். இந்த உபதேசத்திலே ஒரு விசேஷம் இருக்கிறது. குரு, வாய் மூடி மௌனியாக இருந்து உபதேசம் செய்கிறார். வார்த்தைகள் இல்லாத உபதேசம். இதுதான் இந்த உபதேசத்திலே உள்ள விசேஷம். மௌனமும் ஒரு மொழிதான். மௌனம் என்பது சொற்கள் கடந்தநிலை. மௌனம் என்பது ஞானவரம்பு என்று பெரியவர்கள் சொல்வார்கள்.

செம்மான் மகளைத் திருடும் திருடன்
செம்மான் முருகன் பிறவான்
இறவான்
சும்மா இரு சொல் அற என்றலுமே
அம்மா பொருள் ஒன்றும்
அறிந்திலனே

என்று அருணகிரிநாதர் கந்தர் அனுபூதியிலே பாடுகிறார்.

சிவயோக சுவாமிகள் குருவருளால் ஞானநிலையை அடைகிறார். அப்பொழுது அவர் பாடுகிறார்:

அருவமும் காட்டி
உருவமும் காட்டி
அப்பாற்கு அப்பாலாம்
அருள்நிலை காட்டிக் காட்டி
அந்தம் ஆதி இல்லா
சொருபமும் காட்டி
சும்மா இருக்கும் சூட்சத்தில்
மாட்டிவிட்டான்
துன்பம் இறந்தன
இன்பம் இறந்தன
சோதி சோதி
சிவ சோதி

"சும்மா இரு" என்றால் சொற்கள் அற்ற நிலை. "சொல் அற" என்பது அதன் பொருள். அது மௌனம் — ஆழ்ந்த மௌனம். மனதிலே ஒரு நினைவும் இல்லாமல் இருப்பது. மனம் என்றாலே நினைப்பதுதானே அதன் தொழில். அதுதான் எங்களுக்குத் தெரிந்த விளக்கம். இந்த நினைப்பு இல்லாத நிலைதான் "சும்மா இரு" என்பது. சுவாமிகள் "சும்மா இரு" என்பதையே, தன்னைத் தேடி வரும் அடியார்களுக்குக் கூறுவது வழக்கம் என்பார்கள். இது ஒரு மாபெரும் உபதேசம் — ஒரு பெரும் தத்துவம்.

சாதாரண மக்களான எங்களைப் போன்றவர்களுக்கு மனதை வெறுமையாக, நினைவுகள் இல்லாமல் வைத்திருக்க முடியாது. எங்களுடைய மனம் அலை பாய்ந்தபடியே இருக்கும். ஆனால் ஞானிகளுக்கு "சும்மா இருக்க" முடிந்தது.

சொல்லெல்லாம் மோனம்
தொழிலாதியும் மோனம்
எல்லாம் நன் மோன நிறைவே

என்று சுவாமிகள் சொல்கிறார்.

மௌனமாக இருந்து இளைப்பாறீர்

என்றும் சொல்லுகிறார்.

எண்ணம் யாவும் இறந்திட வேண்டும்
என் குரு பரபுங்கவசிங்கமே

என்று குரு செல்லப்பா சுவாமிகளை வேண்டுகிறார். எண்ணம் யாவும் இறந்திருத்தல் என்பதுதான் சும்மா இருத்தல்.

நினைப்பற நினைந்தேன்

என்று மணிவாசகப் பெருமான் பாடுகிறார்.

மோனகுரு அளித்த மோனமே
ஆனந்தமே

என்று தாயுமான சுவாமிகளும் பாடுகிறார். தாயுமான சுவாமிகளின் குருவின் பெயரும் மௌனகுரு.

ரமணமகிரிஷியைத் தரிசிக்கச் சென்றவர்கள், அவர் மௌன மாக உபதேசித்தார் என்பார்கள். அவருடைய சந்நிதியில் இருந்த பொழுது பேசாமலே தங்களுக்கு உணர்த்தியவர் என்று தங்களு டைய அனுபவங்களை எழுதி யிருக்கிறார்கள். சிவயோக சுவாமி களைப் பற்றியும் பலர் இந்த வகையிலே எழுதியிருக்கிறார்கள். உங்களிலே பலரும் அவரோடு நேரடியாகத் தொடர்பு கொண் டார்கள். இப்படியான மௌன அனுபவம் உங்களில் பலருக்குமே ஏற்பட்டிருக்கலாம். இந்தக் குரு சீடபரம்பரை எங்களுடைய சமய பாரம்பரியத்திலே வந்துள்ள ஒரு பெரிய கொடை — செல்வம்.

ஞானிகள் இறையுணர்வைத் தங்கள் அகக்கண்களிலே அனுப வித்தார்கள். இந்த அனுபவத்தை அவர்கள் மற்றவர்களுக்கு வார்த்தைகளால் எடுத்துக் கூற முடியாது. கண்டவர் விண்ட தில்லை என்பதை அறிவோம். அந்த ஞானிகளை, அந்த அனு பூதிமான்களை — இறையு ணர்வை அனுபவித்த அந்த மகான்களை நாங்களும் தரிசிக்கும் பொழுது, அல்லது அவர்களு டைய வார்த்தைகளைக் கேட்கும் பொழுது, எங்களுடைய மனதிலே தெளிவு ஏற்படுகிறது. அவர்க ளைப்பற்றி நினைத்தாலே தெளிவு ஏற்படும் என்கிறார் திருமூலர். "தெளிவு குரு உரு சிந்தித்தல்தானே".

பிரமனாகவும், விஷ்ணுவாகவும், மகேஸ்வரனாகவும், . அந்தப் பரப்பிரம்மமாகவும் குரு விளங்கு கிறார் என்ற சுலோகத்தை இப் பொழுது பாடினோம். மாதா, பிதா, குரு, தெய்வம் என்று சொல்லுவதை அறிவோம். இந்தக் குருதத்துவத்தை விளக்குவது தான் தக்ஷிணாமூர்த்தி வடிவம் — தத்துவம். இறைவனே ஆதி குரு — அந்த முழுமுதல் பொருள் — பரிபூரண தத்துவமே, குரு.

பரஞ்சோதி முனிவர் தக்ஷிணா மூர்த்தியின்மீது ஓர் அழகிய தோத்திரம் பாடியிருக்கிறார்.

கல்லாலின் புடை அமர்ந்து நான் மறை
ஆறங்கம் முதல் கற்ற கேள்வி
வல்லார்கள் நால்வர்க்கும் வாக் கிறந்த பூரணமாய்
மறைக்கு அப்பாலாய்
எல்லாமாய் அல்லதுமாய் இருந்த தனை இருந்தபடி
இருந்து காட்டி
சொல்லாமல் சொன்னவரை
நினையாமல் நினைத்து
பவத் தொடக்கை வெல்வாம்

"சொல்லாமல் சொன்னவரே" அந்தக்குரு — இதுதான் மௌன உபதேசம். சீடர்களும் "நினை யாமல் நினைத்தார்கள்" — அவர் கள் மறைகளை எல்லாம் கற்ற வர்கள், அறிஞர்கள், ஆனால் ஞானத்தை உணராதவர்கள். ஆனால், குருவின் முன்னால் மனதை வெறுமையாக வைத்தி ருக்கும் நிலையைப் பெற்று, அந்தப்பூரணமான சொல்ல முடியாத பொருளை உணர்ந் தார்கள்.

The Knowable unknown, என்று சொல்வார்கள். The teacher spoke in silence and the disciples were freed from all doubts. Dakshina moorthy was the first Guru of the universe.

அவர் காட்டும் சின்முத்திரை, மும்மலங்களிலிருந்தும் ஆன்மா

விடுபட்டு இறைவனை அடைவதைக் குறிக்கிறது. இதையே அந்த ஆதி குரு சொல்லாமல் சொன்னார்.

கல் ஆல் என்றால் அழிவற்றது என்பார்கள். சாதாரண ஆலமரம் அழியும். ஆலமரம் என்றால் விழுதுகள் இருக்கும். அதுதான் அதன் விசேஷம். கல் ஆல் என்றால் விழுதுகள் அற்ற ஆலமரம் என்ற குறிப்பை அறிய முடிந்தது. விழுதுகள் வேரூன்றி மரங்களாக மாறும். அவை மீண்டும் பிறக்கும். விழுதுகள் இல்லாத ஆலமரம் பிறப்பு அற்ற தன்மையைக் குறிப்பதாக இருக்கலாம் என்று தோன்றுகிறது. "பவத் தொடக்கை வெல்வாம்" என்பது பிறப்பை ஒழிப்பதாகும்.

பிறவிகள் எடுத்துக் களைத்துப் போனேன். "எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்" என்று மாணிக்கவாசகப் பெருமான் வருந்துகிறார். காரைக் காலம்மையார் "மீண்டும் பிறவாமை வேண்டும்" என வேண்டுகிறார்.

இந்தப்பிறப்பிலிருந்து விடுபடுவதுதான் மனிதப் பிறவி எடுத்ததன் நோக்கம் என்று எங்கள் சமயம் கூறுகிறது To be freed from the cycle of births and deaths. இந்த விடுதலையை உணர்த்துவதுதான் தக்ஷிணாமூர்த்தி தத்துவம்.

சிவயோகசுவாமிகள் இந்தத் தத்துவத்தை உணர்ந்தவர். அப்படியே வாழ்ந்தவர். அதையே உபதேசித்தவர்:

ஓடவும் வேண்டாம் உலரவும்
வேண்டாம்
பாடவும் வேண்டாம் பணியவும்
வேண்டாம்
தேடவும் வேண்டாம் சிந்திக்க
வேண்டாம்
சும்மா இருப்பதே சுகம்
என்றார்.

இவ்வேளையிலே தாயுமான சுவாமிகள். திருச்சி மலைக் கோட்டையிலுள்ள தாயுமான சுவாமி கோயிலிலே வீற்றிருக்கும் தக்ஷிணாமூர்த்தி மீது பாடிய ஒரு தோத்திரத்தைக் கூறி முடிக்கிறேன்.


ஐவகை யெனும் பூத மாதியை
வகுத்ததனுள்
அசரசர பேதமான
யாவையும் வகுத்து நல்
லறிவையும் வகுத்து மறை
ஆதி நூலையும் வகுத்துச்
சைவ முதலாம் அளவில் சமயமும்
வகுத்து மேற்
சமயங் கடந்த மோன
சமரசம் வகுத்த நீ யுன்னை நான்
அணுகவும்
தண்ணருள் வகுக்க இலையோ
பொய் வளரும் நெஞ்சினர்கள்
காணாத காட்சியே
பொய் இலா மெய்யர் அறிவில்
போத பரிபூரண அகண்டிதா
காரமாய்ப்
போக்குவர வற்ற பொருளே
தெய்வ மறை முடிவான பிரணவ
சொரூபியே
சித்தாந்த முத்தி முதலே
சிரகிரி விளங்கவரு
தக்ஷிணாமூர்த்தியே
சின்மயானந்த குருவே

இப்படி அந்தச் சின்மயானந்தத்தை, அந்த மௌனகுருவை வழிபடுகிறார். •

**பராசக்தி சுந்தரலிங்கம்**



# தாழ்ந்தது தங்கம்



தி.கேதீஸ்வரநாதன்

அடக்கம், பணிவு, விநயம் உள்ளோர் தாழ்மையுடன் செய்யும் பணிகள் தங்கத்திற்குச் சமம் என்றும், கர்வம், அகங்காரம் செருக்குப் பிடித்தோர் செய்யும் செயல்கள் செம்பும் துத்தநாகமும் சேர்ந்த பித்தளைக்குச் சமம் என்றும் கூறுவர்.

பாரதப்போர் தொடங்கி ஒன்பது நாட்கள் முடிந்தன. ஆனால் இன்னும் பாண்டவர்களின் ஆயுள் முடியவில்லையே என்று துரியோதனன் கோபமுற்று, அவர்களை, பீஷ்மர் மறைமுகமாக ஆதரிக்கிறார் போலும் எனக் குறை கூறினான். இதைக் கேட்ட பீஷ்மர் கோபம்கொண்டு, 'நாளை பத்தாம் நாள் போரில் அவர்களைக் கொல்லுவதாக' உறுதி அளித்தான். இச்செய்தி பாண்டவர்களின் மனைவி திரௌபதைக்கு எட்டியதும் கண்ணீரும் கம்பலையுமாக ஓடிப்போய் கண்ணபிரான் காலடியில் வீழ்ந்து கதறினாள். கண்ணன் யுக்திக்கு மன்னன். அவளைப் பார்த்து, "இப்பொழுதே ஓடிப்போய் பீஷ்மரின் காலடியில் வீழ்ந்து வணங்கு. ஆனால் நீ யார் என அடையாளம் காட்டாமல் கால்செருப்புகளைக் கழற்றிவிட்டு, கைவளையல் ஒலி கேட்க, தலையில் முக்காடு இட்டு, விடியுமுன்னர், இப்பொழுதே போய் வா" என்று சொன்னார். உடனே திரௌபதி கண்ணன் வாக்குக் கிணங்க ஓடிப்போய் பீஷ்மரின் காலடியில் வீழ்ந்து வணங்குகிறாள்.


பீஷ்மரோ தன் கூடாரத்தில் இங்கு மங்குமாய் நடந்துகொண்டு, தான் கோபத்தால் செய்த பெரிய தவறை எண்ணி வருந்துகிறார். 'சத்தியம், தர்மம், சாந்தி, அன்பு இவை எல்லாம் நிறைந்த பாண்டவர்களை எப்படி நான் கொல்வேன். அந்தப் பழி பாபம் என்னைப் பிடித்துவிடுமே' என்று மனசாட்சி

# உயர்ந்தது பித்தளை

அவரை உறுத்த கலங்கிப் போய் பசி, களைப்பு எல்லாம் மறந்து அவலப்படுகிறார். இந்த வேளை யில் ஒரு பெண் ஓடிவந்து தன் காலில் விழுந்து நமஸ்கரிக்க, கை வளையல்களின் ஓசை கேட்டு, யாரோ ஒரு சுமங்கலியாகத்தான் இருக்கவேணுமென நம்பி அவளை, "தீர்க்கசுமங்கலி பவ" (அதாவது கணவனுடன் நீடூழி வாழ்வாயாக) என வாழ்த்து கிறார். சஞ்சலங்களின் நடுவிலும் மனம் தளராது சம்பிரதாயப்படி அவளை வாழ்த்துவது அவர் பெருந்தன்மைக்கு ஓர் சான்றாகும்.

திரௌபதை உடனே எழுந்து முக்காட்டைநீக்கி, "இந்த ஒரு வாழ்த்தைப் பெறவே இந்நடு நிசியில் நான் ஓடோடி வந்தேன்" என்கிறாள். பீஷ்மரின் இவ்வாழ்த் தைப் பெற்றால் தன் கணவருக்கு பிறகு தீங்கொன்றும் நேராது என்பது அவள் கண்டு அறிந்த உண்மை. பீஷ்மர் அவள் முகத்தைக் கண் டதும் திடுக்கிட்டு, "என்ன காரி யத்தைச் செய்துவிட்டேன்" எனக் கூறி, "நீ எப்படி இந்நள்ளிரவில் இங்குத் தனியாக வந்தாய்? இது யாரு டைய யுக்தி?" எனக் கேட்டார்.

அந்த நேரத்தில் கண்ணபிரான் அங்கு தோன்றுகிறார். உடனே பீஷ்மர், "ஓ கண்ணா! இது எல் லாம் உங்கள் திருவிளையாடல் தான் என்பது இப்போது நன்றாய் விளங்குகிறது. எள்ளளவும் தப்பு இன்றி எப்படி இந்நாடகத்தை நடத்தி வைத்தீர்கள்?" என்று வின வினார். பின்னர் மனம் சற்றுத் தெளி வுற்றுப் பாண்டவர்களின் உயிரைக் காப்பாற்றியதையும், தன் மேல் அந்தக் கொலைப்பாபம் வாராது காப்பாற்றிவிட்டதையும் நினைந்து பெரும் ஆறுதல் அடைகிறார்.



அப்போது பசியைத் தாங்க முடியாமல் கண்ணனிடம் "ஏதா வது உணவு கொணர்ந்தீர்களா?" என்று அவர் கமுக்கட்டில் இருக் கும் ஒரு பொதியைக் கண்டு கேட்கிறார். கண்ணன் மெதுவாக அப்பொதியைக் கீழே நழுவ விட்டு "இவை திரௌபதைக் குரியதே" எனக் குறும்புச் சிரிப் புடன் கூறுகிறார். விழுந்தவை இரண்டு செருப்புகள் என அறிந் ததும் திரௌபதையும் பீஷ்மரும் திகைத்துப் போனார்கள்.

பீஷ்மர் கண்ணனைப் பார்த்து மீண்டும் கூறுகிறார் — "கண்ணா! யாருக்குத்தான் தெரியும் உங்கள் தெய்வீக லீலைகளின் பெருமை! மற்றவர்கள் தகுதியற்றது, தரக் குறைவானது எனத் தள்ளி வைக் கும் செயல்களைக் கூசாமல் செய்கிறீர்கள். அதுவும் உங்களைச் சரண் அடைந்த அன்பர்களைக் காக்கும் பொருட்டுச் செய்யும் உங்கள் தாழ்மை மனப்பான் மைக்கு ஓர் எல்லை இல்லையா? உங்கள் பெருந்தன்மைகளைக் காணக் காண எங்கள் உள்ளங்கள் உருகி, ஆனந்தக் கண்ணீர் வரு கிறது" — பீஷ்மர் கூறி முடிய கண்ணன் தன் வேலை முடிந்து விட்டது என்று தன் இல்லம் திரும்புகிறார்.

இந்த மாயக் கண்ணனைப் பற்றி நமது மகாகவி பாரதியார் பாடி இருப்பதைப் பார்க்கும் போது கண்ணன் எத்தனை வித வேற்று வடிவங்களைத் தாங்கி தன் லீலைகளைப் புரிந்திருக்கிறார் என அறியலாம்.

"பெண்டுகளைத் தாய்போலப்
பிரியமுற ஆதரித்து
நண்பனாய், மந்திரியாய், நல்ல
ஆசிரியனுமாய்
பண்பிலே தெய்வமாய்,
பார்வையிலே சேவகனாய்
எங்கிருந்தோ வந்தான்
இடைச்சாதி என்று சொன்னான்
இங்கிவனை யான்பெறவே என்ன
தவம் செய்துவிட்டேன்"

இக்கதையில் இருந்து நாம் படிக்க வேண்டியது: பிறர் ஒருவருக்கு நன்மை பயக்கும் எந்த ஒரு காரியத்தையும் எமது அந்தஸ்துக்குக் குறைவானது, தகுதியற்றது என ஒருபோதும் தள்ளி வைக்கக்கூடாது. தாழாமையினால் நாம் உயர்ந்தோர் என்று நினைப்பது தவறு. சேவை மனப்பான்மை உடையவர்களே மாந்தருள் மாணிக்கமாக மதிக்கப் படுவர். இந்தக் கலியுகத்திலே ஆத்மீக சம்பந்தமான சாதனைகள் எல்லாவற்றிலும் தன்னலமற்ற சேவையே மிகச்சிறந்தது என்பர் சான்றோர். இப்படியான சேவைகளை நாம் இன்றும் காணக் கூடியதாய் இருக்கின்றது.

சமீபத்தில் இந்தியாவில் இருக்கும் புட்டபர்த்திக்கு அங்கிருக்கும் அவதார புருஷனின் பிறந்தநாள் விழா பார்க்கப் போனபோது ஆயிரக்கணக்கான மக்கள் அங்கு வந்து இருந்தனர். நூற்றுக்கணக்கான தங்கும் அறைகள் பிரசாந்தியில் இருந்தபோதும் அவை நிரம்பி இருந்தபடியால் ஒரு மண்டபத்தில் தங்கியிருந்தேன். அங்கு தரையையே கட்டிலாகப் பாவித்து ஒரு நூறுபேர் வரை ஒவ்வொரு மண்டபங்களிலும் தங்கி இருந்தனர். இத்தனை பேரும் சேர்ந்து பாவிக்கும் பொது வான மலசல கூடங்கள் வேறு இடங்களில் இருந்தால் கிட்டவே போக முடியாத நிலையில் அசுத்தமாய் இருந்திருக்கும். ஆனால் இங்கேயோ தினம் நாலு ஐந்து தடவைகள் கழுவிக் கிருமி நாசினிகள் பாவித்து மிகவும் சுத்தமாக இருந்தன. கூலிக்கு வேலை செய்வோர் இங்கு யாரும் கிடையாது. எல்லோருமே தன்னலம் கருதாமல் சேவை செய்யும் தொண்டர்களாகவே காணப்பட்டனர். அவர்களுடன் அளவளாவிய போது அநேகர் பெரிய உத்தியோகம் வகிப்பவர்களாயும், பொறியாளர், மருத்துவர், கணக்குப் பரிசோதகர்களாயும் இருப்பதைக் காண மிகவும் ஆச்சரியப் படத்தக்கதாய் இருந்தது. இது மட்டுமல்லாது, சமையல் செய்வோர், கூட்டிக் கழுவிச் சுத்தம் செய்வோர் அனைவரும் தொண்டர்களாகவே இருந்தனர். இவர்கள் யாவரும் தன்னலம் கருதாது தாழ்மை மனப்பான்மையுடன் தயங்காது எந்த வித சேவைகளையும், புரிபவர்களாய் இருப்பதைக் காணக் காண சேவையின் மகத்துவம் எவ்வளவு சிறந்தது என்பது தெரிய வருகின்றது.

●

# தமிழ் வாழ்த்து

வாழ்க தமிழ்மொழி வாழ்க தமிழ்மொழி
வண்ணத் தாய்மொழி வாழிய வாழியவே!

வாழ்க தமிழ் மண் வாழ்க தமிழ் மண்
வல்லபத் தமிழ் ஈழம் வாழிய வாழியவே!

வாழ்க தமிழ் மறை வாழ்க தமிழ்மறை
வயன இறை வணக்கம் வாழிய வாழியவே!

வாழ்க தமிழ் மறம் வாழ்க தமிழ் மறம்
வண்புகழ் வனையும் மறவர் வாழிய வாழியவே!

வாழ்க தமிழ் யாப்பு வாழ்க தமிழ் யாப்பு
வழுவா யாப்பின் அறம் வாழிய வாழியவே!

வாழ்க தமிழ் கீதம் வாழ்க தமிழ் கீதம்
வடிமணித் தேசிய கீதம் வாழிய வாழியவே!

வாழ்க தமிழ்க் கொடி வாழ்க தமிழ்க் கொடி
வானளாவி வேங்கைக் கொடி வாழிய வாழியவே!

வாழ்க தமிழ்ச் சின்னம் வாழ்க தமிழ்ச் சின்னம்
வயிரப் பனை இலச்சினை வாழிய வாழியவே!

வாழ்க தமிழ் விழுமியம் வாழ்க தமிழ் விழுமியம்
வழிவழியே தடம் பதித்து வாழிய வாழியவே!

வாழ்க தமிழ்ப் புலம் வாழ்க தமிழ்ப் புலம்
வதியும் புலம் எல்லாம் வாழிய வாழியவே!


வாழ்க தமிழ் இனம் வாழ்க தமிழ் இனம்
வயமொடு வகுளத் திராவிடம் வாழிய வாழியவே!

வாழ்க தமிழ் தமிழ் வாழ்க தமிழ் தமிழ்
வளமொடு வழி நாளிலும் வாழிய வாழியவே!

மனோ ஜெகேந்திரன்

கடந்த இதழில் வெளிவந்த இந்தக் கவிதையில் தவறுதலாக விடப்பட்ட இரு வரிகளுடன் இக்கவிதையை மீண்டும் பிரசுரிக்கின்றோம்.


– ஆசிரியர்



# உங்கள் சிந்தனைக்கு...

**☛ சிந்தனை 1**

அதிகவிலைக்கு விற்பதற்காக ஒரு கடையில் கூட்டினுள் அடைத்து வைக்கப்பட்டிருந்த ஒரு பச்சைக்கிளியைப் பார்த்து அக்கடைக்கு வந்த ஒருவர் "அற்பப் பறவையே! உனது விலை 10000-00 ரூபா என்று குறிக்கப்பட்டுள்ளதே! உனக்கு என்னைப்போல் பேசத் தெரியுமா?" என்று கேட்டார். உடனே அதற்கு அக்கிளி அவரைப் பார்த்து "அற்ப மனிதா! உனக்கு என்னைப் போல் பறக்கத் தெரியுமா?" என்று கேட்டது. உங்களுக்கு ஏதும் புரிகிறதா? ஏதும் புரியாவிடில் நீங்கள் அறிஞர்களே.



**☛ சிந்தனை 2**

ஒரு குடும்பத்தில் கணவனும் மனைவியும் முறையே அரசனும் மந்திரியுமாகச் செயற்பட வேண்டும். அப்போதுதான் குடும்ப இராச்சியம் வெற்றி நடைபோட்டுச் செல்லும். இன்றைய எல்லா நாட்டுத் தலைவர்கட்கும், ஏனைய முக்கியப் பொறுப்பில் உள்ள ஏனைய தலைவர்கட்கும் அக்கால அரசசபை மந்திரியைப் போல ஆலோசனை வழங்கவென ஆலோசகர்கள் அமர்த்தப்பட்டிருக்கிறார்கள். அத்தலைவர்களை வழிநடாத்திச் செல்வது இந்த ஆலோசகர்களே. இதன் முழு அர்த்தத்தையும் நாம் நன்குப் புரிந்துகொள்ள வேண்டும். எல்லாப் பிரச்சனைகளுக்கும் இதன் அர்த்தத்தைப் புரியாததே காரணமாகும்.

☛

### ☛ சிந்தனை 3

**பு**கழ்பெற்ற சமயப் பெரியார் ஒருவர் தனது சமயச் சொற்பொழிவுக்கூட்டம் ஒன்றின் இறுதியில் "கோபமே பாவத்திற்குக் காரணம்" என்று கூறி, தனது சொற்பொழிவை முடித்தார். அப்போது கூட்டத்தின் முன்வரிசையில் அமர்ந்திருந்த ஒரு சிறுவன் எழுந்து "குருவே என்ன கூறுகிறீர்கள்?" என்று மிக அமைதியாகக் கேட்டான். அதற்கு அக்குருவானவர் "கோபமே பாவத்திற்குக் காரணம்" என்று கூறினார். உடனே அச்சிறுவன் மீண்டும் "என்ன குருவே கூறுகிறீர்கள்? எனக்குப் புரியவில்லை" என்று கேட்டான். அதற்கு மீண்டும் அக்குருவானவர் அச்சிறுவனைப் பார்த்து "கோபமே பாவத்திற்குக் காரணம்" என்று கூறினார். அச்சிறுவன் மூன்றாம் முறையாகவும் "எனக்கு இன்னும் புரியவேயில்லை. என்ன குருவே கூறுகிறீர்கள்?" என்று மிக அமைதியாகக் கேட்டான். அதற்கு அக்குருவானவர் "டேய் மடப்பயலே, கோபம்தாண்டா நாம் செய்யும் பாவங்களுக்கு எல்லாம் காரணம்" என்று காரமாக உரத்துக் கூறினார். உடனே அச்சிறுவன் "சரி சரி, இப்ப எனக்குப் புரிந்துவிட்டது. அதாவது மூன்றாம் முறை கோபித்தால் பாவமில்லை" என்று கூறி அமர்ந்து கொண்டான்.


☛

### ☛ சிந்தனை 4

**நா**ம் எல்லோரும் ஆன்மீக தாகத்துடன்தான் பிறந்துள்ளோம். எல்லோருக்கும் அவரவர் ஆழ்மனதில் ஆன்மீக தாகம் இருந்துகொண்டே இருக்கிறது. அது ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு காலங்களில் வெளிப்படுகிறது. சிலருக்கு இளமைப் பருவத்திலும், சிலருக்கு முதுமைப் பருவத்திலும் வெளிப்படுகிறது. ஆனால் வேறு சிலருக்கு இப்பிறவியில் அது வெளிப்படாமல் அடுத்த அடுத்தபிறவிகளில் வெளிப்படுகிறது. எனக்கு இன்னும் நாலைந்து பிறவிகளின் பின்னர் வெளிப்படும் போல் தோன்றுகிறது என்று ஒரு முனிவர் கூறினார். உங்களுக்கு எப்போது வெளிப்பட உள்ளது?

### ☛ சிந்தனை 5

"**நூ**று வயதுவரை ஆரோக்கியமாக வாழ்வது எப்படி?" என்ற ஒரு புத்தகத்தை எழுதியவர் தனது 60வது வயதில் காலமானார். அவர் எழுதிய அப்புத்தகத்தைத் தவறாது வாங்கிப் படிக்கும்படி ஒரு அறிஞர் எனக்கு அறிவுரை கூறினார். எனக்கு ஏன் என்று அப்பொழுது புரியவில்லை. ஏன் என்று உங்களுக்குப் புரிகிறதா?



**T. இராசலிங்கம்**


# சித்த மருத்துவம்

சித்த மூலிகை மருத்துவம் பற்றிய இந்தக் கட்டுரைத் தொடரின் இரண்டாம் பாகம் இந்த இதழில் இடம் பெற்றுள்ளது.

## ஆ

| | |
|---|---|
| ஆகாசக்கத்தரி | Hibiscus longifolius |
| ஆகாசத் தாமரை | Pistia stratiotes |
| ஆகாசவல்லி | Menyanthes cristata |
| ஆகிருநனந்தம் (புன்கு) | Dalbergia arborea |
| ஆசியம் (கருஞ்சீரகம்) | Nigella sativa |
| ஆஞ்சில் (சங்கு) | Monetia tetracantha |
| ஆடாதோடை | Adhatoda vasica |
| ஆதம்பேதி | Indigofera enneaphylla |
| ஆதிகம் (சிறுகுறிஞ்சா) | Gymnema sylvestris |
| ஆயில்மரம் | Chickrassia tabularis |
| ஆள்வள்ளி | Jatropha manihot |
| ஆமலகம் (நெல்லி) | Phyllanthus emblica |
| ஆமாகோளா (கடுக்காய்ப்பூ) | Terminalia chebula |
| ஆமணக்கு | Jatropha glauca |
| ஆம்பல் (அல்லி) | Nymphaea alba |
| ஆம்பு (காய்ஞ்சொறி) | Tragia involucrata |
| ஆம்புலம் (சூரை) | Zizyphus glabrata |
| ஆமிரம் (மாமரம்) | Mangifera indica |
| ஆரம் (அத்தி மரம்) | Bauhinia recemosa |
| ஆருகதம் (நான்மரம்) | Eugenia Caryophyllifolia |
| ஆரை (நீராரை) | Marsilea quadrifolia |
| ஆர்துபம் (அரத்தை) | Alpinia galanga |
| ஆர்த்திரகம் (இஞ்சி) | Zingiber Officinalis |
| ஆல் (இத்தி மரம்) | Ficus Virens / Bengenlensis |
| ஆவாரை (நிலவாகை) | Cassia Auriculata |
| ஆவிபத்தம் (பேராமுட்டி) | Pavonia Odarata |
| ஆழிவிரை | Linum Usitatissimum |





கந்தையா குமாரசாமி நல்லைக் குமரன்

| | |
|---|---|
| ஆறகோரம் (கொன்றைமரம்) | Cathartocarpus fistula |
| ஆற்றுப்பூவரசு | Trewia nudiflora |
| ஆற்றுமுள்ளி | Dilivaria ilicifolia |
| ஆற்றுப்பாசி | Caulinia indica |
| ஆற்றுமேலழகி | Celsia coromendaliana |
| ஆனத்தேர் (விடத்தேர்) | Mimosa |
| ஆனைத்திப்பிலி | Pothos officianalis |
| ஆனைநெருஞ்சில் | Pedalium murex |
| ஆனைவணங்கி (தேட்கொடுக்கி) | Heliotropium indicum |
| ஆதொண்டை (காற்றோட்டி) | Capparis horrida |
| ஆடுதீண்டாப்பாளை | Aristolochia Bracteata |
| ஆகாசக்கருடன் கிழங்கு | Bryonia Epigoea |

ஆசியம் : கருஞ்சீரகத்தின் மறுபெயர் ஆசியம். கார்போக அரிசியும் காட்டுச் சீரகமும் கருஞ்சீரகமும் வெண்புள்ளிகள் மறைய அருமருந்து.

ஆமலகம் : நெல்லியின் மறுபெயர் ஆமலகம். பித்தக்கோளாறு களுக்கு அருமருந்து.

ஆனைவணங்கி : பெருந்தேட் கொடுக்கியின் மறுபெயர் ஆனை வணங்கி. பலவகை மேகநோய்களைத் தீர்க்கும் தன்மை உண்டு. உடல்தாதுக்களை அழிக்கும் நுண்கிருமிகளை அகற்றும் ஆற்றல் இதற்கு உள்ளதால் சுடுகாட்டுமீட்டான் என்ற பெயரும் உண்டு.

ஆதொண்டை : காற்றொட்டியின் மறுபெயர் ஆதொண்டை. சிரசு நோய்களான தலையிடி கபாலக்குத்துக்கு நல்ல மருந்து.

ஆகாசக்கருடன் கிழங்கு : கொல்லன்கோவை அல்லது கிளிமூக்கு அதன் மறுபெயர்கள். அரையாப்புக்கட்டி, பாலியல் நோய், குழிரணம் ஆகியவற்றுக்கு நல்ல மருந்து.

ஆவாரம்பட்டை : நாவல்பட்டையும் ஆவாரம்பட்டையும் மகளிரின் பெரும்பாட்டுக்கு நல்ல மருந்துகள்.

ஆவிரை : ஆவாரை, மேகாரி, ஓமபுட்பி, ஆகலி என்ற பெயர்களும் உண்டு. மேகநோய், வெள்ளைப்படுதலுக்கு நல்ல மருந்தாகும்.

## இ

| | |
|---|---|
| இகுடி (ஆதொண்டை) | Capparis horrida |
| இங்கிரி (கஸ்தூரி) | Musk |
| இங்கு (பெருங்காயம்) | Narthex assafoetida |
| இங்குசுக்காண்டான் | Asteracantha longifolia |
| இசங்கு (சங்கஞ்செடி) | Azima / Monetia tetracanta |
| இசுதாரு (கடம்புமரம்) | Barringtonia racemosa |
| இச்சியல் (கடுகுரோகிணி) | Helleborus niger |
| இஞ்சி | Zingiber officianalis |
| இந்தம் (புளியமரம்) | Tamarindus indica |
| இந்திரபம் (வெட்பாலை) | Wrightia antidysentirica |

| | |
|---|---|
| இந்திரவல்லி (பிரண்டை) | Cassyta filiformis |
| இந்திரவாசம் (நெய்தல்) | Nymphae pubeseens |
| இந்திவரம் | Pontederia vaginalis (blue lotus) |
| இந்துப்பு | Chloride of sodium |
| இந்துளி (பெருங்காயம்) | Narthex assafoetida |
| இந்துளம் (கடம்பமரம்) | Nauclea cadamba |
| இந்துள் (நெல்லி) | Emblica Officianalis |
| இமலம் (மரமஞ்சள்) | Cascinum fenestratum |
| இம்பூறல் (சாயவேர்) | Oldenlandia Umbellata |
| இம்பூறற்சக்களத்தி | Hedyotis dichotoma |
| இயல்பூதி (வில்வம்) | Ogle marmelos |
| இயல்பூதி (நாய்வேளை) | Polanisia icosandra |
| இயாகம் (கொன்றை) | Cassia |
| இரதி (இலந்தைமரம்) | Jujube / Ziziphusjujuba |
| இராகி (கேழ்வரகு) | Elensine Cozacana |
| இராமடம் (பெருங்காயம்) | Assafoetida |
| இரும்பலி (இரும்பிலி) | Ferreola buxifolia |
| இராவடம் (அசோகு) | Guatteria longifolia |
| இராவடி | Elettaria cardamomum (cardomon) |
| இராவணன்மீசை | Spinifex sqarrosus |
| இருப்பவல் | Gnaphalium indicum |
| இருப்பை (இலுப்பை) | Bassia Longifolia |
| இருப்புமுறி | Indigofera argentea |
| இருவேலி (வெட்டிவேர்) | Andropogon Muricatus |
| இருளி (கருஞ்சீரகம்) | Nigella |
| இலகம் (ஊமத்தை) | Datura |
| இலகுசம் (ஈரப்பலா) | Artocarpus lacucha |
| இலட்சுமணம் (தாளி) | Convolvulus |
| இலவங்கம் (கராம்பு) | Caryophyllus aromaticus (clove) |
| இலவங்கப்பட்டை | Laurus cassia |
| இலவங்கப்பூ | Port crave caryophallus aromaticus |
| இலவு | Eriodendron anfractuosum |
| இலாஞ்சி (ஏலம்) | Elettaria cardamomum |
| இலுப்பைமரம் | Bassia longiflora |
| இலைக்கள்ளி | Euphorbia neriifolia |
| இலந்தை | Bhir / Ziziphus racemosus |
| இலாமிச்சை | Andropogon muricatum |

இமயம் : *மரமஞ்சள் மறுபெயர். ஏற்புவலி ஏற்படாமல் தடுக்க வல்லது.*

இயல்பூதி : *வில்வம் என்பது மறுபெயர். இலை இரத்தத்தைச் சுத்திகரிக்கும். மேகநோய்களைத் தீர்க்கும். தொய்வு நோயைப் போக்கும். பூநரம்புப் பலயீனத்தைப் போக்கும். பிஞ்சு குடற் புண்ணைக் குணமாக்கும். பழம் கண்நோய்களைப் போக்கும். வேர் தேகபுஷ்டி, உடல்அழகைக் கொடுக்கும். அதனாலேயே இந்துக்கள் அதனைத் தெய்வாம்சம்மிக்கது என்று கொள்கின்றார்கள்.*

இஞ்சி : *தோல்நீக்கி, தேனில் ஊறவைத்துத் தினமும் கற்ப முறைப்படி உட்கொண்டால் நரை திரை மூப்பு அகலும்.*

(தொடரும்)

# புகழ் பெற்ற ஈழத்துப் பாடசாலைகள்



**கலப்பையில்** "புகழ்பெற்ற ஈழத்துப் பாட சாலைகள்" என்ற தொடரை அறிமுகப் படுத்தியிருந்தோம். இந்தத் தொடரில் வாசகர்கள் எவரும் தமது பாடசாலை களைப் பற்றி எழுத முன்வரலாம். அல்லது உங்கள் பாடசாலையின் பழைய மாணவரையோ அல்லது ஆசிரியரையோ உங்கள் பாடசாலையைப் பற்றி எழுதும் படி கேட்கலாம்.

இந்த வகையில் இவ்விதழில் வேலணை மத்திய மகாவித்தியாலயம் இடம் பெறு கின்றது. எம்மையெல்லாம் கல்வி, கலை, கலாசாரத்தில் மட்டுமல்லாமல் விளை யாட்டுத் துறையிலும் மேன்மையடையச் செய்த எமது பாடசாலைகளை மீண்டும் ஒருமுறை நினைவுகூருவோம்.

ஆசிரியர்.

# தீவகத் தீபம் – வேலணை சேர் வைத்தியலிங்கம் துரைசுவாமி மத்திய மகா வித்தியாலயம்

இலங்கைத்தீவின் வட முனையின் மேற்குத் திசையில் சப்ததீவுகள் காணப்படுகின்றன. அவையாவன: நெடுந்தீவு, நயினா தீவு, அனலைதீவு, எழுவைத்தீவு, லைடன்தீவு, புங்குடுதீவு, மண்டைத்தீவு என்பனவாகும். இவற்றுள் பெரியது லைடன்தீவு, சிறியது எழுவைத்தீவு. கடலால் பிரிக்கப்பட்டிருப்பது இவற்றின் அபிவிருத்திக்குப் பாதகமாக அமைந்துள்ளபோதிலும் அவற்றின் கன்னித்தன்மை பாதுகாக்கப் பட்டு வந்துள்ளது என்றே கூற வேண்டும். புங்குடுதீவுப் பாலமும் பண்ணைப்பாலமும் இவற்றைக் குடாநாட்டுடன் தரைவழியாக இணைத்துள்ளன.

சப்ததீவுகளில் ஒன்றான லைடன்தீவில் வேலணையூர் அழகுற அமைந்துள்ளது. இங்குள்ள மக்கள் பழைமையைப் பேணி சிறப்பான கொள்கைகளுடன் வாழ்ந்து வந்தனர். விவசாயம் செய்யக்கூடிய பகுதிகளில் விவசாயத்திலும், கடற்கரையை அண்டிய பகுதிகளில் மீன்பிடித் தொழிலிலும் பெரும்பான்மை யானவர்கள் ஈடுபட்டிருந்தனர். ஆசிரியர்கள், அரசாங்க உத்தியோகம் பார்த்தவர்கள், ஆயுர்வேதவைத்தியர்கள் நன்மதிப் போடு வாழ்ந்தனர்.

குருகுலக் கல்விமுறை கல்வி அபிவிருத்தியின் முன்னோடி அங்கமாகும். மண்டைத்தீவு, வேலணை, கரம்பொன், நயினா தீவு, அனலைதீவு, நெடுந்தீவு ஆகியவற்றில் குருகுலக் கல்வி முறை இருந்துவந்தது குறிப் பிடத்தக்கது. ஆறுமுகநாவலர் பரம்பரை குருகுலக்கல்வி முறையும் காணப்பட்டது. தீவக மக்களின் கல்விவளர்ச்சியில் குருகுலக் கல்விமுறை, தனியார் பாடசாலைகள், மிசனறி பாட சாலைகள், இந்து போர்ட் பாட சாலைகள், அரசினர் பாட சாலை கள் முக்கியப் பங்கு வகித்தன.

வேலணை சைவமும் தமிழும் கமழுமிடம். லைடன் தீவின் சிறந்த துறைமுகமாக விளங்கிய ஊர்காவற்றுறையில் ஆங்கில மொழி மூலம் கல்வி கற்கும் வசதி யுடன் அர்ச். அந்தோனியார் பாடசாலை, அதற்கு அண்மை யாகக் கரம்பனில் சிறிய புஷ்ப மகளிர் கல்லூரி என்ற கத்தோ லிக்கப் பாடசாலைகளிருந்தன. தூரம், மதம், பணம் என்பன பெரும்பான்மையோருக்கு இவ் வாய்ப்புக்குத் தடையாய மைந்தன. ஆங்கிலமொழி மூலம் கல்வி கற்க ஒரு சில பணம் படைத்த பெற்றோர் தமது பிள்ளைகளைப் பல சிரமங் களின் மத்தியில் யாழ்ப்பாணத் தில் உள்ள பாடசாலைகளில் சேர்த்துவிட்டனர். இத்தகைய வாய்ப்பு இல்லாத பெரும் பான்மை மாணவர்கள் ஊரி லேயே கல்வியைத் தொடர்ந் தனர். ஆங்கிலமொழி மூலக் கல்விக்கூடங்கள் இல்லாமை

**கோசலை மோகனதாசன்***

மக்கள் மத்தியில் ஒரு தாக்கமாக இருந்தது.

இச்சந்தர்ப்பத்தில் *1940*களில் வேலணையில் ஒரு மறுமலர்ச்சி யேற்படத் தொடங்கியது. வேலணை கிராமச் சங்கம், ஊர் காவற்றுறை நகரசபை போன்றவை உள்ளூர் விடயங்களைக் கவனித்தது. வேலணை கிராமச் சங்கத் தலைவராக இருந்த ஆசிரிய மணி இ. மருதையனார் அவர்கள் அக்காலத்தில் இந்து இளைஞர் சபை ஒன்றை அமைத்தார். இந்தியாவிலிருந்தும் வேறு வெளி யிடங்களிலிருந்தும் பெரியார்கள் வந்து மக்களுக்கு சைவசித்தாந்தம் சம்பந்தமான பலஅறிவுரைகள் வழங்க, திருமுறைவிழா, சமய சம்பந்தமான விழாக்கள் நடாத்தினார்.

இலங்கை சுதந்திரம் அடையு முன்னர் அரசாங்க சபையில் வலிகாமம் மேற்குத் தீவுப்பகுதிப் பிரதிநிதியாகப் பல ஆண்டுகள் இருந்து, கடைசி பத்து வருடங்கள் தலைவராக (Speaker) இருந்து இலங்கையிலுள்ள சகல இன மக்களும் பாராட்டத் தக்கவராக இலங்கைத்தமிழ் மக்களுக்கும் சிறப்பாகத் தீவுப்பகுதி மக்களுக்கும் பெருமை தேடிக் கொடுத்தவர் வேலணையைச் சேர்ந்த சேர். வைத்தியலிங்கம் துரை சுவாமி அவர்கள். அவர் வேலணையில் ஆஸ்பத்திரிகள் ஆரம்பிப்பதற்குத் தனது காணிகளையே கொடுத்து உதவியவர்.

*1945* அளவில் அரசாங்க சபையில் கல்வி மந்திரியாக இருந்தவர் திரு. C.W.W. கன்னங்கரா அவர்கள். தான் பட்ட கஷ்டம் இலங்கையின் கிராமப்புற வறிய மக்கள் அனுபவிக்காமல் சிறப்பாக, சகலமாணவர்களும் ஆங்கிலத்தை இலவசமாகக் கற்பதற்கு வசதியாக இலங்கையில் தேசிய நோக்கில் அரசாங்கப் பாடசாலைகளை அமைக்க முற்பட்டார். தொகுதிக்கொன்றாக மத்திய கல்லூரிகள் விதந்துரைக்கப் பட்டன.

வலிகாமம் மேற்குத் தீவுப் பகுதியில் காரைத்தீவில் இந்துக் கல்லூரியும், சுழிபுரத்தில் விக்ரோறியாக் கல்லூரியும், வட்டுக் கோட்டையில் யாழ்ப்பாணக் கல்லூரியும் இருந்தன. அன்று வடபகுதி கல்விப் பணிப்பாளராகத் தலைமைப் பதவியில் இருந்தவர் சுழிபுரத்தைச் சேர்ந்தவர். விக்ரோறியாக் கல்லூரி சிறப்பான கட்டிடங்களுடன் இருந்தமையால் அக்கல்லூரி, மத்திய கல்லூரிக்கென சிபாரிசு செய்யப்பட்டது.

திரு. இ. மருதையனார் அவர்கள் சேர் வைத்தியலிங்கம் துரைசுவாமி அவர்களிடம் ஆங்கிலக் கல்வி கிடைப்பதற்குத் துணையெதுவுமின்றியிருந்த வேலணையின் நிலைபற்றியும் அங்கிருந்த மக்கட்தொகை, பெரும்பாலானோரின் பணவசதிக்குறைவு என்பன பற்றியும் கூறிநின்றார். மேலும் அவர் பொதுமக்களிடம் பணம் சேர்த்து கொட்டில்கள் அமைக்கக் கொடுத்துதவ மத்திய கல்லூரி வேலணைக்கே சிபாரிசு செய்யப்பட்டது.

கல்லூரி முதலில் இயங்க இடம் கொடுத்தது வேலணை மேற்கு சைவப்பிரகாசவித்தியாசாலை. அங்கே உள்ள காணியில் மாணவர்கள் படிப்பதற்கு வசதியாகத் தற்காலிகக் கொட்டகைகள் போடப்பட்டு மத்திய கல்லூரி

1945ம் ஆண்டு நவம்பர் மாதம் ஆரம்பிக்கப்பட்டது. கல்லூரியின் ஆரம்பவிழாவிற்கு மந்திரியவர்களே வருகை தந்து சிறப்பித்த தோடமையாது ஆரம்ப கர்த்தாவாகவிருந்த ஆசிரியமணி இ. மருதையனார் அவர்களைச் சிறப்பாகப் பாராட்டியும் சென்றார்.

இதனால் தமிழ்மொழி மூலம் கல்வி பெற்றுவந்த தீவக மாணவர்கள் அன்னியமொழியான ஆங்கிலமொழியைக் கற்கவும் அதில் பாண்டித்தியம் பெறவும் முடிந்தது. பணம் படைத்தவர்களின் ஏகபோக உரிமையாக இருந்த ஆங்கிலமொழி மூலமான கல்வியைப் பாமரமக்களும் பெறுவதற்கு வாய்ப்பு ஏற்பட்டது ஒரு வரப்பிரசாதம் எனலாம். ஆழமானதும் விரிவானதும் வேறுபட்ட துறைகளிலானதுமான அறிவைப் பெறுவதற்கு ஆங்கில மொழி உதவுகின்றது எனலாம்.

ஆரம்பத்தில் வட்டுக்கோட்டையைச் சேர்ந்த அதிபர் திரு. A.K. கந்தையா அவர்களின் கீழ் நான்கு உதவி ஆசிரியர்களுடனும் ஐம்பது மாணவர்களுடனும் ஆரம்பிக்கப்பட்ட கல்லூரி வருடந்தோறும் அயற் கிராமங்களில் உள்ள பாடசாலைகளில் இருந்து ஐந்தாம் வகுப்புப் படித்து முடித்த மாணவர்கள் பலர் வந்து சேர்ந்ததால் மாணவர் தொகை வருடாவருடம் அதிகரிக்கத் தொடங்கிவிட்டது.

தீவகத்தில் பல பாடசாலைகளில் இருந்து புலமைப்பரிசில் பெற்று வந்த மாணவர்களை, ஆரம்பத்தில் ஆண்பிள்ளைகள் வேறாகவும் பெண்பிள்ளைகள் வேறாகவும் பிரிக்கப்பட்டு தனியார் வீடுகளில் இருந்து படிக்க ஒழுங்கு செய்திருந்தனர்.

1951இல் மயிலிட்டியைச் சேர்ந்த திரு. V. தம்பு அவர்கள் அதிபராக இருந்த காலத்தில் அரசாங்கம் கல்லூரிக்கென வாங்கிய நிலத்தில் புதியகட்டிடம் கட்டுவதற்காக, அன்று தேசமுதல்வராகவிருந்த சோல்பரிப்பிரபுவினால் அத்திவாரக்கல் நாட்டப்பட்டு, அழகான இருமாடிக் கட்டிடம் அமைக்கப்பட்டது. மாணவர்களுக்கு விடுதியும் கட்டப்பட்டு 1954இல் பிரதம மந்திரியாக இருந்த சேர். ஜோன் கொத்தலாவல அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

அதிபர் திரு V. தம்பு அவர்கள் காலத்தில் அவரதும் அவருடன் இருந்த உதவி ஆசிரியர்களுடைய விடாமுயற்சியினாலும் கல்லூரி மாணவர்கள் விஞ்ஞானம், கணிதம், சங்கீதம், பரதநாட்டியம், கைப்பணி, விளையாட்டு முதலிய பல துறைகளிலும் திறமை பெற்றவர்களாக விளங்கியதால் யாழ்ப்பாணத்தில் இருக்கும் உயர்ந்த கல்லூரிகளுக்கு நிகரான தரத்தில் தீவகத்தின் தீபமாக இக்கல்லூரி விளங்கியது. இவரது காலத்தில் பழைய மாணவர்கள் சிறப்பான பட்டதாரி ஆசிரியர்களாக இங்கே வந்திணைந்து கொண்டனர். அதன் பயனாக மாணவர்கள் கலை, விஞ்ஞானம், சட்டம், தொழில்நுட்பம், பொறியியல், மருத்துவம், விவசாயம் முதலான பல துறைகளிலும் படிப்பைத் தொடர்ந்தனர். ஏறக்குறைய 60 ஆசிரியர்களையும் 1800 மாணவர்களையும் கொண்டதாக இக்கல்லூரி விளங்கியது.

வேலணை மத்திய கல்லூரி

யின் புகழ்பூத்த அதிபர்களாக திரு தம்பு அவர்களின் பின் திரு. A.T. சபாரட்னம், திரு. J.S. அரியரட்னம், திரு. குணபாலசிங்கம் போன்றோரைக் குறிப்பிடலாம். மற்றும் கல்லூரியின் பழைய மாணவர்கள் அதிபர்களாகவும் ஆசிரியர்களாகவும் இருந்து வருகின்றமை பாடசாலை வளர்ச்சிக்குப் பேருதவியாகும்.

இக்கல்லூரி ஆரம்பிக்கும் போது அரசினர் வேலணை மத்திய கல்லூரி எனவும், இடைக் காலத்தில் இலங்கையிலுள்ள மத்திய கல்லூரிகள் அனைத்தும் மத்திய மகாவித்தியாலயங்களாக மாற்றப்பட்டபோது வேலணை அரசினர் மத்திய மகாவித்தியாலயம் எனவும், இக்கல்லூரி வேலணையில் ஸ்தாபிக்கக் காரணமாக இருந்த சேர். வைத்தியலிங்கம் துரைசுவாமி அவர்களுடைய ஞாபகார்த்தமாக வேலணை சேர் வைத்தியலிங்கம் துரைசுவாமி மத்திய மகாவித்தியாலயம் என 1982இலும் மாற்றம் பெற்று இன்று இப்பெயருடனேயே இயங்கி வருகின்றது.

1945 தொடக்கம் 1990 வரையும் இக்கல்லூரியிற் காலத்துக்குக் காலம் இருந்த அதிபர்களாலும் உதவிஆசிரியர்களாலும், பொருளாதார அடிப்படை வசதியற்ற தீவுப்பகுதி மாணவர்களிற் பலர் ஆங்கிலஅறிவுடன் விஞ்ஞான, கணிதபட்டதாரிகளாய், பல்கலைக்கழகப் பேராசிரியர்களாய், பொறியியலாளர்களாய், அரசாங்க உத்தியோகஸ்தர்களாய், மருத்துவர்களாய் இலங்கையிலும் வெளிநாடுகளிலும் கடமை பார்த்து, கற்ற கல்லூரிக்கும், தீவகத்திற்கும் பெரும்புகழைத் தேடிக் கொடுத்தனர்.

1990ல் இலங்கை இராணுவம் தீவுப்பகுதியுட் பிரவேசித்ததும் தீவுப்பகுதி மக்கள் புலம்பெயர்ந்து யாழ்ப்பாணத்திற்கும் வெளிநாடுகளுக்கும் சென்றமையால் கல்லூரியை நடத்த முடியாமற் போய் விட்டது.

அப்போதிருந்த அதிபர் திரு பொ. கேதாரநாதன் அவர்களும் அவருடன் இருந்த உதவி ஆசிரியர்களும் யாழ்ப்பாணத்திலிருந்த இக்கல்லூரி மாணவர்களை ஒன்று சேர்த்து யாழ்ப்பாணம் கொட்டடி நமசிவாய வித்தியாசாலையின் ஒரு பகுதியில் நடாத்தி வந்தனர். வெளிநாடுகளிலிருந்த பழைய மாணவர்களைத் தொடர்பு கொண்டு பழைய மாணவர் சங்கங்கள் அமைப்பித்து அவற்றின் மூலம் பாடசாலைக்கு உதவி பெற்று 1996ஆம் ஆண்டு வரையும் யாழ். இந்து ஆரம்ப பாடசாலைக்கண்மையில் தற்காலிகக் கொட்டில்களை அமைத்து பாடசாலை இயங்கிற்று.

1990இல் புலம்பெயர்ந்த தீவுப் பகுதி மக்களிற் சிலர் 1996இல் திரும்பவும் தங்கள் இருப்பிடங்களுக்குச் சென்று குடியேறியதனால் தீவுப்பகுதியில் உள்ள சில பாடசாலைகள் குறைந்த எண்ணிக்கையுள்ள மாணவர்களுடன் ஆரம்பிக்கப்பட்டன.

அப்போது மத்திய மகா வித்தியாலயத்திலும் சூழலில் உள்ள வீடுகளிலும் இராணுவம் இருந்தமையால் தீவுப்பகுதிக்குத் திரும்பிய மத்திய மகா வித்தியாலய மாணவர்களை ஒன்று சேர்த்து வேலணை கிழக்கு மகா வித்தியாலயத்தின் ஒரு பகுதியில் உப்அதிபர் திரு பொன். ஈசனுடன் ஆசிரியர்கள் கற்பித்து வந்தனர்.

இக்காலப் பகுதியில் வேலணையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் மத்திய மகா வித்தியாலயப் பழைய மாணவனுமாகிய திரு. சு. இரத்தினராசா யாழ்ப்பாணக் கல்விப் பணிப்பாளராக இருந்தமையால் அவருடைய உதவியுடன், யுத்தத்தினால் சிதைந்து போயிருந்த வேலணை சரஸ்வதி வித்தியாசாலையைத் திருத்தி அமைத்து வேலணை மத்திய மகா வித்தியாலய மாணவர்களை மேற்படி வித்தியாசாலையிற் சேர்த்துப் படிப்பித்து வந்தனர்.

இக்காலப் பகுதியில் அதிபராக இருந்த பழைய மாணவன் திரு. K. கணேசலிங்கம் அவர்களதும், அவருடன் கற்பித்த உதவி ஆசிரியர்களதும் தீவிர முயற்சியால் மாணவர் தொகையும் ஆசிரியர் தொகையும் ஓரளவு அதிகரிக்கத் தொடங்கியது.

வேலணை உதவி அரசாங்க அதிபர் அவர்களதும் யாழ்ப்பாணக் கல்விப்பணிப்பாளர் அவர்களதும் முயற்சியால் மத்திய மகா வித்தியாலயத்திலுள்ள இராணுவத்தினரை விலகச் செய்து 1998 இல் இருந்து உரியகட்டிடத்தில் நடைபெற்று வருகின்றது.

கல்லூரி மீண்டும் தனது ஆரம்ப இடத்தில் செயற்படுகின்றபோதிலும் ஆரம்பத்தில் பாடசாலை இருந்தநிலையில் தான் உள்ளது. ஆசிரியரின் தொகையும் வகையும் போதிய தாக இல்லை. ஆய்வுக்கூடவசதி, நூல்நிலைய வசதி, கல்விப் புற வசதிகள் என்பன திருப்திகரமானதாக இல்லை. இருந்தும் சொந்த மண்ணுக்கு வந்ததையிட்டுச் சிந்தையில் நிம்மதியும் நிறைவும் ஏற்பட்டுள்ளது.

இக்காலகட்டத்தில் கொழும்பிலும் கனடா, லண்டன், அவுஸ்திரேலியா, பிரான்சு முதலான நாடுகளிலும் இருக்கும் கல்லூரிப் பழைய மாணவர்கள் சங்கங்கள் அமைத்துப் பொருள் சேர்த்து அனுப்பிக் கல்லூரி புத்துயிர் பெற்று நடக்க உதவிவருகின்றனர்.

அவுஸ்திரேலியப் பழைய மாணவர் சங்கம் அங்குள்ள மாணவர்களை, படிப்பதற்கு ஊக்குவிக்கும் முகமாக வருடந்தோறும் மிகத்திறமையாகச் செய்யும் மாணவர்க்குப் புலமைப் பரிசில் திட்டத்தை அமுல்படுத்தி வருகின்றது. நூலகப்புனருத் தாரணத்திற்கும், மேற்பார்வையாளர் ஒருவரை வைத்திருப்பதற்கும் பணஉதவி செய்து வருகின்றது. மேலும் மதிய உணவு கொடுப்பதற்குரிய அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்யவும், மாணவர்கள் மாலையில் விடுதியில் தங்கிப் படிப்பதற்குரிய உணவு வகைச் செலவுகளையும் கொடுத்து உதவுகின்றது.

ஏறக்குறைய 600 மாணவர்களுடனும் 30 ஆசிரியர்களுடனும் கல்லூரி நடைபெறுகின்றது. மீண்டும் 6ந்தரம் தொடங்கி G.C.E. (A/L) வரையும் வகுப்புகள் நடைபெறுகின்றன. கல்லூரி விடுதியும் புனரமைக்கப்படுகின்றது. இக்கல்லூரியில் நிலைகொண்டுள்ள சிவகாமி சமேத நடராஜப் பெருமான் எல்லோருக்கும் அருள் பாலிப்பாராக.

●

**திருமதி. கோசலை மோகனதாசன்**
*பழைய மாணவர் சங்கம் -*
*வேலணை மத்திய மகா*
*வித்தியாலயம்*
*சிட்னி-அவுஸ்திரேலியக் கிளை*
*தொடர்பு 612 - 9874 4755*

# சு.வி.யின் நான்காவது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாடு: நினைவலைகள்

கலாகீர்த்தி பேராசிரியர்
டாக்டர் பொன். பூலோகசிங்கம்



மலை ஒன்றினை முழுமையாகக் காணவேண்டுமாயின், தொலைதூரத்திலே போய் நின்று பார்க்கவேண்டும்; வரலாற்று நிகழ்ச்சியை மதிப்பிடக் காலம் செல்லவேண்டும் என்பர் சான்றோர். நான்காவது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாடு யாழ்ப்பாணத்தில் 1974ஆம் ஆண்டு சனவரி மாதம் மூன்றாம் தேதி முதல் ஒன்பதாம் தேதிவரை செவ்வனே கோலாகலமாக நடந்து, பத்தாம் தேதி விருந்துபசார விழா இனவெறியின் விஷமத்தனத்தினால் அவதியுற்று முடிவடைந்தது. முப்பத்தொரு ஆண்டுகள் முடிவடைந்து முப்பத்திரண்டாம் ஆண்டு நடந்துகொண்டிருக்கிறது. நான்காவது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாட்டின் சூத்திரதாரி பேராசிரியர் சுப்பிரமண்யம் வித்தியானந்தன் 1989ஆம் ஆண்டு சனவரி மாதம் 21ஆம் தேதி கொழும்பிலே மறைந்தார். அவர் பூதவுடல் மறைந்து புகழுடல் எய்தி பதினாறாண்டுகள் நிறைவேறிவிட்டன. இப்போது அம் மாநாடு பற்றியும் அந்தப் 'பார்த்த சாரதி' பற்றியும் நின்று நிதானித்துச் சிந்திப்பது உண்மை வரலாற்றிற்கு உகந்தது என்பதை இக் கால இடைவெளியில் உதிர்க்கப்பட்ட துணுக்குகளை அறிந்தவர் — கேட்டவர் ஏற்றுக்கொள்வர்.

1980ஆம் ஆண்டிலே தமிழிலும் 2005இலே ஆங்கிலத்திலும் வெளியான இருநூல்களை வாசித்தபோது, விளம்பரத்திற்காக இப்படியெல்லாம் எழுதுகிறார்களே என்று வேதனைப்பட்டேன். அந்நூற் கருத்துகளை விமர்சிக்க எமக்கான தகுதியென்ன என் பார்க்குப் பேராசிரியர் ஆ. வேலுப்பிள்ளை கொழும்புத் தமிழ்ச் சங்கத்திலே ஆற்றிய பேராசிரியர் வித்தியானந்தன் நினைவுப் பேருரையிலே,

''அரசும் அரசின் அடிவருடிகளான தமிழர்கள் சிலரும் மாநாட்டைக் குழப்புவதற்கு இயலுமான எல்லா நடவடிக்கைகளையும் எடுத்தனர். வித்தியானந்

தனுடைய நன்மாணவர்களாக அதுகாலம் வரையிற் கருதப்பட்ட சிலர், சுயநலம் கருதி அரசுடன் சேர்ந்துகொண்டனர். தமிழ்த் துறை பூலோகசிங்கம், வரலாற்றுத் துறை பத்மநாதன் முதலிய வெகு சில பல்கலைக்கழகக் கல்வி மான்களே வித்தியானந்தனுக்குப் பக்கபலமாக நின்றனர்' என்று கூறியுள்ள கருத்தினை முன்வைக் கிறோம் (நினைவுப்பேருரை: பேராசிரியர் வித்தியானந்தன் காட்டும் ஈழத்துத் தமிழர் சால்புக் கோலம், கொழும்புத் தமிழ்ச்சங்க வெளியீடு, திசம்பர், 1989, பக். 20) பேராசிரியர் வேலுப்பிள்ளையின் கருத்துகளை மறைப்பதற்குச் சில தாசர்களால் எடுக்கப் பெற்றி ருக்கும் முயற்சிகளை உண்மை விரும்பிகள் நிதானித்து நோக் குதல் அவசியமாகும்.

முகாமைக்குழுவின் உறுப்பின ராக 1972ஆம் ஆண்டு 'சாந்தம்' பொதுக்கூட்டத்திலிருந்து சரஸ் வதி மண்டபம், கொழும்பு இந்துக் கல்லூரி, சட்டத்தரணி அம்பல வாணரின் அல்பிரட் பிளேஸ் வாசஸ்தலக்கூட்டங்கள் வரை இரு வருடம் இடைவிடாது பங்கு பற்றியதோடு, கல்வி ஆய்வுக் குழுவுக்கு நியமிக்கப்பெற்ற மூன்று செயலாளருள் ஒருவராகச் செய லாற்றி, மாநாட்டின் நினைவு மலரின் ஆசிரியராக, அதனை வெளிக்கொணர்ந்தவன் பூலோக சிங்கம் என்ற உண்மைகளை அறிந்தவர்கள் சிலர் இருக்கி றார்கள். எனவே நான்காவது மாநாடு பற்றியும் அதனைச் சிறப் பாக நடாத்தி வெற்றி ஈட்டிய தலைவர் பற்றியும் கூற எமக்குத் தகைமையுண்டு என்பதை யாரும் மறுத்தலரிது.

1960 ஜூலை மாதம் நடை பெற்ற ஐந்தாவது பாராளுமன்றப் பொதுத்தேர்தலிலே சிறிமா பண்டாரநாயகாவின் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி வெற்றிபெற்ற தைத் தொடர்ந்து மீண்டும் இன வெறிஅலைகள் அசுரவேகத் தோடு மோதத் தொடங்கின. பாடசாலைகள் தேசியமயமாக்கப் பட்டன. வடக்கிலும் கிழக்கிலும் ஒத்துழையாமை இயக்கத்தினைத் தமிழரசுக் கட்சியினர் முன்னின்று நடத்தினார்கள். அதனால் கோப முற்ற அரசு தமிழரசுத் தலைவர் களையும் ஏனைய தமிழ்த் தலை வர்களையும் பனாகொடையிலே தடுப்புக்காவலிலே வைக்க, தமிழ்ப் பிரதேசங்களிலும் ஏனைய பிர தேசங்களிலும் வாழ்ந்த தமிழ ருக்கு எதிராகச் சிங்கள இராணு வமும் காவற்படையினரும் கர்ண கொடூரமான செயல்களிலே ஈடு பட்டனர்.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி யுடன் இணைந்து இடதுசாரி முன்னணி அரசை 1963இலே மகாசன ஐக்கிய முன்னணி, லங்கா சமசமாசக்கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி என்பன அமைத்துக் கொண்டபோதும் தமிழருக்கு விமோசனம் கிடைக்கவில்லை. இடதுசாரிகள்மீது மத்தியதர வர்க்கத் தமிழர் வைத்திருந்த நம்பிக்கை சிதறடிக்கப்பட்டது. ஏனெனில், அதுவரை காலம் தமிழினத்தின் சார்பாக அவர்கள் கூறிவந்த கோட்பாடுகள் பதவிக் காகத் தூக்கியெறியப்பட்டன. சிங்கள தேசியவாதத்திற்கு இடது சாரிகள் உறுதுணையாயினர். 1964 கடைசியிலே ஒரு வாக்கினாலே கூட்டாட்சி பாராளுமன்றத்திலே முறியடிக்கப்பட்டது.

*1965* மார்ச்சு மாதத்திலே நடைபெற்ற ஆறாவது பாராளுமன்றத் தேர்தலிலே டட்லி சேனநாயகா தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி வெற்றிபெற்று தேசிய அரசினை அமைத்தது. டட்லி — செல்வநாயகம் உடன்படிக்கை, தமிழ் உபயோகமொழி மசோதா என்பன நம்பிக்கை அளித்தன. எம். திருச்செல்வம் தேசிய அரசின் அமைச்சர்களில் ஒருவராகித் தமிழரசுக் கட்சியின் ஆதரவுக்குச் சாட்சியானார். ஆயினும் எதிரணியில் இருந்த முதலாளிகளுடனும் தொழிலாளர் வர்க்கக்கட்சிகளுடனும் பௌத்தத்துறவிகளுடனும் தேசியஅரசுப் போட்டி போட முடியவில்லை; தேசிய ஒற்றுமை எதனையும் அவர்கள் விரும்பவில்லை.

இக்காலகட்டத்திற் புலமைப் பரிசில் பெற்று மேற்படிப்புக்காக ஒக்ஸ்போடு பல்கலைக்கழகத்திலே இருந்த காலை (*1963* செப்தம்பர் முதல் *1965* அக்தோபர் வரை) அங்கு எம் ஆய்வுக்குப் பொறுப்பாக விளங்கிய பேராசிரியர் தொமஸ் பறோ புதுதில்லியில் *1964* சனவரியின் ஆரம்பத்திற் கலந்துகொண்ட *26*வது அகில உலகக் கீழைத்தேயக் கல்வி ஆய்வாளர் மாநாட்டின்போதுதான் அனைத்துலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றம் உருவாகியது. தமிழ், திராவிட ஆய்வுகளில் ஈடுபாடுள்ளவரும் மாநாட்டிற் கலந்துகொண்டவர்களுமான இருபத்தாறு பேர், பேராசிரியர் தனிநாயக அடிகளாரும் பேராசிரியர் வ.ஐ. சுப்பிரமணியமும் விடுத்த அழைப்பினை ஏற்றுச் சனவரி ஏழாம்தேதி உத்தியோகப் பற்றற்ற முறையிலே புதுதில்லியிற் கூடி அனைத்துலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றத்தினைத் தோற்றுவித்தனர். அக்குழுக் கூட்டத்திலே கலந்து கொண்டவர்களிலே பேராசிரியர் தனிநாயகஅடிகளார், பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை, பண்டிதர் க.பொ. இரத்தினம் என்போர் ஈழநாட்டினராவர்.

பேராசிரியர் தனிநாயக அடிகளார் அப்பொழுது (*1961—1970*) மலேசியப்பல்கலைக்கழகத்திலே இந்தியக் கல்வியாய்வுகள் துறையிலே தலைமை வகித்துக் கொண்டிருந்தார். அவர் ஏற்கனவே 'தமிழ் கல்ச்சர்' எனும் சஞ்சிகை மூலம் அகில உலகத்திலுமுள்ள தமிழ், திராவிட ஆர்வலரை ஒன்றுசேர்க்க முற்பட்டு ஓரளவு வெற்றியும் கண்டவர். அவர் மலேசிய அரசு தமிழ்ச் சமூகத்திற்கு அளித்த ஆதரவின் துணையோடு பிரமாண்டமான முறையிலே முதல் மாநாட்டினைக் கோலாலம்பூரிலே *1966* ஏப்பிரல் *16—23* தேதிகளில் நடாத்தத் திட்டமிட்டுப் பெரியதொரு அணியினைத் திரட்டிச் செயற்படுத்தினார்.

பேராசிரியர் தனிநாயகம் அடிகள் இலங்கையிலே பேராதனைப் பல்கலைக்கழகத்திலே விரிவுரையாளராகப் பணிபுரிந்தது கல்விப்பீடத்திலேயாம்; தமிழ்த் துறையிலே அவர் சேவை எதிர்பார்க்கப்படவில்லை. தமிழ்த் துறையார் அலுவல்களிலே அவர் கை போடவில்லை; ஓரளவுக்கு ஒதுங்கியே இருந்தார் என்றே கூறிவிடலாம். மேலும், அவர் யாழ்ப்பாண மறை மாவட்டத்தினைச் சேராதவராகத் தூத்துக்குடி மறை மாவட்டத்தினராக மறைக்கல்வி பயின்ற காலம் முதலாகப் பேராதனையிற் பணிபுரிந்த காலமும் ஊடாக இருந்தமையும் கவனிக்கத்தக்கது.

இக்காரணங்களாலே அடிகளார் யாழ்ப்பாண வட்டத்தினை விட்டு விட்டுக் கொழும்பு வட்டத்திலே அதிகமாக ஊடாடினார். கே.சி. தங்கராசா, வி. கணபதிப்பிள்ளை, கே. செல்வநாதன் போன்றவர்கள் அவருடைய வட்டத்திலே சிறப்பிடம் பெற்றிருந்தனர். இதனால் கோலாலம்பூர் மாநாட்டிற்குப் பிரதிநிதிகளையும் பார்வையாளரையும் தெரியும் பொறுப்பும் இலவசப் பயணச்சீட்டுக்கு உரியவராகத் தெரியும் பொறுப்பும் கே.சி. தங்கராசா குழுவிடம் விடப்பட்டிருந்தது. பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை ஓய்வு எடுத்ததை அடுத்து, 1965இலே வி. செல்வநாயகம் பேராசிரியர் பதவியினைப் பெற்றுப் பேராதனைப் பல்கலைக்கழகத்திலே தமிழ்த்துறைத்தலைவராக விளங்கினார்.

கோலாலம்பூர் மாநாட்டுக்கு இலங்கைக் குழுவுக்குத் தலைமை வகித்துச் சென்றவர் டாக்டர் எச். டபிள்யூ. தம்பையா. அவர் அப்பொழுது இலங்கை சுப்ரீம் கோர்ட்டு நீதிபதி. பேராசிரியர் செல்வநாயகம் கட்டுரை சமர்ப்பித்தபோதும் கோலாலம்பூர் மாநாட்டிற்குச் செல்லவில்லை. கோலாலம்பூர் மாநாட்டிற்குச் சுமார் ஐம்பது இலங்கைப் பிரதிநிதிகள் சென்றிருக்கிறார்கள். இவர்களிலே சரிபாதிக்கு மேல் பார்வையாளர்கள்; மாநாட்டிற்கு எவ்விதமான ஆய்வுகளையும் சமர்ப்பிக்காதவர்கள். இது குறிப்பிடத்தக்க அம்சமாகும். கே.சி. தங்கராசா நெறிப்படுத்தலிலே அனைத்துலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றத்தின் இலங்கைக் கிளை எவ்வாறு இயங்கத் தொடங்கியிருந்தது என்பதற்கு ஒரு முன்னறிவித்தல்.

1967ஆம் ஆண்டு சி.என். அண்ணாத்துரை தலைமையிலான திராவிட முன்னேற்றக் கழகம் வெற்றிபெற்றுத் தமிழ் நாட்டிலே அரசாங்கம் அமைத்தது. எம். பக்தவச்சலம் முன்பு கோலாலம்பூரிலே விடுத்த அழைப்பினை ஏற்றுச் சென்னையிலே தி.மு.க. இரண்டாவது அனைத்துலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டினை நடாத்த முன்வந்தது. அது 1968 ஆம் ஆண்டு சனவரி மாதம் 3 — 10 ஆம் தேதிகளிற் சென்னையிலே நடந்தது. அனைத்துலகத் தமிழாராய்ச்சி மன்றத்தின் பொருளாளர் ஏ. சுப்பையா சென்னை மாநாட்டின் ஆய்வுக்களத்திற்குச் சூத்திரதாரியாக விளங்கினார். ஆயினும் அதேகாலத்திலே 'பூம்புகார்' பொதுமக்கள் விழாவும் முக்கியத்துவம் பெற்றது. சென்னையிலே ஆய்வரங்குகளா ஜனரஞ்சகமான அரங்குகளா சிறந்தோங்கி நின்றன என்று அறுதியிட்டுக் கூறுவது அரிது. ஆயினும் தமிழ் ஆராய்ச்சி மன்றத்தினை நிறுவியமைக்கான காரணங்களும் லட்சியங்களும் சென்னையிலே அடிபட்டுப்போயின என்று கருதிய ஆய்வாளர் தொகை குறிப்பிடத்தக்கது.

தமிழ் உணர்வலைகளிலே முன்னுக்கு வந்த தி.மு.க. அதனைத் தடுத்து நிறுத்த முடியவில்லை; விரும்பியதாகவும் தெரியவில்லை. சென்னை மாநாட்டிற்கான இலங்கையர் தேர்வுகள் சகலவற்றிற்கும் பொறுப்பாக இருந்த கே.சி. தங்கராசா குழு கோலாலம்பூருக்கு இயங்கிய மாதிரியே செயற்பட்டது. ஒரே வித்தியாசம் — சென்னைக்குப் பார்வையாளர் தொகை அதிகரிக்கப்பட்டிருந்தது! சென்னைத் தமிழ்விழாவை

எதிர்பார்த்து அவர்கள் செயற்பட்டனர்!

டட்லி சேனநாயகாவின் தேசிய அரசு முன்வைத்த மாவட்ட சபை மசோதா, அவர் ஒன்றுவிட்ட சகோதரர் ஆர். ஜி. சேனநாயகவின் இனவாத முக்கியத்துவத்திற்குமுன் எடுபட முடியவில்லை. 1968 சனவரியில் சென்னை மாநாட்டிற்குச் சென்ற அமைச்சர் திருச்செல்வம் நவம்பரிலே தேசிய அரசை விட்டு நீங்கியதை அடுத்துத் தமிழரசுக் கட்சி தன் ஆத ரவை நிறுத்திக்கொண்டது.

1970ஆம் ஆண்டு மேமாதம் நடைபெற்ற ஏழாவது பாராளுமன்றத் தேர்தலிற் சிறிமா பண்டாரநாயக தலைமையிலான ஐக்கிய முன்னணி மாபெரும் வெற்றி ஈட்டியது. கே.சி. தங்கராசா இடதுசாரிகளின் நண்பராக இருந்தபோதும் தேசியஅரசின் காலத்திற்காகிதக் கூட்டுத்தாபனத் தலைவராக நியமிக்கப் பெற்றவர். ஐக்கிய முன்னணி 1970இலே மீண்டபோது அவர் சேவை தொடர்ந்தது. அனைத்துலகத் தமிழாராய்ச்சி மன்ற இலங்கைக் கிளையின் முகாமைத்துவமும் கே.சி. தங்கராசா பொறுப்பிலேயே இருந்தது. இக்காலத்திலே அவரும் தனிநாயக அடிகளாரும் இணைச் செயலாளராக இயங்கியதாகத் தெரிகிறது.

பேராசிரியர் ஜீன் பிலியோசா பாரிசிலே மூன்றாவது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாட்டினை 1970இலே நடத்தினார். முன்னைய இரு மாநாடுகளுக்கும் பாரீஸ் மாநாட்டுக்கும் பெரும் வித்தியாசம். சலசலப்பின்றி வழமை போல் நடைபெறும் கருத்தரங்கு போன்று அது அமைந்திருந்தது. ஐரோப்பிய அமெரிக்க திராவிடவியலாளரும் மேற்கிலே தங்கியிருந்த தமிழர் உட்பட்ட திராவிட மொழிகள் பேசியவர்களும் கலந்து கொள்ளக்கூடிய அரங்காக அது அமைந்தது. பாரீஸ் மாநாட்டிற்கு இலங்கைக் கிளை பேராசிரியர் சு. வித்தியானந்தன், கலாநிதி க. கைலாசபதி, ஜனாப் எஸ்.எம். கமாலுதீன் எனும் மூவரையும் பிரதிநிதிகளாக அனுப்பி வைத்தது. பாரீஸ்மாநாட்டிற்கு முன்னும் பின்னும் தமிழபிமானிகளிடையே மட்டுமன்றித் தமிழறிஞரிடையேயும் ஈழத்துக்கிளையின் நிர்வாகத்தினர் பற்றியும் அவர்கள் பாரீஸ் மாநாட்டிற்குப் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்த முறை பற்றியும் அதிருப்தி ஏற்பட்டது.

அக்காலத்தில் பம்பலப்பிட்டி கிளென் அபர் பிளேஸில் அனைத்துலகத் தமிழாராய்ச்சி மன்றத்திற்காக ஒரு வீட்டினை எடுத்து நடத்தினார்கள். அங்கு வெளிநாட்டு அறிஞர்களுக்கு விடுதி வசதிகள், ஆவணநிலையம், வெளியீட்டகம், தொலைபேசி வசதிகள், பகுதிநேர வேலையாள் கொண்ட செயலகம் எல்லாம் இருந்தன என்று கே.சி. தங்கராசா பின்பு 1973 அக்தோபரிலே எங்களுக்குக் கடிதம் மூலம் அறியத்தந்திருந்தார். அதற்கு முன்பு அவ்வசதிகள் பற்றி யாருக்குத் தெரியுமோ தெரியவில்லை! கிளென் அபர் பிளேஸ் வீட்டிலேதான், பாரீஸ் போய் மீண்ட கைலாசபதியும் கமாலுதீனும் 1971 பெப்ருவரி முற்பகுதியில் ஈழத்துத் தற்காலத் தமிழ்நூற் காட்சி ஒன்றினை ஒழுங்குபண்ணியிருந்தார்கள். அதன் சார்பாகத் தேர்ந்த நூற்பட்டியல் ஒன்றும் வெளியிடப் பெற்றிருந்தது. அப்பட்டியலிற் கண்ட தவறுகளை எடுத்துக்

காட்டித் தமிழ்ப் பாதுகாப்புக் கழகம் அன்று துண்டுப் பிரசுரம் ஒன்றினை வெளியிட்டிருந்தது.

1972இலே அனைத்துலகத் தமிழாராய்ச்சி மன்றத்தின் நான்காவது மாநாடு இலங்கையில் நடைபெற வேண்டியிருந்தது. சோஷலிசம் கதைத்த இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம் (இ.மு.எ.ச.) ஐக்கிய முன்னணி அரசு 1970இலே தோன்றியபோது மீண்டும் தழைத்தது. அமைச்சர் செல்லையா குமாரசூரியர் தமிழ் சம்பந்தமான விடயங்களுக்கான அரசின் பிரதான ஆலோசகராக உயர்ந்தார். அவருடைய ஆலோசகர் வட்டத்திலே இ.மு.எ.ச. முக்கிய இடம் வகித்தது. இந்தக் கட்டத்திலே கே.சி. தங்கராசா குழுவினர் அரச ஆசிகளோடு வலம் வந்து கொண்டிருந்தவர்களை முகாமைச் சபையிலே சேர்த்துத் தமிழ்ஆராய்ச்சி மாநாட்டினை நடாத்த முடிவு கட்டி விட்டனர். ஆனால் அத்திட்டம் தடம்புரண்டு போயிற்று.

1972இலே அனைத்துலகத் தமிழாராய்ச்சி மன்றத்தின் இலங்கைக் கிளையின் பொதுக்கூட்டம் பம்பலப்பிட்டி மிலாகிரிய அவெனியூவிலுள்ள 'சாந்தம்' மனையிலே கூடுவதற்கு முன்பே இருகட்சிகள் உருவாகிவிட்டன. ஆளுங்கட்சி கொண்டுவர இருந்த புதிய யாப்பு ஆவணம் பற்றியும், அவர்கள் பதவியில் வைக்க இருந்த முகாமைக்குழுவினர் பற்றியும், அக்கட்சியினைச் சேராத வட்டங்களுக்குப் பொதுக்கூட்டத்தின் முன்பே நல்குபுலனாயின. இதனால் ஆளுங்கட்சி எதிர்பாராத அளவுக்குத் தமிழறிஞரும் தமிழபிமானிகளும் பெருந்திரளாகப் பொதுக்கூட்டத்திற்கு எழுந்தருளியிருந்தார்கள். அந்தக் கூட்டத்திலே ஆளுங்கட்சியினர் கொண்டு வந்த யாப்பாவணம் பல்வேறு திருத்தங்கள் மூலம் புதிய வடிவம் பெற்றமையும் அவர்கள் முன் வைத்த முகாமைக்குழு உறுப்பினருக்குப் பலத்த போட்டி ஏற்பட்டு அவர்கள் தோல்வியுற்றதும் அன்று முதல் தொடர்ந்து பல மாதங்களாகத் தமிழர் வட்டாரங்களிலே சிலாகித்துப் பேசப்பட்டன.

தமிழ்உணர்ச்சிக்கு முன்பு சலசலப்பு எடுபடவில்லை. இலங்கை அனைத்துலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றக் கிளைக்குப் புதியதொரு முகாமைச்சபை உருவாகியது. 1966ஆம் ஆண்டு முதலாகத் தமிழ்ஆய்வுகளோடு தொடர்பில்லாத முகாமைத்துவம் தன் இருப்பிலே வைத்திருந்த மன்றத்திற்கு முதன் முதலாகத் தேர்தல் மூலம் புதிய முகாமைக் குழுவினர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.


எதேச்சாதிகாரத்தினை எதிர்க்க ஒற்றுமை இருந்தபோதும், புதிய முகாமைச்சபை கருத்து வேறுபாடுகளினால் ஒன்றிணைந்து நிற்கமுடியவில்லை. அரசுடன் ஒத்தூதிய இடதுசாரிகளை அநுமதிக்க இடம்வைக்கக்கூடாது என்று துணிந்தவர்களுக்கு அரசாங்கத்தின் ஏனைய அடிவருடிகளை அப்போது கவனிக்கும் யோசனை இருக்கவில்லை. அதனால் ஏற்பட்ட விளைவுகள்...!

டாக்டர் எச். டபிள்யூ. தம்பையா 1966இலே கோலாலம்பூர் மாநாட்டிற்கு இலங்கைப் பிரதிநிதிகளுக்குத் தலைமை தாங்கிச் சென்றவர். அங்கு அவர் அனைத்துலகத் தமிழாராய்ச்சி மன்றத்தின்

துணைத்தலைவர்களில் ஒருவராக நியமனம் பெற்றவர். தம்பையா கம்யூனிஸ்டுகளின் முற்போக்கு சங்கத்தினருக்கும் வேண்டியவர். ஆயினும் அவரை முகாமைக் குழுவின் தலைவராகப் பிரேரித்த போது யாரும் மறுப்புத் தெரிவிக்க வில்லை. அவர் அரசாங்கத்திற்குச் சார்பாக மாநாட்டினைக் கொழும் பிலே வைக்கவேண்டும் என்று 1973 அக்தோபர் ஆரம்பம் வரை அடுத் தடுத்து நடைபெற்ற முகாமைக் குழுக் கூட்டங்களிலே வற்புறுத்திப் பலருடைய கோபத்திற்கும் ஆளா யினார். அவரைத் தலைமைப் பதவியினைத் துறக்கும்படி முகத் திற்கு முன்னே கேட்கும்படி ஆயிற்று. அவரும் 1973 செப்தம் பரிலே தலைமையைத் துறந்தார். அவர் நன்கொடையாகத் தாம் மன்றத்திற்கு வழங்கிய பணத் தையும் திருப்பித் தரும்படி கேட்டுக் கூசவைத்தார். அவருக்கு சிறிமா அரசு வெளிநாட்டுத் தானிகர் பதவி அளித்துக் கௌரவித்தது.

கொழும்புத் தமிழ்ச்சங்க மண்ட பத்தில் 24.6.84இல் எடுக்கப்பெற்ற பேராசிரியர் வித்தியானந்தன் மணிவிழாவின்போது 'துணை வேந்தர் வித்தி' எனவொரு நூல் வெளியிடப்பெற்றிருந்தது. அதனுள் முன்னாள் நீதியரசர் தம்பையா 'அன்புடன் வழங்கிய' அணிந் துரை ஒன்று இடம்பெற்றிருந்தது. யாரைப் பற்றிய நூலுக்கு, யாரிடம் இருந்து அணிந்துரை பெறுவது என்ற விவஸ்தையே இல்லையா! அந்த அணிந்துரையிலே நான்கா வது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாடு பற்றி ஒரு வார்த்தையும் இல்லை. போதாதற்கு நீதியரசரே அங்கு எழுந்தருளியிருந்தார்! அவரு டைய கைங்கரியத்தினை மேடை யிலே கூறவைத்துவிட்டார் கூட்டத் திற்குத் தலைமை தாங்கியவர். அவர் தலைமையுரையிலே, நீதிய ரசர் நான்காவது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாட்டிற்குச் செய்த அரும்பெரும் பணிகளை உண்மை தெரியாது எடுத்து ரைத்து எம்மை நிலைதடுமாற வைத்துவிட்டார். நீதியரசர் அன்று அளித்த அனாதரவான காட்சி எம் மனக்கண் முன்னே இன்றும் நிற்கிறது.

தங்கராசா தன்னாதிக்கம் பறி போன கோபத்திலே எவ்வளவு குந்தகம் செய்யமுடியுமோ அவ்வ ளவும் செய்து பார்த்தவர். கிளென் அபர் பிளேஸ் வீட்டிலோ, மிலா



கிரியா அவெனியூ 'சாந்தம்' மனையிலோ புதியமுகாமைக் குழு சந்தித்துச் செயலாற்ற முடிய வில்லை. சரஸ்வதி மண்டபத் திலும், கொழும்பு இந்துக் கல்லூரி யிலும், கடைசியிலே கொள்ளுப் பிட்டி அல்பிரட் பிளேஸ் சட்டத் தரணி அம்பலவாணர் இல்லத் திலும் மாறிமாறிக் கூட வேண்டி யிருந்தது. தனிநாயகஅடிகளார் தன்னோடு நீண்ட காலமாக இணைந்து பழகியவருக்கு எதிராக இயங்கக்கூடாமல் மாநாடு ஆரம்பமாகும்வரை ஒதுங்கியே நின்றார். வர்த்தகப் பிரமுகர் கே. செல்வநாதனும் இதேகாரணத் தினாலேயே ஒதுங்கிக் கொண் டார்.

தங்கராசாவின் கடைசி அஸ்திரம் மாநாட்டினை ஆகஸ் டுக்குத் தள்ளிப்போட வேண்டும் என்பதாகும். இவ்விடயம் சம்பந் தமாக ஒவ்வொரு முகாமைக்குழு உறுப்பினருக்கும் 1973 அக்தோபர் 29ஆம் தேதி கடிதம் அனுப்பி யிருந்தார். அக்கடிதத்திலே, தாம் முன்வைத்த கருத்தினை ஏற்றுக் கொள்ளாவிட்டால் அனைத் துலகத் தமிழாராய்ச்சி மன்றத் தின் இலங்கைக்கிளையிலிருந்து தாமும் வேறு சிலரும் வெளி யேறப் போவதாகவும் எச்சரித்தி ருந்தார். அக்காலத்திற் கொழும் புக்கு வந்திருந்த பேராசிரியர் பிலியோசா மாநாட்டினை ஆகஸ்டிலே வைக்கும்படி முகா மைக்குழுவிடம் கேட்டமைக்கும் யார் காரணமாயிருந்தார் என்று அன்று தெரியாதவர்கள் இருக்க வில்லை.

இவ்வுண்மைகளை எல்லாம் மறைக்க முற்படுபவர், அவற்றைத் தெரிந்தவர்கள், அநுபவித்தவர்கள் சிலர் இன்றும் உயிர் வாழ்வதை மறந்துவிட்டனர். தம்பையாவும் தங்கராசாவும் யாழ்ப்பாண மாநாட்டினைக் காணமுடியாமல் ஒதுங்கிவிட்டமை வருத்தத்திற் குரியது. தனிநாயகஅடிகளார் யாழ்ப்பாண மாநாட்டிலே அவர் களுக்கு நன்றி கூறினார்.

யாழ்ப்பாண மாநாட்டினை முன்னெடுத்துச் செல்வதை அதிகம் பாதித்த மற்றொருவர் டாக்டர் எஸ். ஆனந்தராசா. அமைப்புக்குழுச் செயலாளரில் ஒருவரான டாக்டர் ஆனந்த ராசா முகாமைக்குழுவின் கருத்து களுக்கு மாறாக மாநாட்டினைக் கொழும்பிலே வைக்கவேண்டும் என்று பத்திரிகைகளுக்குப் பேட் டிகள் கொடுக்கத் தொடங்கி விட்டார். இதனால் ஏற்பட்ட கருத்துமோதல்களால் டாக்டர் அனைத்துலகத் தமிழாராய்ச்சி மன்றக்கிளையின் முகாமைத் துவத்திலிருந்து வெளியேறினார். சட்டத்தரணிநடேசன் சத்தியேந் திராவும் முகாமைக் குழுவோடு ஒத்துப்போகமுடியாமற் சிறிது காலத்திற்குள் அமைப்புச் செய லாளர் பதவியைத் துறந்தார்.

யாழ்ப்பாணத்திலே மாநாடு வைக்கவேண்டும் என்பதே முகா மைக்குழுவின் பெரும்பான்மை யோர் கருத்தாகும். இக்கருத்திற்கு ஆதரவு தரமுடியாதவர்கள் ஒருவர் பின் ஒருவராகக் கழன்று விட் டனர். இன்று பின்னோக்கிப் பார்க்கையில், இவர்தான் அக் கருத்தை முன்வைத்தார், இல்லை அவர்தான் என்று கூறுவது வீண் விளம்பரம். முகாமைக்குழுவுக்கு ஆரம்பத்தில் அப்பிரச்சினையே இருக்கவில்லை.

பேராசிரியர் வித்தியானந்தன் 5.10.1973இலே முகாமைக்குழுவின் தலைமைப் பொறுப்பினை ஏற்றுக் கொண்டார். மாநாடு நடத்துவதற்கு அவகாசம் மூன்று மாதம் கூட இல்லை. பாதுகாப்பமைச்சர் லக்ஷ்மண் ஜெயக்கொடியின் அழைப்பினை ஏற்றுத் தலைவரை, வி.எஸ்.ரி.யும் யாமும் அழைத்துக் கொண்டு சென்றோம். தலைவர் தனியனாகவே அமைச்சரைச் சந்தித்தார். அமைச்சர் மூன்று அம்சங்களை முன்வைத்து அவற்றை ஏற்றுக்கொண்டால் மாநாடு வைப்பதற்குச் சகல வசதிகளும் செய்து தருவதாகக் கூறினார். அவ்வம்சங்கள்:

(1) மாநாடு கொழும்பிலே நடக்கவேண்டும்; மாநாட்டை பண்டாரநாயக ஞாபகார்த்த மண்டபத்திலே எவ்விதமான சலாருமின்றி நடாத்த அமைச்சர் உறுதி தந்தார்; (2) பிரதமர் சிறிமா பண்டாரநாயக்க மாநாட்டினை ஆரம்பித்து வைக்கவேண்டும்; (3) அமைச்சர் செல்லையா குமார சூரியர் மாநாட்டில் வரவேற்புரை ஆற்றவேண்டும். மாநாட்டில் கலந்துகொள்ள இருந்தவர்களுக்கு அரசின் செலவில் தங்கும் ஹோட்டல்வசதிகளும் உணவு வசதிகளும்கூட முன்வைக்கப்பட்டன.

தலைவர் முதல் அம்சத்தினையே மறுத்துவிட்டார். அதனால் ஏனைய அம்சங்கள் பற்றிய பேச்சுக்கே இடமில்லாமற் போய்விட்டது. அமைச்சர் பொறுமையிழந்து 'அபேபலமு' (நாங்கள் பார்த்துக் கொள்கிறோம்) என்று சூள்விட்டார். அரசு ஆதரவு தராமல் இருப்பதோடு குந்தகமும் செய்யப்போகிறது என்பதைத் தெளிவாக உணர்ந்து கொண்டோம். இதனால் அசுர வேகத்திலே எல்லா ஒழுங்குகளும் நடந்தன. கடைசி நேரம் மட்டும் நடக்குமா இல்லையா என்ற தயக்கம். வெளிநாடுகளிலுள்ள இலங்கைத் தூதரகங்கள் மாநாட்டுக்கு, வரவிருந்த பிரதிநிதிகளுக்கு ஆதரவு தரவில்லை; வந்தவர்கள் திருப்பிவிடப் பெற்றனர். ஆனால் தலைவர் மனதிலே தயக்கம் எதுவும் இருக்கவில்லை. மாநாட்டிற்கு அரசாதரவு இனத்துவேஷத்தின் அடிப்படையில் மறுக்கப்பட்டதென்ற கருத்து உலகிலே பரவியபோது, அதனை விரும்பாத அரசு மாநாடு ஆரம்பிப்பதற்கு முத்தினங்களுக்கு முன்பே 'விசா' வழங்கியது.

யாழ்ப்பாணம் தமிழ் இனத்தின் மானத்தைக் காப்பாற்றியது. தலைவர் தலைமையுரையிலே, மாநாடு யாழ்ப்பாணத்திலே நடக்க வேண்டியதற்கான காரணங்களையும், அதன் தகுதியையும் எடுத்துக்காட்டினார். அதனை யாழ்மக்கள் உறுதிப்படுத்தினார்கள். தென்னங்குருத்தோலை, மாவிலைத் தோரணங்களால் அலங்கரிப்பது போதாதென்று தென்னை, பனை மரங்களால் வீதிகளை எல்லாம் அலங்கரித்த ஆர்வம் மிக்க மக்கள் அவர்கள்.

தமிழ்மக்களின் பெருமிதத்தினைக்கண்ட இனவெறி கொண்ட கூட்டம் ஆத்திரம் அடைந்தது. மாநாடும் கருத்தரங்குகளும் நிறைவேறிய மறுநாள், சனவரி 10ஆம் தேதி, பரிசளிப்பும் விருந்தினருக்கு உபசாரமும் செய்ய ஒழுங்கான பொதுக்கூட்டத்திலே 'பஞ்சாப்படுகொலை' நடத்திக்

காட்டினர். பேராசிரியர் ஏ.ஜே. வில்சன் சனவரி 10ஆம் தேதி நிகழ்ச்சிகள் பற்றிக் கூறுமிடத்து,

"தமிழ்த்தேசிய தீவிரவாதத்தினை மீளமுடியாத எல்லைக்கு இட்டுச்சென்றது 1974 சனவரி பத்தாம்தேதிச் சோகம். அப்பொழுது இளைஞர் உரையாடுவதும் உடன்படிக்கையும் சிங்கள பௌத்தமயமான அரசுகளுடன் வீண் என்றும் பயன் எதுவும் அளிக்கப்போவதில்லை என்றும் உணர்ந்தார்கள்."

என்பர். (S.J.V. Chelvanayagam and the Crisis of Sri Lankan Nationalism. 1947 - 1977, 1944, p. 126).

நான்காவது தமிழாராய்ச்சி மாநாடு நடாத்த உருவெடுத்த அனைத்துலகத் தமிழாராய்ச்சி மன்ற இலங்கைக்கிளையின் முகாமைக்குழுவிலே 1972இலே உறுப்பினனாகத் தேர்ந்தெடுக்கப்பெற்ற காலம் முதலாகப் பேராசிரியர் வித்தியானந்தனுடன் நெருங்கிப் பழகும் வாய்ப்புக் கிடைத்தது. அதற்கு முன்பு மாணவனாக இருந்த காலை (1957 — 1961) அவ்வாய்ப்பு எமக்குக் கிடைக்கவில்லை. அந்த வாய்ப்பினைப் பெற்ற அவருடைய 'நன் மாணாக்கர்' கட்டுரை சமர்ப்பிக்கவோ பார்வையாளராகக் கலந்துகொள்ளவோ இல்லை. சி. தில்லைநாதன் மட்டும் கட்டுரை சமர்ப்பித்திருந்தார். தன் மாணாக்கர் மாநாட்டிலிருந்து ஒதுங்கிக்கொண்டதை பேராசிரியர் வித்தியானந்தன் முகாமைக்குழுவுக்குச் சமர்ப்பித்த அறிக்கையிலே பெயர் சுட்டி விரிவாகக் காட்டியிருந்தார். ஆயினும் பின்பு நூலாக வெளியிட்ட போது பெயர்களைச் சுட்டுவது தவிர்க்கப்பட்டது. அவர் மனதிலே அவர்களுடைய செயல் பெரும் கசப்பினை ஏற்படுத்தியிருந்தது. இதனாலேதான் பேராசிரியர் ஆ. வேலுப்பிள்ளை அந்நிகழ்ச்சியை அவருடைய பேருரையிலே விதந்து கூறியிருந்தார்.

திடீரென அவருடைய முடிவு 1989 சனவரி 21இலே வந்தது. யாழ்ப்பாணவளாகத் தலைவராகவும் தொடர்ந்து மும்முறை யாழ் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராகவும் செயலாற்றிய பேராசிரியருக்கு நான்காம் முறையும் அப்பதவி அளிக்கப்பட்டபோது, அவரை அவதிக்குள்ளாக்கியதால் அவர் கொழும்பிலே தங்கத் தொடங்கினார். யாழ்ப்பாணத்திலே மாபெரும் மாநாட்டினைக் கோலாகலமான விழாவாக நடாத்தித் தமிழ்ச் சமூகத்தின் பெருமதிப்பினைப் பெற்றிருந்த வித்தியானந்தன் தமக்கு யாழ்ப்பாணத்தில் நடந்த அலங்கோலத்தினை எதிர்பார்க்கவே இல்லை. மனைவியை இழந்து பிள்ளைகளைப் பிரிந்து அவமானத்தினாற் குன்றிப்போனார். அக்கடைசி நாட்கள் இன்றும் கண்முன்னே தோன்றுகின்றன. அந்த ஆதங்கத்தினை அவருடைய இரங்கல் கூட்டங்களிலே கொழும்பிலே பேசியும் பத்திரிகைகளில் இரங்கல் கட்டுரைகள் அப்போது எழுதியும் ஆற்ற முயன்றோம். அவர் மறைவினை நினைத்து நினைத்து வருந்தும் சந்தர்ப்பம் 1991 சனவரியில் எமக்கு ஏற்பட்டது

●

# அந்தக் காலத்து யாழ்ப்பாணம்

– முதியோன் –



"அந்தக்காலத்து யாழ்ப்பாணம்" என்னும் தொடர்ச்சிக் கட்டுரைகளைத் தொகுத்து, புத்தகமாக வெளியிட்டிருக் கிறார்கள் "கலப்பை" ஆசிரியர் குழு. துரதிர்ஷ்டவசமாக, அந்நூலில் சில கட்டுரைகள் இடம்பெறத் தவறிவிட்டன. அவற்றுள் ஒன்று அக்காலத்தில் நிலவிய கிறிஸ்தவ சமயம் சம்பந்த மான விடயங்கள். சைவசமயக் குடும்பத்தில் பிறந்து வளர்ந்தவனாத லால், நான் சிறுபையனாக இருந்த காலத்தில், கிறிஸ்தவம் சம்பந்த மான விடயங்களில் அக்கறைகாட்ட எனக்கு வாய்ப்பிருந்ததில்லை. எனினும் அதற்குப் பரிகாரம் தேடும் வகையில், நான் வளர்ந்தபின்னர் சில கிறிஸ்தவப் பெரியார்களிடமிருந்து கிடைத்த தகவலின் அடிப்படையில், முக்கிய மாக எழுத்தாளர் திருமதி மனோ ஜெகேந்திரனிடமிருந்து பின்னர் பெற்றுக்கொண்ட அரிய தகவல் களையும் தழுவி, கிறிஸ்துவம்பற்றி ஒரு கட்டுரை எழுத விழைகின்றேன். இதில் பிழைகள், முரண்பாடுகள் ஏதும் தென்பட்டால், தயவுசெய்து எனக்கு அறியத் தந்தால், நான் அவற்றைத் திருத்திக் கொள்வேன். இந்தக் கட்டு ரையை அந்நூலின் அடுத்த பதிப்பில் சேர்த்துக் கொள்வதாக உத்தேசம்.

இஸ்லாம் மதத்தின் தொழுகை, வழிபாடு முதலியனபற்றி எனக்கு ஒன்றுமே தெரியாது. விசாரித்து அறியக் கூடியதாக வாய்ப்புகளும் கிடைக்க வில்லை. அதனால் அது பற்றி எழுத முற்படவில்லை.

– ஆசிரியர்

## கிறிஸ்தவம் பற்றி

கிறிஸ்தவர்கள் என்னும் பதத்தில் கத்தோலிக்கர்களும், கத்தோலிக்க மதத்தைத் தழுவாத, ஆனால் யேசுகிறிஸ்துவைப் பின்பற்றுபவர்களும் அடங்குவர். கத்தோலிக்க சமயத்தைச் சார்ந்தவர்கள் பிறப்புத் தொட்டே ரோமன் கத்தோலிக்க சமயத்தவராயிருக்கலாம். அல்லது அவர்களின் முன்னோர்கள் இந்துக்களாயிருந்து பின்னர் கத்தோலிக்க சமயத்தைத் தழுவியவர்களாகவும் இருக்கலாம். கிறிஸ்தவப் பெருநாள்களும் ஆராதனை வழிபாடுகளும் தொன்றுதொட்டு வழிவருவன.

கத்தோலிக்கர்கள் இறைமகன் யேசுகிறிஸ்துவினதும், வத்திகான் எனப்படும் கிறிஸ்துவத் திருச்சபையினதும் கட்டளைகளுக்கு அடிபணிந்து ஒழுகுபவர்கள். திருச்சபையானது மக்களை நல்வழிப்படுத்துவதற்காகப் பல கட்டளைகளை விதித்துள்ளது. உதாரணமாக, ஞாயிறுதோறும் திருப்பலிப் பூசையில் கலந்துகொள்வது. இது கட்டாயமாகக் கடைப்பிடிக்கப்படவேண்டும். ஆனால் விதிவிலக்குகளும் உண்டு. அதாவது, ஞாயிற்றுக்கிழமைகளில் செல்ல முடியாதவர்கள் சனி மாலையிலும் பங்கேற்று ஞாயிறுக்கடனை ஒப்பேற்றலாம். முன்னைய காலங்களில் சனிக்கிழமை பாவசங்கீர்த்தனம் செய்து, ஞாயிறு காலை உபவாசமிருந்து, நற்கருணை அருந்தி, பலி ஒப்புக் கொடுப்பர். ஞாயிறு மாலையில் குருவானவரிடம் ஆசீர்வாதம் பெற்றுக்கொள்ள கோயிலுக்குச் செல்வர்.

இதைவிட, வெவ்வேறு நாட்களில் யேசுநாதரின் புனித தாயாராகிய அன்னைமேரிக்கும் வெவ்வேறு புனிதர்களுக்குமாக வழிபாடுகள் நடைபெறும். புதன் கிழமை மாலையில், காலங்காலமாக அன்னைமேரிக்காக நவநாள் நடைபெற்று வருகிறது. புதுமை மாதா, கதிரை மாதா, வேளாங்கண்ணிமாதா, செபமாலை மாதா, சதாரகாயமாதா, கொஞ்செஞ்சிமாதா, லூர்துமாதா, சின்னமடுமாதா, என்று மாதாவுக்கு வெவ்வேறு கோயில்கள் கட்டி, பல பெயர்களில் பக்தர்கள் சேவிப்பார்கள். செவ்வாய்க்கிழமை என்றால் புனித அந்தோனியார் ஆலயங்கள் எப்போதுமே நிரம்பி வழியும். பாஷையூர், மானிப்பாய், பாலதீவு முதலிய இடங்களிலிருக்கும் அந்தோனியார் ஆலயங்கள் பிரசித்தி பெற்றன. பெருநாள்காலம் என்றால் கோயிலில் கூட்ட நெருக்கடி, கொழும்பில் ஆடிவேல், யாழ்ப்பாணத்தில் நல்லூர்த்திரு விழாக் கூட்டம் போலிருக்கும். அந்தோனியார் கோயிலில் அன்று தொட்டு இன்றுவரை, பூசையின் பின்னர் பாண் (Bread) கொடுக்கும் வழக்கம் நிலைத்துள்ளது.

இதைவிட, யேசுவின் திரு இதயத்திற்கு விசேட ஆராதனை நடைபெறும். இதற்கு யாழ்ப்பாணத்திலுள்ள செஞ்சுவான் கோயில் ஆச்சிரமமும், தோலகட்டியிலுள்ள ஆச்சிரமமும் பிரசித்தமானவை. தோலகட்டி ஆச்சிரமத்தில் உற்பத்தி செய்யப்படும் நெல்லிரசம் வாங்குவதற்கென்றே அநேக மக்கள் செல்வர். அது அவ்வளவு பிரபல்யமானது.

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள மார்ட்டின் குருகுலமட

மும், கொழும்புத்துறையில் அமைந்துள்ள அமல உற்பவம் குருத்துவ மடமும் பெயர்பெற்ற குருமடங்களாகும். குருத்துவப் பணியில் இணைய விரும்புவோர் இங்கு அதற்கான படிப்பிற்காகச் சென்று இணைவர். அந்தோனியார் கோவிலில் நேர்த்தி செய்பவர்கள் அவரிடம் வரம் வேண்டி, அந்தோனியார் பாதத்தில் உப்பும் மிளகும் வைத்துத் தடவி, அவற்றை முடிந்து கட்டி, நேர்த்தி முடிந்ததும் கிணற்றுக்குள் போடுவார்கள். சிலர் இழை கொண்டுவந்து அந்தோனியார் சொரூபமிருக்கும் தட்டின் கைப்பிடியில் கட்டிவைத்து தங்கள் நேர்த்தி முடிந்ததும் கழற்றிவிடுவார்கள். வெள்ளிக்கிழமைகளில் சிலுவைப்பாதைகள் நடைபெறும்.

அந்தக் காலந்தொட்டே அநேகமாக ஒவ்வொரு கோவிலுக்குமுரிய புனிதரின் பெயராலோ, மாதாவின் பெயராலோ, கிறிஸ்துவின் பெயராலோ கோயில்களில் விழாக்கள் எடுப்பார்கள். பெருநாளிற்கு 9, 10 நாட்களுக்கு முன்பு தொட்டே விசேட ஆராதனை, செபவழிபாடுகள், செபமாலைத் தியானங்கள் நடைபெறும்.

கோவில் விழாக்களில் பிரசங்கம் செய்வதற்கென்று அதிலே தேர்ச்சி பெற்ற குருமார் வெவ்வேறு இடங்களில் (இந்தியாவில் கூட) இருந்தோ, வேறு குருமடங்கள், கோயில்களிலிருந்தோ வரவழைக்கப்படுவார்கள். பிரசங்கங்கள் குருக்களால் பிரமிப்பூட்டும் வகையில் நடைபெறும். பிரசங்கங்களைக் கேட்பதற்குச் சில கோயில்களில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் திரளாகக் கூடியிருப்பார்கள்.

ஆனால் பிரசங்கம் நடைபெறும்போது ஒரு குண்டூசி விழும் சத்தம்கூட, கேட்குமளவிற்கு அமைதி குடிகொள்ளும். பிரார்த்தனைப் பாடல்களும் பஜனைகளுமாகப் பாடகர்குழாம், மேலைநாட்டு வாத்தியக் கருவிகளான பியானோ, ஓர்கன் போன்ற கருவிகள் சகிதம் சிறப்புறும். ஆனால் காலம் மாறமாற தமிழ்க் கலாசாரத்திற்கு ஒவ்வ தபேலா, வீணை, மிருதங்கம் போன்ற வாத்தியக்கருவிகளும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

நவநாளின் கடைசிநாளான 9ம் நாள் இரவு விழித்திருந்து விசேட ஆராதனையின்பின்னர் அதிகாலை சுற்றுப்பவனி நடைபெறும். எந்த விழாவிற்காக — கோயிலுக்காகச் சுற்றுப்பவனி நடைபெறுகிறதோ, அதற்குரிய சொருபம் அலங்கரிக்கப்பட்ட கலர்ப் பீடம், தட்டு, கூடு போன்றவற்றில் வைக்கப்பட்டு, கோயிலையோ, தெருக்களையோ சுற்றி வந்து, கோயில் ஆசீர்வாதத்துடன் நிறைவு பெறும். கோயில் கம்பக் கொடி இறக்கப்படும். அதன்பின் கஞ்சி காய்ச்சிப் பகிர்ந்து குடிப்பார்கள்.

சொருபம் வலம் வரும் இடம், தெருக்கள் எல்லாவற்றையும் தோரணங்களாலும் வண்ணக் கடுதாசிகளாலும் வண்ண மின்விளக்குகளாலும் பெருநாளிற்குரிய சொருபத்தாலும் அலங்கரிப்பார்கள். கோயில்வளவில் புதுமணல் பரவிவிடுவார்கள். காப்புக்கடைகள், (சுடச்சுடத்) தின்பண்டக் கடைகள் போட்டு வியாபாரம் செய்வார்கள். மெழுகுதிரி, ஆசிநீர் நிறைந்த சொருபங்கள் போன்ற புனிதப் பொருட்களும் விற்பனை செய்வார்கள்.

அந்தக்காலத்தில் தூர உள்ள கோயில் பெருநாள் திருநாளிற்கு மாட்டுவண்டி கட்டி, கட்டுச் சாதம் எடுத்துக்கொண்டு போவார்கள். 10, 12 நாளிற்கு முன்னமே போய் கூடாரம், கொட்டில் போட்டிருப்பார்கள். கூடாரங்களில் சமைத்து உண் பார்கள். அல்லது பக்தர்கள் தங்குவதற்காக குருமார், அருட் சகோதரிமார் இடவசதி செய்து கொடுப்பார்கள்.

இந்தப் பெருநாட்களைவிட கத்தோலிக்கர் வருடத்தில் இரு பெருநாட்களைப் பெரிய அளவில் கொண்டாடுவார்கள். ஒன்று, உயிர்த்த ஞாயிறு. உயிர்த்த நாளுக்கு முன் 40 நாட்கள் உபவாசம் இருப்பர் சிலர். வேறு சிலர், மரக் கறி மட்டும் உண்பர். மாமிசம் தவிர்ப்பர். தவக்காலத்தில் நிறைய ஒறுத்தல்கள் செய்வர். பெரிய வியாழன், பெரிய வெள்ளிக்கிழமை அன்றும், வெள்ளை, சாம்பல், கறுப்பு, நீலம், ஊதா போன்ற நிற உடை அணிந்து போவார்கள். கோயிலே கதியென்று வியாழன், வெள்ளி, சனி இருப்பார்கள். வானொலி கேட்பது, திரைப் படம் பார்ப்பது எல்லாம் கிடை யவே கிடையாது. ஆனால் இந்த நாட்களில் திருப்பாடுகளின் காட் சிகள் நடைபெறும். அதாவது யேசுவின்பாடுகள், கடைசி இராப்போசனம், இறப்பு பற்றிய உண்மைகளை, மேடை போட்டு, பெரிய ஒலிவாங்கிகள் பூட்டி, நடித்துக் காட்டுவார்கள். கோயில் வளவுகளில் பாய் போட்டு சனங் கள் அமர்ந்து விடியவிடிய பார்ப் பார்கள். உயிர்த்த ஞாயிற்றுக் கிழமை கோயிலுக்குப் போய் வந்து, கோழி, ஆமை அடித்து விருந்து உண்பார்கள்.

மற்றது நத்தார் காலம். இது இன்றுபோல் அன்றும் கொண்டா டப்பட்டது. டிசம்பர் 24ம் திகதி இரவு, பாடகர் குழாம், நத்தார் தாத்தா உட்பட வீடுவீடாக கரோல் பாடிப்போவார்கள். காசு சேர்ப்பார்கள். நத்தார் அன்று இரவு விசேடமான (ஏற்கனவே செய்திருந்த) கேக் உண்டு, புது ஆடை அணிந்து, வாழ்த்து மடல் களை அனுப்பி, பிறப்புக்குடலும் கிறிஸ்மஸ் மரமும் பலூன் களாலும் பரிசுகளாலும் அலங் கரித்து வைப்பர். வாழ்த்துகள் பரிமாறி, பரிசுகள் கொடுப்பர். இந்த விழாக்காலம் தை 1ம் திகதி புதுவருடம் வரை தொடரும்.

தை 7ம் திகதிக்கு முன்னர் இவ்வலங்காரங்களை அகற்றி, அடுத்த வருடப் பாவனைக்காகப் பெட்டியில் அடுக்கிக் கட்டி வைப்பார்கள். வாணங்கள் கொளுத்திக் கொண்டாடுவார்கள். 24ம் திகதி இரவும் 31ந் திகதி இரவும் காது செவிடாகிவிடு மளவிற்கு வாணவேடிக்கை நடை பெறும். யாழ்ப்பாணத்தில் அதி காலையில் எழும்பும்போது மணிச் சத்தத்துடன் எழும்பலாம். பெரிய கோயில் திருந்தாதி மணியும், நல்லூர்க்கோவில் மணியும் அடிக்க, இருமணிகளும் ஒன்றோ டொன்று இணைந்து ஒலிக்கக் கேட்ட வண்ணம் எழும்புவது ஓர் இனிமையான அனுபவம். இது மார்கழி மாதத்தில் துல்லிய மாகக் கேட்கும்.

**உயிர்த்த ஞாயிறு** : இதற்கு முந்திய ஞாயிறு கோயில் வளவில் ஓசன்னா என்று ஓசையுடன் பாடி, குருத்தோலைகளைக் கையில் பிடித்து, பலிப்பூசைக்குமுன் மக்கள் போவதும் ஒரு வழக்கம்.

சாதிப்பிரச்சினைகள் கத்தோலிக்கக் கோயில்களிலும் முன்பு தாராளமாய்த் தலைதூக்கியிருந்தன. அதனால் சில கோயில்கள் எவ்வளவோ காலங்களுக்குப் பூட்டப் பட்டு வைக்கப்பட்டிருந்தன. கோயிலுக்குள் அமர்வது முதல், கோயிலுக்குள் போகும் வழி முதலாகச் சாதிப்பிரிவினைகள் காட்டப்பட்டு வந்திருக்கின்றன.

**கோயில் மணியடிக்கும் விதங்களிற் சில:** திருந்தாதிக்காக, திருமணப்பூசைக்காக, யாராவது இறந்துவிட்டால், இப்படிப் பல காரணங்களுக்காக கோயில்மணி அடிக்கப்படும். ஒவ்வொரு நிகழ்வுக்கும் வேறுவேறு விதமாக மணி அடிக்கப்படும். அது அடிக் கப்படும் விதத்திலிருந்து என்ன நடந்திருக்கிறதென்று அக்கிராமத்து மக்கள் அறிந்துகொள்வர். அந்த நாட்களில் குடும்பப் பிரச்சினை போன்ற பிரச்சினைகள் குருமாரின் ஆலோசனையால் தீர்க் கப்படும்.

**தேவதிரவிய அனுமானங்களிற் சில:** ஞானஸ்நானம், முதற்சற் பிரசாதம், உறுதிப் பூசுதல், மெய் விவாகம், குருத்துவம் — இப்படி எல்லாவற்றிலும் வெண்மையான ஆடைகளைத் தூய்மையின் அடையாளமாக அணிவார்கள். தேவ திரவிய அனுமானங்கள் முதற்சற் பிரசாதம் ஞானஸ்நானத்தின் போது பெரிய அளவில் கொண் டாட்டங்கள் நடைபெறும். ஞானஸ்நானத்தின்போது ஞானத் தாய் தந்தையராக குழந்தைக்காகத் தேரப் படுபவர்கள் தங்கள் ஞானக் கடமைகளை அதிக முக்கியத் துவம் கொடுத்து ஆற்றுவார்கள். பிள்ளையின் சமயசம்பந்தமான சடங்கு சம்பிரதாயங்களில் அவர் களுக்கும் பங்குண்டு.

கலப்புத் திருமணங்கள் முன் பெல்லாம் அதிகம் நடைபெறா. பிறசமயத்தவரைத் தப்பித் தவறி (காதல்) திருமணம் செய்ய வேண்டிய சந்தர்ப்பம் வந்தால், மற்ற சமயத்தவர் கத்தோலிக்க சமயத் தைத் தழுவினாலொழிய கோவிலில் குருவானவர் கைப்பிடிக்க மாட்டார். தற்காலத்தில் இந்த விதி தளர்த்தப்பட்டுள்ளது.

கத்தோலிக்க சமயத் தனியார் பாடசாலைகளும் இருந்து வருகின்றன. கிறிஸ்தவ சமயத்தவர்கள் இந்தப் பாடசாலைகளிற்கே கல்வி பயில்வதற்குச் செல்வர். காரணம் ஞானஉபதேசம் கற்பிக்கப்பட்டு, அதன் வழி ஒழுக பயிற்சி வழி படுத்துவர். இதைவிட, சனி மாலைகளில் பிள்ளைகள் ஞான உபதேச வகுப்புகளுக்கு அனுப்பி வைக்கப்படுவர்.

கோயிலுக்குச் செல்லும்போது சிறப்பாக உடை அணிந்து போவது வழக்கம். (பகட்டாக அல்ல) அந்த நாளில் முதல் நன்மை பெற்றபின் பெண்கள் துப்பட்டியால் தலையை மறைத்துக்கொண்டு கோயிலுக்குள் போவார்கள். வயதான கிழவிகள் சேலை முந்தானையால் தலையை மூடிக் கொள்வார்கள். மாலை 6 மணிக்கு கோயில்மணி திருந் தாதி அடிக்கையில் ஒவ்வொரு வீடுகளிலும் செபமாலையுடன் செபம்செய்வார்கள்.

அயர்லாந்து தேசத்திலிருந்து இலங்கைக்குச் சேவை செய்வதற்கு


வந்திருந்த குருமாரும் அருட் சகோதரிமாரும், பாடசாலைகளிலும் வைத்தியசாலைகளிலும் அரிய பணி ஆற்றினர். இவர்கள் சமயக் கல்வியாற்றினர். தாதிமாராக, பொறுமையே அணிகலனாகப் பூண்டு பணியாற்றினார்கள். கண்டிப்பும், கருணையுமாக ஒழுக்கத்தின்வழியில் பாடசாலை மாணவர்களை வழிப்படுத்தினர்.

விவாகம் ரத்தாவது என்பது கத்தோலிக்கத் திருச்சபையில் அந்தக் காலத்தில் மிகமிக அபூர்வம். இல்லையென்றே சொல்லலாம். ஆனால் இப்போது அந்த இறுக்கம் சற்றுத் தளர்ந்திருக்கிறது. இன்னமும் ஆலயத்தில் திருமணம் செய்தவர்கள், சட்டப்படி விவாகரத்துப் பெற்றிருந்தாலும், பரிசுத்த பாப்பாண்டவரிடமிருந்து அனுமதி பெற்றிருந்தால் ஒழிய மறுபடி கோயிலில் திருமணம் செய்ய இயலாது. முன்பு அது ஊசிக் கண்ணூடாக ஒட்டகம் புகுவது போன்ற கதை. இப்போது சற்றுத் தளர்த்தப்பட்டுள்ளது. ஆயினும் அன்றுபோல் இன்றும், மண முடிக்காமல் திருமண வாழ்வில் ஈடுபடுவது, கருவழிப்பு போன்றவை திருச்சபையால் அங்கீகரிக்கப்படுவதில்லை. இப்படிப்பட்ட சில பாரதூரமான குற்றம் புரிவோரைச் சமயத்திலிருந்து விலக்கி வைக்கப்படுவதன்மூலம் தண்டனை வழங்கப்படுவதும் உண்டு.

அந்தக்காலம் தொடக்கம் ஒருவரின் மரணத்தின்பின் குருவானவர் முக்கியப் பங்கேற்று, செபம் செய்தபின், அவரது உடல் சவக்காலைக்கு எடுத்துச் செலப்பட்டு, அங்கு அடக்கம் செய்யப்படும். கோயிலுக்கு அண்மையில் சேமக்காலை இருப்பது வழக்கம். இறந்தோரை நினைத்து, ஆன்ம இளைப்பாற்றிற்காகப் பூசை ஒப்புக்கொடுத்து மன்றாட்டுக்கள் செய்வர். சேமக்காலையில் அடக்கம் செய்த இடத்தில் கட்டிடம் கட்டுவர் சிலர்.

திருமணம் நிச்சயம் செய்யப்பட்டவுடன் கோயிலில் கூறுவது வழக்கம். அதாவது, அந்தத் திருமணம் நடப்பதற்கு ஏதாவது ஆட்சேபணை இருந்தால் தெரிவிக்கும்படி, திருமணநாள் குறிக்கப்பட்ட சில வாரங்களுக்குமுன் கோயிலில் அறிவிப்பார்கள். அவ்வித ஆட்சேபணையினால் நின்றுபோன திருமணங்களுமுண்டு.

குருமாருக்கும் அருட் சகோதரியருக்கும் (அந்தக் காலத்தில் கன்னியாஸ்திரீமார் என்பர்) மேலதிகமாக மரியாதை கொடுப்பார்கள். அவர்கள் துறவறவாழ்க்கையை மேற்கொள்பவர்கள். 7, 8 ஆண்டுகள் பயின்று துறவறத்தை மேற்கொள்பவர்கள். குருவானவர் மேற்றிராணிமாருக்குக் கட்டுப்பட்டு நடப்பர். குருமாரும் அருட் சகோதரிமாரும் ஆண்டவர் வழிபாடு அற்ற நேரங்களில் மக்கள் சேவைக்கே தங்களை அர்ப்பணிப்பவர்கள். பாடசாலை மாணவர்களைப் பொதுநல சேவையில் ஈடுபடுத்துவதற்காக, வைத்தியசாலை, வயோதிபர் மடம் முதலியவற்றிற்குக் கூட்டிச் சென்று அங்கு அவர்களுக்குச் சேவைப்பயிற்சி கொடுப்பது வழக்கம்.



# சிறுவர்களின் உரிமைகள்

- சிசு நாகேந்திரன்

உரிமை என்னும்பொழுது, எல்லோருக்கும் உரிமை இருக்கிறது. உலகிற் பிறந்த சகல சீவ ராசிகளுக்கும் உரிமை இருக்கிறது. அவரவர்களின் உரிமையை நிலை நாட்டவும் அவரவர்களுக்கு உரிமை உண்டு. ஆண் வர்க்கத்துக்கும் பெண்வர்க்கத்துக்கும் சமத்துவமான உரிமையுண்டு. அப்படியானால் பிள்ளைகள், சிறுவர்களுக்கு உரிமை இல்லையா? யார் இல்லையென்றது! சிறு பிள்ளைகளுக்குத்தான் மற்றவர்களிலும் பார்க்கக்கூடிய உரிமை இருக்கின்றது.

ஆனால் உலகத்தவரின், முக்கியமாகக் கீழைத்தேசங்களில் வசிப்போரின் நடைமுறைகளைப் பார்த்தால், வளர்ந்தவர்கள் சிறுவர்களின் உரிமையை முற்றாக அனுசரித்து நடப்பதுபோல் தென்படவில்லை. இலங்கை, இந்தியா, ஆப்பிரிக்கா முதலிய பின்தங்கிய நாடுகளில் பிள்ளைகளின் உரிமைகள் முற்றாக மறுக்கப்படுகின்றன. பிள்ளைகளுக்கென்று ஒரு உரிமை இருக்கிறது என்பதையே தொண்ணூறு வீதம் பேர் ஒத்துக்கொள்ளமாட்டார்கள்.

சிறுவர்களுக்கு உலக விஷயங்களைப் பற்றிய அறிவு குறைவாகவே இருக்கும். பிறந்து கொஞ்ச வருடத்துக்குள் பெரியவர்களுக்கு இருக்கக்கூடிய பரந்த அறிவு இருக்க வேணுமென்று நாம் எதிர்பார்க்க

முடியாதுதானே! குழந்தைகளின் பிற்காலத்தை அவர்களின் மண் விளையாட்டில் தெரியும் என்று சொல்லுவார்கள். அதில் உண்மையிருக்கிறது. ஆயினும் குழந்தைப் பருவத்தில் அசட்டுப்பிள்ளைகளாக இருந்த சிறுவர்கள், ஒரு சில ஆண்டுகளின் பின்னர் மூளை விருத்தியடைந்து, மாற்றம் ஏற்பட்டு, அவர்கள் புத்திஜீவிகளாகவோ மேதைகளாகவோ பரிணமித்ததை நாங்கள் அறிந்திருக்கிறோம்.

ஆதலால், "மடையா! உனக்குப் புத்தி இருக்கிறதா? மோட்டு வேலைகள் செய்கிறாயே! உன் வயதிலுள்ள மற்ற பிள்ளைகளைப் பார்" என்று பிள்ளைகளைத் திட்டுவதும், மற்றவர்களிடம் "என்னுடைய பிள்ளை மொக்கனாய்ப் பிறந்திட்டான். பின்னடிக்கு என்ன மாதிரி வாழ்க்கையில் சரிக்கட்டப் போகிறானோ தெரியாது" என்று பிரலாபிப்பவர்களும் இல்லாமலில்லை. பெற்றோரின் விருப்பத்தின்படியே பிள்ளைகளின் மூளை வளர்வதில்லை, விருத்தியடைவதில்லை. அது ஒவ்வொரு பிள்ளையும் பின்னடி வாழ்க்கையில் அடைய வேண்டிய அனுபவத்தைப் பொறுத்து, அவரவர்களின் விதியின் நியதிப்படிதான் அவரவர்களின் மூளை முதிர்ச்சியடையும்.

50, 60 ஆண்டுகளுக்கு முந்திய காலத்தில், பிள்ளைகளைப் பெற்றோரும் உறவினரும் அடிமைகளைப் போலத்தான் பாவித்தார்கள். சிறுவர்களுக்குச் சுதந்திரமில்லை. அவர்களின் ஒவ்வொரு சிந்தனையும் செயலும் பெற்றோரின் எண்ணப்படியும் விருப்பத்தின்படியும்தான் செயலாற்ற வேண்டும். பெற்றோரின் எண்ணம், கருத்து சரியில்லாததாக இருந்தாலோ அல்லது சமூகத்துக்கு ஒவ்வாததாக இருந்தாலோ, அதைப்பரவலாய்ப் பண்ணுவதில்லை. தாங்கள் சொன்னால் சரி, தங்கள் எண்ணப்படியே தான் பிள்ளைகள் நடக்கவேண்டும் என்று மிகவும் பிடிவாதமாக இருப்பார்கள். தாங்கள் இடும் கட்டளைகள் சரியா பிழையா என்பதைக் கவனிக்கமாட்டார்கள். கட்டளைகளை மீறினால் அடி விழும், அல்லது வேறு தண்டனை கிடைக்கும். அந்தச் சிறுவர்களுக்குக் கட்டளைகளும் அடிமை வாழ்வும்தான்! பெற்றோரின் அன்பைப் பெற பிள்ளைகளுக்கு உரிமை இருக்கிறது. ஆனால் அதே நேரத்தில் பெற்றோர் அவர்களுக்குச் "செல்லம்" கொடுத்து அவர்களின் வாழ்க்கையைப் பாழடிக்கவும்கூடாது. ஏனெனில், அவர்கள் பெற்றோர் கொடுக்கும் செல்லத்தைப் போலவே உலகில் மற்றவர்களும் தருவார்கள் என்று எதிர்பார்த்து ஏமாந்து போவார்கள்.

சிறுவர்களைச் சுயமாகச் சிந்திக்க, தன்னிஷ்டத்துக்குத் தம் காரியம் பார்க்க அனுமதிக்க வேண்டும். குழந்தைகள் தாயிடம், தகப்பனிடம் கேள்விகள் கேட்பார்கள். கேளாதகேள்விகள் கேட்பார்கள். பதில் சொல்ல முடியாத கேள்விகளை அள்ளி வீசுவார்கள். அப்படிக் கேள்விகள் கேட்கும்போது பெற்றோர் அதட்டினால், ஏசினால், கோபித்தால், பிள்ளை பேசாமல் ஒதுங்கிப் போய்விடும். ஆனால் பிள்ளையின் மனதில் எழுந்த ஐயம் தீராது. விபரங்களை அறியக்கூடிய அதன் மூளைவிருத்தி ஒரு படி குறைந்தேவிடும். உற்றார் உறவினரிடம் கேட்டாலும் கேள்விக்குரிய பதில் வராமல் ஏச்சும் பரிகாச

முந்தான் பிள்ளைக்குக் கிடைக்குமென்றால், பிள்ளை விஷயங்களை அறிந்துகொள்வது எப்படி? பள்ளிக்கூடத்தில் ஆசிரியரிடமும் கேட்பதற்குப் பிள்ளைக்கு ஆர்வம் இராது. வெட்கப்படுவதை விடுத்து கேள்வியைக் கேட்டாலும் ஆசிரியர் சொல்லும் பதிலைக் கேட்டு மற்ற மாணவர்கள் கொல்லென்று சிரித்துவிடுவார்கள். பிள்ளை அடங்கிப் போவான். அறியவேண்டும் என்ற ஆர்வமும் கெட்டு, அறிவை விருத்தி பண்ணக்கூடிய சந்தர்ப்பங்களையும் அந்தப் பிள்ளை இழந்துவிடும். அப்படியிருக்கும் பொழுது உலகவிஷயங்களை அந்தப் பிள்ளை எவ்வாறு கிரகிக்கிறது.?

குழந்தைகள் கேட்கும் சில கேள்விகளுக்குப் பதில் அளிப்பது கஷ்டம்தான். "சூரியன் ஏனம்மா சுடுகுது!" "சந்திரன் ஏனப்பா சூரியன்மாதிரிப் பிரகாசமாய் இல்லை?" "நான் எப்படியம்மா பிறந்தனான்?" "நீங்கள் சிகரெட் பத்துகிறீங்கள், நானும் ஏனப்பா பத்தக்கூடாது?" "அக்கா குளிக்கிற இடத்துக்கு நான் போகக்கூடாதாம், அது ஏனம்மா?" "ஏனம்மா பொம்பிளையளுக்கு வேறைமாதிரி உடம்பு?" "இந்தக் கடலையும், மலையையும், மரங்கள், சூரியனையும் கடவுள் எப்பிடியப்பா படைத்தவர்?" ..........என்று இப்படியான கேள்விகளைப் பிள்ளைகள் கேட்டால் எப்படி மறுமொழி சொல்வது என்று நீங்கள் கேட்கலாம்! ஆமாம். அது கஷ்டம்தான். ஆனால் பதில் சொல்லித்தான் ஆகவேண்டும். அவர்களின் கேள்விகளுக்குச் சினக்கவும் கூடாது. கேள்விக்குத் தக்க பதில் சொல்லுவதுதான் கெட்டித்தனம்.

பிழையாகவும் சொல்லக் கூடாது, பொய்யும் ஆகாது. பிள்ளைக்கு விளங்கக்கூடிய விதத்திலும் சொல்லவேண்டும். சரி. சரியான மறுமொழி தெரியாவிடில் என்ன செய்வது? அங்குதான் பெற்றோரின் பொறுமைக்கும், பதில் தேடிக்கொடுக்கும் முயற்சிக்கும் சோதனைக்காலம்! அப்பாவிடம் கேள் என்று அம்மா சாட்டிவிடலாம். அப்பாவோ, நான் புத்தகத்தில் பார்த்துச் சொல்லுகிறேன் என்று தன்மையாகச் சொல்லி பிள்ளையைக் கடத்திவிடலாம். ஆனால், புத்தகம் வசதியில்லாவிடில் யாரிடமாவது கேட்டாவது பதில் சொல்லியே தீரவேண்டும். "அம்மாவுக்குத் தெரியாதாம், அம்மா ஒரு மோடு!" என்று பிள்ளை நினைக்கப் போகுதே என்றெண்ணிப் பிள்ளையைக் கண்டிக்கவும் கூடாது. பொய்சொல்லி ஏமாற்றவும் கூடாது.

புலம்பெயர்ந்தநாடுகளில் பிள்ளைகள் தமிழ் படிப்பதில் ஆர்வம் காட்டாமல் இருப்பதற்கு இதுவும் ஒரு காரணமாகும். அதாவது, தனக்கு ஆங்கிலம் தெரியவில்லை என்று பிள்ளை நினைக்கப்போகுதே என்று நினைத்து, தாயானவள் பிள்ளையுடன் (Broken English) பிழையான ஆங்கிலத்திலாவது கதைத்து சமாளித்துப்போடுவார். அதனால் பிள்ளை வீட்டிலாவது தமிழ் பேசிப் பழகும் சந்தர்ப்பத்தை இழந்துவிடுகிறது.

பிள்ளையின் குறும்பு தாங்க முடியாவிடில் ஒன்று செய்யலாம். அதுதான் பராக்கு காட்டுகிறது! பிள்ளைக்கு மிகவும் பிடித்தமான ஒரு விஷயத்தைப் பற்றி, திடீரென்று ஏதோ புதினம் சொல்லுமாப்

போல் (பொய்யில்லாமல்) சொன்னால் பிள்ளையின் மனம், தான் கேட்ட கேள்வியை மறந்து, தன் மனதுக்குப் பிடித்த மற்ற விஷயத்துக்குத் தாவிவிடும். ஏமாற்றுவதற்குச் சொல்லும் கதையும் பிள்ளையின் வயதுக்குப் பொருத்தமான கதையாக இருக்கவேண்டும். உதாரணமாக, ஒரு வயதுப் பிள்ளைக்கு, "இந்தப் பாலைக் குடிக்க இப்ப பூனை வரப்போகுது. சுறுக்கக் குடிச்சு முடி" என்றோ, "அப்பா வாற நேரமாச்சு. காலையிலை போறபொழுது சொக்களேற் கொண்டுவரச் சொன்னனியா? வா படலையில் போய்ப் பார்ப்போம் அப்பா வாறாரோ எண்டு" என்று ஏமாற்றுக் கதை சொல்லலாம். ஆனால், இதே கதை போன்று 5 வயதுப் பிள்ளைக்குச் சொல்லித் தப்பிக்கொள்ள முடியாது. அவருக்கு "பிள்ளையின்ரை பள்ளிக்கூட விடுமுறைக்கு நாங்கள் லண்டனுக்குப் போவோம். பிளேனிலை போறது உமக்கு விருப்பமா? அங்கை போய் அரச மாளிகை, Windsor Castle, Greenwich Clock, Wimbledon, Wembley Stadium, Zoo, Thames நதி எல்லாம் பார்க்கலாம்" என்பது போல் ஏதாவது சொல்லித்தான் அவரிடமிருந்து தப்பலாம்.



இப்போதைய 7, 8 வயது அல்லது அதற்கு மேலுள்ள பிள்ளைகள் பெற்றோரிடம் எக்கச்சக்கமான கேள்விகளைக் கேட்க மாட்டார்கள். ஏனென்றால், அவர்களுக்கு ஏற்கனவே அநேக விஷயங்கள் தெரியும். ஆதலால் அதுபற்றிப் பெற்றோர் பயப்படத் தேவையில்லை. அன்றி, அவர்கள் கேட்டாலும் அக்கேள்விகளுக்குப் பெற்றோருக்கு அநேகமாக மறுமொழி தெரியாமலிருக்கலாம். ஏனெனில், இப்போதுள்ள பெற்றோரிற் பலர் பிள்ளைகளின் சுதந்திரத்தை அனுசரித்தே நடக்கிறார்கள். சிறுவரின் எண்ணக் கருக்களுக்கும் மதிப்புக் கொடுக்கிறார்கள். சிறுபிராயத்தில் இருப்பவர்களின் கருத்துக்கும் செயல்களுக்கும் அங்கீகாரம் கொடுத்து நடக்கிறார்கள். ஆதலால் அவர்களின் பிள்ளைகளின் மூளை வளர்ச்சி அபாரம் என்று சொல்லலாம்.

"விளையும் பயிரை முளையில் தெரியும்" (Child is the father of man) என்று பழமொழி இருக்கிறது. மூளையுள்ள பிள்ளையை அதன் சிறுபிராயத்திலிருந்தே அறியலாம் என்றும் கூறுவார்கள். இது எதைக் காட்டுகிற

தென்றால், பிற்காலத்தில் சமர்த்தாக வாழக்கூடிய பிள்ளையை அது சிறுவயதில் நடந்துகொள்ளும் விதத்திலிருந்தே தெரிந்து கொள்ள லாம் என்பதையே குறிக்கும். இதை முற்றிலும் சரியென்று நாம் கொள்வதற்கில்லை. முன்பு கூறியது போல் எத்தனையோ படித்த மேதாவிகள், தொழில்வல்லு னர்கள், அரசியற் பிரமுகர்கள் சிறுவயதாக இருந்தபோது மந்த மாகவும், அசமந்தப்போக்குடைய வராகவும் இருந்ததாகக் கேள்விப் பட்டிருக்கிறோம். படித்திருக்கி றோம்.

மாறாக, சிறுவயதில் மிகவும் விவேகமும் சாதுரியமும் காட்டிய பிள்ளைகள் பின்னடியில் (சக வாச தோஷத்தினாலோ, பராம ரிப்பார், ஊக்குவிப்பார் இல்லா மலோ) மூளைவிருத்தியடை யாத, வல்லமை குறைந்த, மனிதர் களாக உலவுவதையும் காண்கின் றோம். மொத்தமாகப் பார்க்கப் போனால், பிள்ளைகள் வளர்ந்து வரும்போது அவர்களின் வளர்ப் பும், வழிகாட்டலும், சுற்றம் சூழலும், பள்ளியில் சகமாணவர் களின் தராதரமும், அவர்கள் தேடிக்கொண்ட உற்றநண்பர் களும் — இப்படிப் பலவிதமான சூழ்நிலைகள்தாம் பிள்ளைகளின் பிற்காலத்தை நிர்ணயிக்கக்கூடிய அம்சங்கள் ஆகும்.

ஒரு பிள்ளையை வளர்த் தெடுக்கும்போது அதைப் பராம ரிப்பவர்கள் பிள்ளையின் மனம் நோகாமல், பிள்ளையின் மனதில் தாழ்வுமனப்பான்மை உட்புக விடாமல், சுதந்திரமாகவும் தன்னிச்சையாகவும் சிந்திக்கவும் செயலாற்றவும் பிள்ளைக்குரிய உரிமையை விட்டுக்கொடுத்து நடந்துகொண்டால் பிள்ளை நிச்சயமாக மேல்நிலைக்கு வரு வான் என்பது திண்ணம். சிறு வனும் ஒரு மனிதப்பிறவிதானே! அவனுக்கும் இதயம் இருக்கிறது. உலகத்தில் தன் எண்ணத்துக்கு வாழுவதற்கு பிள்ளைக்கு உரிமை இருக்கிறது என்பதை வளர்ந்த சமுதாயம் ஏற்றுக்கொள்ள வேண்டும். முக்கியமான அலுவல் களைச் சிறுவர்களின் எண்ணெத் துக்கு ஆற்றவிட்டால், அவர் களுக்கு அனுபவம் இல்லாதபடி யால், அக்காரியங்கள் கெட்டு விடுமே, சிலவேளை ஆபத்திலும் முடிந்துவிடுமே என்று சிலர் பயப்படலாம். அந்த நினைப்பில் தப்பில்லை! இருந்தும், சிறுவர்கள் செய்யக்கூடிய காரியங்களை, அவர்கள் செய்யவேண்டிய விஷயங்களை அவர்களையே செய்ய விட்டுப்போட்டு, செய்யு முன்பும் செய்யும்பொழுதும்கூட நின்று வழிகாட்டலாம், புத்திமதி சொல்லலாம், உதவி செய்யலாம்.

வளர்ந்தவராயினும் சரி, சிறுவராயினும் சரி, எவரும் ஒரு பொறுப்பான விஷயத்தைத் தாங்கள் செய்வதாக ஏற்றுக் கொண்டால், அதை ஏற்றிவிட்ட வரின் நம்பிக்கை வீண்போகாமல் இருப்பதற்காக, பொறுப்புணர்ச் சியுடனும் தன்னம்பிக்கையுடனும் அந்த அலுவலைச் செவ்வனே செய்யவேண்டுமெனும் உற்சாகத் துடன் செய்துமுடிப்பர். இது சிறுவருக்கும் சாலப் பொருந்தும். அதாவது, சிறுவர்கள் பொறுப்பை ஏற்றுக்கொண்டு அதை முற்றுறச் செய்துமுடிப்பது அவர்களின் தனியுரிமை. சிறுவர்களின் தரமறிந்து, அவர்களின் வல்லமைக்கேற்ப, வயதுக்கேற்ப பணிகளை ஆராய்ந்து பொறுப்புக் கொடுப்பது வளர்ந்த வர்களின் சாதுரியம்!

இலங்கையிலும் தமிழகத்திலும் வாழும் பல பெற்றோர்கள் தாங்கள் எசமானர்களாகவும் பிள்ளைகள் அடிமைகள்போலவும் நடந்துகொள்ளுகிறார்கள். தங்கள் சொல்லே வேதவாக்கு, தாங்கள் இட்டதே கட்டளை, அக்கட்டளைகளைப் பிள்ளைகள் மீறாமல், அடிமைகளைப் போல கேட்டு, ஒடுங்கி, கீழ்ப்படிவுடன் செய்து முடிக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறார்கள். பிள்ளைகள் பொம்மைகள்தாம். அவர்களுக்குச் சுயமாகச் சிந்திக்கக்கூடிய அளவுக்கு அறிவு வளரவில்லை. ஆதலால் தாங்கள் சொல்வதெல்லாம் முற்றிலும் சரியான வழிநடத்தல். சிறுவர்களுக்கு அவையெல்லாம் புரியாத விஷயங்கள். ஆதலால் சொன்னதைச் சொன்னபடி செய்துவிட்டுப் பேசாமல் இருக்க வேண்டியது! அவர்களுக்கென்று ஒரு உரிமை புறம்பாக இல்லை. அதுவும் நாங்கள் கொடுத்துத்தான் அவர்களுக்கு உரிமை வருகிறது என்று வாதாடுபவர்கள் பலர்.

கிட்டத்தட்ட எல்லா வீடுகளிலும், பிள்ளைகள் சொல்லைத் தட்டி நடந்தால் அவர்களுக்கு அடி விழும் அல்லது வேறு தண்டனை கிடைக்கும். அடி விழும் என்ற பயத்தினால் தாங்கள் விரும்பிய காரியத்தை முடிக்காமல் விட்ட சிறுவர்களைக் காண்பது அரிது. அதாவது, அடி அல்லது தண்டனை கிடைத்ததால் திருந்தி நடந்த பிள்ளைகளையோ, தண்டனைக்குப் பயந்து தமது வாழ்க்கை நெறியை மாற்றிக்கொண்டு வளர்ந்த சிறுவர்களையோ நாமறியோம்.

பிள்ளைகளை வளர்க்கும் விஷயத்தில் மேல்நாட்டார் உளவளரீதியாக ஆராய்ச்சிகள் செய்து பல புத்திஜீவிகளைக் கலந்தாலோசித்து முடிவுகள் எடுத்து, குழந்தை வளர்க்கும் முறைகளைப்பற்றிப் புத்தகங்களிலும், பத்திரிகை வாயிலாகவும் மக்களுக்கு அறிவுரை வழங்கியிருக்கிறார்கள். குழந்தைகளை இம்சைக்கு உள்ளாக்கக் கூடாதென்று பிரசாரம் செய்கிறார்கள். இந்த முயற்சியில் பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த (Madame Montessouri) மொன்றசூரி அம்மையார் முன்னோடியாக எழுதிவைத்த புத்தகம் ஒன்று பிள்ளைகள், சிறுவர்களின் உலகத்தில் ஒரு பிரளயத்தையே உண்டாக்கிவிட்டது எனலாம். பிறந்தது முதல் குழந்தை வளர்ந்து வரும் ஒவ்வொரு பருவத்திலும் அதன் மூளை வளர்ச்சி, உடல் வளர்ச்சி, விஷயங்களைக் கிரகித்துக் கொள்ளும் தன்மை, அதன் விருப்பு வெறுப்புகள், அதன் உரிமைகள், சமுதாயத்தில் அதற்குக் கொடுக்க வேண்டிய ஸ்தானம், சுயசிந்தனைக்கு இடமளிக்க வேண்டிய தன் அவசியம், இன்னும் உளவளரீதியாக எத்தனையோ விஷயங்கள் அம்மையாரது புத்தகத்தில் பொதிந்துகிடக்கின்றன.

சில ஆண்டுகளுக்கு முன்னர் மேற்குநாடுகளில் பிள்ளை வளர்ப்புப் பற்றியும் பிள்ளைகளின் உரிமைகள் பற்றியும் சட்டங்கள் இயற்றி, அச்சட்டங்களை முறையாகக் கடைப்பிடித்தும் வருகிறார்கள். அதாவது, பிள்ளையை ஏசக்கூடாது, அவர்களை அடிக்கக் கூடாது, குற்றம்செய்தாலும் தண்டிக்கக்கூடாது, குடும்பத்தில் அவர்களுக்கு உரிமையானவைகளை அவர்களிடமிருந்து கவரக் கூடாது என்று இவ்வாறு பிள்ளைகள் உரிமைகள் பற்றி நிறையச் சட்டங்கள் வகுத்திருக்கிறார்கள். உதாரணமாக, பிள்ளைகளைப் பெற்றோர் கண்டிக்கிறார்கள்,

தண்டிக்கிறார்கள் என்று பொலிசுக்குத் தெரிந்தால் போதும் அது பற்றி விசாரிப்பதற்கு உடனே பொலிஸ்காரர் வீட்டுக்கு வந்து விடுவார். பிள்ளைகள் கடுமையாகத் தண்டிக்கப்பட்டிருந்தால் பொலிஸுடன் பிள்ளையைக் கூட்டிக் கொண்டு போய்விடுவார்கள். பின்னர் சில காலத்துக்குப் பெற்றோர் தங்கள் பிள்ளையென்று உரிமை கொண்டாட முடியாத படி அரசாங்கப் பாதுகாப்பிலேயே பிள்ளை வளரும்.

சிறுவர்களை ஏசும்பொழுதோ தண்டிக்கும்பொழுதோ அவர்கள் மனதில் ஒரு சோர்வு உண்டாகும். தாழ்வுமனப்பான்மை அவர்களுடன் கூடவே வளர்ந்து கொண்டு வரும். "அவர்கள் பெரியவர்கள், நான் சிறியனான், என்னால் ஒரு அலுவலும் சரியாகச் செய்ய முடியாது. அதனால்தானே எல்லாரும் என்னில் பிழை பிடிக்கிறார்கள். நாம் மெல்ல ஒதுங்கிப் போவோம். அவர்கள் தெரிந்தவர்கள் செய்து முடிக்கட்டும். எனக்குத்தான் ஒரு உரிமையும் இல்லையே!" என்ற மனக்கவலையும், எதிலும் தலையிடுவதற்குக் கூச்சமும், தன்னில் நம்பிக்கையீனமும் அந்தப் பிஞ்சு மனதில் ஏற்படும். சிறுவயதில் ஏற்பட்ட அந்த வடு பின்னர் அவன் வளர்ந்து பெரிய ஆளாகியும் தாழ்வுமனப்பான்மையாகப் பரிணமித்து அவனை முன்னேற விடாது.

கீழைத்தேசங்களில் சிறுவர்களுக்குரிய மதிப்பும் மரியாதையும் பெரியவர்கள் கொடுப்பதில்லை. பெரியவர்கள் சொன்னால் அதைத் தட்டக்கூடாது, மறுவார்த்தை பேசக்கூடாது, எதிர்ப்புச் சொல்லக்கூடாது என்பது ஒரு எழுதாத சட்டம். மேலை நாடுகளிலோ அப்படியில்லை. பெற்றோர் பிள்ளைகளுக்குச் சொல்வதை அன்பாகத் தான் சொல்லுவார்கள். பிள்ளை சிலவேளை சொன்னபடி நடப்பான். சிலவேளை பெற்றோர் சொல்வதை



ஏற்றுக்கொள்ளமாட்டான். மாற்றுக்கதை சொல்லுவான். அதற்காகப் பெற்றோர் கோபிக்க மாட்டார்கள். இன்ன இன்ன மாதிரி இருக்கிறது, ஆதலால் தான் அப்படி என்று சொன்னோம் என்று விஷயத்தை விரிவாக விளக்கி, பிள்ளையின் மனதில் அவர்கள் சொன்னதை ஏற்றுக் கொள்ளச் செய்வார்கள். மாறாக, பிள்ளை சொன்னதில் ஏதாவது உண்மை இருந்தால், பெற்றோர் அதை ஏற்றுக்கொண்டு, தாங்கள் கட்டளை இடுவதைத் தவிர்த்துக் கொள்வார்கள். பிள்ளைக்கு அதனால் தன்னம்பிக்கை கூடும். பிள்ளைகள் அடம்பிடித்தால் அதற்கு விட்டுத்தான் பிடிக்க வேண்டும்.

பிள்ளைகளை அன்பாக வளர்க்கவேண்டும். அவரவர்களின் உரிமைகளைப் பேணி நடக்கவேண்டும். அவர்களை எக்காரணங்கொண்டும் தண்டிக்கக் கூடாது. ஆனால், அவர்களுக்கு அதிக செல்லம் கொடுத்து அவர்களின் பின்னடி வாழ்க்கையைப் பாழடிக்கக்கூடாது. சிறுவர்களின் உரிமைகள்தாம் என்னென்ன? என்ற கேள்விக்கு எல்லோருக்கும் (எனக்கும்தான்) பதில் சொல்லத் தெரியாது! அது ஓர் எழுதாத நடைமுறைச் சட்டம்!

குழந்தைகள் வாழ்க!  
உரிமைகளுடன் வளர்க!!  
உயர் வாழ்வு வாழ்க!!

## புதுக்குறள்

மக்களெலாம் ஒன்றாகக் கூடி மகிழ்வதற்குத்  
தக்கவிடம் கோயில்க ளாம்.

கோயிற் பொதுவிடமாய்க் கொண்டு கலைவளர்ப்பார்  
ஆயின் அதுநல மாகும்

ஊரில் அறம்பரப்பி ஒற்றுமை நீர்பாய்ச்சின்  
ஆருக்கும் கோவில் நலம்

கல்வி நிலையமும் கைத்தொழிற் சாலைகளும்  
நல்லபல கோவில்க ளாம்நாடு மொழி பேதம்

நவில்வதுமே ஒற்றுமைக்குக்  
கேடுசெயும் நஞ்சரவ மாகும்

ஓர்மரத்தில் பல்கிளைகள் ஓங்கி வளர்வதுபோல்  
பார்ஒன்று நாடுபல வாம்.

சாமி சிதம்பரனாரின் புதுக்குறள் என்ற நூலின் கோயில்கள் என்னும் அதிகாரத்திலிருந்து சில பகுதிகள் இங்கே தரப்பட்டுள்ளன.



# இசையின் மகத்துவமும் மருத்துவமும்

கு.கிட்ணர்

இசை மட்டும் இல்லாமலிருந்தால் நாம் இன்றும் மிருகங்களாகவே இருந்திருப்போம் என்று சொல்வார்கள்.

இசை நம்மை மென்மைப்படுத்தியது, நம் கோபங்களைப் போக்கியது, வலிகளைக் குறைத்தது, மனதை அமைதிப்படுத்தியது.

செடி, கொடிகளை ஆரோக்கியமாக வளர்க்கக்கூட இசை உதவுகிறது.

கருவில் இருக்கும் குழந்தை கூட, தொடர்ந்து இசை கேட்டு வந்தால், பிற்காலத்தில் இசையில் ரசனை கூடிய ஒருவராக வளரும் வாய்ப்புகள் அதிகம் என்று கண்டுபிடித்துள்ளார்கள். அத்துடன் சிசேரியனைக்கூட சுகப் பிரசவமாக்கும் தன்மை இசை மருத்துவத்திற்கு உண்டாம். சுகப் பிரசவம் நிகழ இசையை ஒரு கருவியாகப் பயன்படுத்த முடியுமென்று டாக்டர்கள் சொல்கிறார்கள்.

இசையால் மழையைக்கூட பொழிவிக்க முடியும் என்று சில ஆராய்ச்சிகள் மூலம் கண்டுபிடித்திருக்கின்றார்கள். மழை வருவதற்கும், பயிர் விளைவதற்கும் கூடக் குறிப்பிட்ட இசைகள் பரிந்துரைக்கப்படுகின்றன. "அமிர்தவர்சினி" ராகம் பாடினால் மழை வரும் என்பார்கள். அதற்குமுன் "மேக ரஞ்சனி" ராகம் பாடி மேகத்தைக் கூட்டுவிக்க வேண்டுமாம். (அந்தக் காலத்தில் யாழ்ப்பாணத்தில் மழை வேண்டி "கொடும்பாவி" கட்டி ஒப்பாரி சொல்லி அழுதால் உடன் மழை பொழிந்த சந்தர்ப்பங்களையும் அனுபவ ரீதியாகக் கண்டிருக்கின்றோம்.)

குறைப்பிரசவத்தால் எடைக் குறை ஏற்படும் குழந்தைகட்கு இசை வைத்தியம் அளித்தால் 10 தினங்களில் எடை அதிகரிக்கும் வாய்ப்புகள் உண்டாம்.

ஊசி, மருந்து மாத்திரைகள் போல், இசை மருத்துவமானது எதிர்விளைவுகள் (Side effects) அற்ற மாற்று மருத்துவமுறை யாகக் கருதப்படுகிறதென்றால் மிகையாகாது.

மேலும் தாயின் தாலாட்டுப் பாடல் குழந்தையைத் தூங்க வைப்பதும், களைப்படைந்த விவசாயிகளை உற்சாகமூட்டவும், களைப்பை மறக்கவும் நாட்டுப் பாடல்கள் (Folk Songs) பாடப் படுவதும் நாம் அறிந்த விடயங்களே.

தகுதி பெற்ற இசை வல்லுனர்களினால் வெளிப்படுத்தப்படும் ஆரோக்கியம், கல்வி சம்மந்தமான இசையானது உடல், உள சமுக அறிதல் செயற்பாடுகள் பாதிக்கப்பட்ட நபர்களின் நிலைமையைக் குணப்படுத்தவும் பயனளிக்குமென வைத்திய நிபுணர்கள் கூறுகின்றார்கள்.

அமெரிக்க இசை மருத்துவக் கழகத்தின் கூற்றின்படி இந்த 20ம் நூற்றாண்டின் இசை மருத்துவச் சிகிச்சை முறையானது முதலாம் உலக யுத்த முடிவின் பின்னோடியாக அமைந்ததாம். உடல், உள ரீதியாகப் பாதிக்கப்பட்ட போர் வீரர்களின் மனஅதிர்ச்சியைக் குறைக்கும் நோக்கில் இசைக் கலைஞர்கள் இசைக்கருவிகளை வாசித்தார்களாம். ஆனால் வயலின் மேதை, குன்னக்குடி வைத்தியநாதனின் எண்ணக் கருவின் பிரகாரம் இந்தியாவில் இசை மருத்துவமானது, வேதகாலம் தொடக்கம் பாவிக்கப்பட்டுள்ளதாம். அத்துடன் இசை மருத்துவ முறை பற்றி "சாந்தோக்ய உபநிஷதம்" மற்றும் "ப்ருக தாருண்ய" உபநிஷதம் போன்ற மிகப் பழமையான நூல்களில் கூடக் குறிப்புகள் இருக்கின்றன.

உலகில் முதன்முதலாக இசை மருத்துவத் துறையில் பட்டதாரி கல்வியானது, அமெரிக்காவின் மிச்சிக்கன் மாநிலப் பல்கலைக் கழகத்தில் 1944இல் அறிமுகப் படுத்தப்பட்டது என்றும், இந்தியாவில் அண்மைக்காலத்தில் தான் இசைமருத்துவம் அதி விசேட (Super Speciality) அப்பலோ மருத்துவமனையில் இத் துறை ஆரம்பிக்கப்பட்டதெனவும் அறியக்கிடக்கின்றது.

இந்தியாவின் அப்பலோ மருத்துவமனையின் இசை மருத்துவத் துறையின் பணிப்பாளராகக் கடமையாற்றும் டாக்டர் மைதிலி என்பவர் கூறுவதாவது "ஓட்டிசம், தெத்திப்பேச்சு பிரச்சனைகளால் பாதிக்கப்பட்ட பெண்கள், பிள்ளைகள் இசை மருத்துவத்தை நம்பிக்கையுடன் மேற்கொண்டு வருகின்றார்கள்."

மனச்சோர்வு (Depression) போன்ற நடத்தைப் பிரச்சனைகள் (Behavioural modifications) உள்ளவர்களும் இசைமருத்துவத்தை தனியாகப் பயன்படுத்துகிறார்கள்.

அத்துடன் பெண்களின் பிரசவ வேதனையைத் தணிக்கும்



பொருட்டும், சுகப்பிரசவம் நடப் பதற்கும் பிரசவஅறையில் (Labour Room) இனிமையான இசை வழங்கப்படுவதாகவும் கூறுகிறார் டாக்டர் மைதிலி அவர்கள்.

Stroke வந்து பேசமுடியாமல் இருப்பவர் கட்டும் இசையானது அவர்களைப் பேசவைக்கும் சக்தி படைத்துள்ளது என்றும் அத் துடன் இந்நோய் காரணத்தால் நடக்கமுடியாமல் கஷ்டப்படுப வர்க்கும் சில குறிப்பிட்ட இசைகள் பாடப்பட்டால் அவர்களை நடக்கத் தூண்டுமாம்.

ஒற்றைத்தலைவலி, (Migrane) தூக்கமின்மை, குழந்தை படிப்பில் கவனமின்மைக்கும், இசை வைத் தியம் நிவாரணமாக அமைய லாம் என டாக்டர்கள் கூறுகிறார்கள்.

மேலும் வயலின் மேதை குன்னக்குடி வைத்தியநாதனின் நேரடி அனுபவம் பற்றிப் பார்ப் போம். அவரது 15ம் வயதில் தந்தையார் நோய்வாய்ப்பட்டு (கோமா) நிலைக்குப் போய் விட்டார். டாக்டரின் பணிப்பு ரைக்கு அமைய அவர் தந்தை யார் பக்கத்தில் இருந்து மணிக் கணக்காக பைரவி இராகத்தை உருக்கமாக வயலினில் வாசித் தார். நோயாளரான தந்தையார் மெல்லமெல்ல உணர்ச்சி பெற் றுக் குணமடைந்து மேலும் ஒரு தசாப்தகாலம் வாழ்ந்திருந்தாராம்.

மனஒருமைப் பிரச்சனையில் (Concentration Problem) வாழுகின்ற மாணவர்களும் இசை மருத்து வத்தின் நன்மையின் பயனாக, அவர்களுடைய படிப்பில் போற்றக் கூடிய திருப்பத்தை அடைந்துள் ளார்கள் எனவும் கூறப்படுகிறது.

மாத்திரை மருந்துகளுடன், இராகங்கள் மனஅழுத்தத் திற்கும், இரத்தஅழுத்தத்திற்கும் மருந்தாக அமையக்கூடிய வாய்ப்புக்கள் உண்டாம்.

வயலின் மேதை குன்னக்குடி வைத்தியநாதன் அவர்கள் மேலும் கூறுகையில், "சங்கராபரணம்" மனநோய்களையும், "ஆனந்த பைரவி" இரத்தஅழுத்தத் தையும், "பிலகரி" வயிற்றுப் பிரச் சனைகளையும் தீர்க்க வல்ல தென ஆராய்ச்சிகள் நிரூபித்திருப் பதாகவும் அடித்துக் கூறுகிறார்.

அத்துடன் "கல்யாணி" துணிவை யூட்டுவதற்கும், "கரகரப்பிரியா" மனச்சோர்வை மாற்றுவதற்கும், "சன்முகப்பிரியா" சக்தி வன் மைக்கும் சிறந்த ஔடதமாகத் திகழ்கின்றன என்றும் கூறு கிறார்.

மேலும் ஓட்டசம், அல்ஸ் கேமர், பார்க்கின்சன் நோய்கள் ஆகியன வற்றிற்கும் இந்தியாவில் இசை மருத்துவம் துன்ப நிவாரணியாகப் பாவிக்கப்பட்டு வருகிறது. இச் சிகிச்சை முறையின் நன்மைகளை கருத்திற் கொண்டு இந்தியாவில் சில மருத்துவ மனைகளில் இத் துறைக்கென விசேடப் பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

மேலே தரப்பட்டுள்ள கூற்றுக் கள் இலங்கை, இந்திய செய்தித் தாள்களில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட் டுத் தொகுக்கப் பட்ட விடயங்கள் ஆகும் என்பது குறிப் பிடத்தக்கது.




# உயிரெழுத்துக்களின் ஒலி...

எந்த மொழிக்கும் இல்லாத பல சிறப்புகள் நம் தாய்மொழியாகிய தமிழுக்கு மட்டுமே உள்ளது. அவற்றில் ஒன்று அ, இ, உ, எ, ஒ என்ற ஐந்து உயிரெழுத்துக்களும் உதடுகளால் மட்டுமே ஒலிக்கக் கூடியதாக அமைந்திருப்பது. இதை ஒலிக்க தொண்டை, நாக்கு, பற்கள் முதலிய எதன் உதவியும் தேவையில்லை. இரண்டு உதடுகளைத் திறக்கும் போதே "அ" அவ்வுதடுகளைச் சுருக்கும் போதே "உ" அதை அப்படியே உயர்த்தும் போதே "எ" இரண்டு உதடுகளையும் அகற்றி இழுக்கும் போது "இ" என்ற ஒலிகள் உண்டாகி விடுகின்றன. இந்த இரண்டு உதடுகளும் இவ்வாறுதான் அசைய முடியும். வேறு வகையாக அசைக்க முடியாது. நீங்கள் வேண்டுமானால் முயன்று பார்க்கலாம்.

இந்த உதட்டு அசைவையே உயிர் ஒலியாகக் கொண்டு அதற்கு உயிர் எழுத்துக்களை அமைத்த தமிழ்ச் சான்றோர்களது ஆற்றல் எண்ணி, எண்ணி வியக்கக் கூடிய ஒன்று.

---

**கி.ஆ.பெ. விசுவநாதம் அவர்களின் மாணவர்களுக்கு என்ற நூலிலிருந்து ஒரு பகுதி.**


PARK VIEW MEDICAL CENTRE
26/12-16 Toongabbi-e Road,
Toongabbie, NSW - 2146
Emergence
Women's Health
Antenatal Care
Minor Surgery
Pathology Blood Tests
Worker's Compensation
In House Physiotherapy
X-Ray Services
(Open 7 Days Next Door)
ECG
Child Health
Immunisation
Strees Management
Allergey Tests
Dr. Jey Chandran
Dr. Shanthini Seelan, Dr. Thava Seelan,
Dr. Lumina Titus
Opening Hours : Mon - Fri ......... 8.00 am - 8.00 pm & Sat ........ 9.00 am to 4.00 pm
Phone : 02 9636 7757
Bulk Billing Open 6 Days


அவுஸ்திரேலியா - சிட்னியில்
ஈழத்து எழுத்தாளர் சிசு. நாகேந்திரனின் எழுதிய
அந்தக்காலத்து யாழ்ப்பாணம்
வாசித்து விட்டீர்களா?
இல்லை எனில்...
இந்த
அரிய நூலினை
வாங்கி வாசித்துப்
பயனடைய வேண்டுகிறோம்.
தொடர்புகொள்ள:
(03) 9544 5063
0412 313 010




Made by : Mithra, Chennai - 24. Ph : 91 44 23723182